


A
K
I
Y AKI
NLB
B22939898F
ColorMarq RC07-30M10 28/07/2010

## பதிப்புரை

ஆசிரியரின் 15வது படைப்பாகும் இந்நூல். வாசகர்களின் அமோக வரவேற்பைக் கண்டு மனமகிழ்ந்தோம்.

வாசகர்களின் எண்ணத்தை ஈடு செய்யும் வகையில் ஆசிரியர் மிக மிக விறுவிறுப்பாகவும், அனைவரையும் படிக்கத் தூண்டும் ஆவலையும் ஏற்படுத்தும் வகையில் இந்நூலை எழுதியுள்ளார்.

இந்நூலை அழகுற அச்சுக்கோப்பு செய்த வேலன் லேசா அவர்களையும் உதயம் ஆப்செட் அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

- பதிப்பகத்தார்

# தோகை இளம் மயில்...




வீட்டை விட்டுக் கிளம்பும்போதே உற்சாகமாய்த்தான் கிளம்பினாள் வாணி.

கிளம்பும்போது மாலினி அடித்த கூத்தை இப்போது நினைத்தாலும் அவளுக்கு சிரிப்புதான் வருகிறது. உள்ளிருந்து ஆவலாய் ஓடி வந்த அண்ணி மாலினி, ''ஒரு நிமிடம் வாணிக் கண்ணு...'' என அவள் தோள்களைப் பற்றி உரிமையுடன் திருப்பி, ''இரு... இந்த ஐ லைனரை வைத்து உன் புருவங்களை இன்னும் கொஞ்சம் டச் பண்ணி விடுகிறேன். அப்படியே அந்த கண் இமை

களுக்கும் ஒரு இழுப்பு, அப்புறம் உன் பார்வை அப்படியே மைவிழிப்பார்வையாகி விடும். சும்மாவே ஜொலிக்கும் உன் அழகு. அந்த அபார பார்வை வீச்சு வந்ததும் தக தகக்க ஆரம்பித்து விடும். என் மைத்துனி இப்படி அழகு ரதியாய் இருக்க வேண்டும் என நான் ஆசைப்படுவது தவறா... நீயே சொல்லு...?'' என்றபடி நிஜமாகவே மாலினி அவள் முக அழகை டச் செய்ய ஆரம்பிக்க சிணுங்கத்தான் செய்தாள் வாணி.

''ஐயோ... அண்ணி, நான் ஒன்றும் காலேஜ் செல்லும் குமரி இல்லை. பொறுப்பாய் ஒரு அலுவலக வேலைக்குச் சென்று கொண்டிருப்பவள். இந்த ஒப்பனை, இந்த அழகு எனக்குப் போதுமே!'' என்றாலும் விடமாட்டாள் அண்ணி.

''அட.. வேலைக்குச் செல்பவள்... என்றால் இளக்காரம் ஒன்றும் இல்லையே..! சொல்லப் போனால்.. இப்படித் தான் அழகு தேவதை போல் பளிச்சென இருக்க வேண்டும். அப்போதுதானே அலுவலகத்திற்கு வருகிற நாலு பேருக்கு. இங்கு ஒரு ராஜகுமாரி உட்கார்ந்து வேலை பார்க்கிறாள் என்ற அதிசயமான விஷயமும் தெரிய வரும். என்ன நான் சொல்வது சரிதானே?'' என தனது நீள முகத்தை மேலும் கீழும் ஆட்டியபடி சீரியஸாக அண்ணி பேசும்போது வாணிக்கு வியப்பை அடக்க சிரமமாகவே இருக்கும்.

இப்படி ஒரு அண்ணி இருப்பாளா... இல்லை... கிடைக் கத்தான் செய்வாளா? அன்பை, பாசத்தை மைத்துனி மேல் டன் டன்னாகக் கொட்டிக் கொண்டு.. திரைப் படங்களில், நாடகங்களில் சொல்வது போல் அடிக்கடி வாணியை தனது செயல்களால் புல்லரிக்கத்தான் செய்து விடு வாள்!



ஆரம்பத்தில் அண்ணன் சுகேசனுக்கு தாயார் பெண் பார்க்க ஆரம்பித்தபோது முதலில் பயந்தவள் வாணிதான். மணப்பெண்ணாய் வரப் போகிறவள் எப்படியோ.. என்ன குணமோ? தன்னிடம் எப்படி நடந்து கொள்வாள்? அதை விட நம் சிடுமூஞ்சி அண்ணனின் சுபாவத்தை சகித்துக் கொள்வாளா? என்றெல்லாம் பெரும் கவலை ஓடிற்று.

தாயார் கற்பகம்தான் அவள் பயத்தைப் போக்கும் விதமாய், ''நீ ஒன்றும் கவலைப்படாதே கண்மணி. எல்லாம் நல்லபடியாக நடக்கும்'' என்றதும் 'அடாடா தாயாரை மறந்து விட்டோமே... வரப்போகிறவள் முக்கிய மாய் நோய்களால் உடல் தளர்ந்து மெலிந்திருக்கும் தன் தாயாரை கவனித்துக் கொள்ள வேண்டுமே? தாயாரிடம் அன்பாய் நடந்து பணிவிடைகளை செய்ய வேண்டுமே? முகம் சுழிக்காமல் செய்வாளா?'

வாணி உள்ளூர பயந்தாலும் தாயாருடன் சென்று மாலினியை பெண் பார்க்கும்போது அவள் புன்னகை முகம் கண்டு பயம் நீங்கினாள்.

மாலினி மாநிறத்துடன் சுமாரான அழகுடன் விளங்கி னாலும் அடிக்கடி அவள் சிரிக்கும் பாங்கு, அந்த புன்னகை சுபாவம் வாணியை வெகுவாய் கவர்ந்தது.

அப்போது அவளுக்கு ஒரு புத்தகத்தில் படித்த விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அடிக்கடி சிரிப்பவர்கள் இயல்பாகவே புன்னகை புரியும் வழக்கம் கொண்டிருப் பவர்கள்... நிச்சயம் அதிகம் கோபப்படாதவர்களாய்த்தான் இருப்பார்கள் என்று அந்த புத்தகம் கணிப்புத் தெரிவித் திருந்தது.

அதனாலே அந்த ஒரே காரணத்திற்காகவே சம்மதம் சொன்னவள் அண்ணனிடமும், ''நல்ல.. புன்னகை முகம். நீ தைரியமாகக் கட்டலாம்...'' என மாலினிக்காக ஸ்பெஷல் சிபாரிசும் செய்தாள்.

அவள் நினைத்தபடியே மாலினியை சுகேசனுக்கும் பிடித்துப் போக அடுத்த மாதமே கல்யாணமும் நடந்தேறியது.

மாலினியும் மாட்டுப் பெண்ணாய் குடி புகுந்து விட்டாள். வாணி, சுகேசன் அன்புத் தாயார் கற்பகம் என சிறு குடும்பமாய் ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஓட்டு வீட்டில் வாழும் நடுத்தர வாழ்க்கை அவர்களது.

சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயின் அரவணைப்பிலே வளர்ந்தவர்கள்தான் வாணியும் சுகேசனும். கற்பகம்தான் ஓடியாடி நாலு வீடுகளில் வேலை பார்த்து, பத்துப் பாத்திரம் தேய்த்து கஷ்டத்துடன் கஷ்டமாய் அவர்களைப் படிக்க வைத்தாள்.

ஒருவாறு இருவரும் டிகிரி படிப்பு வந்ததும் முதலில் படிப்பை முடித்த சுகேசன் தீவிரமாய் வேலை தேடி ஐயாயிரம் ரூபாய் சம்பளத்தில் ஷிப்பிங் கம்பெனி ஒன்றில் சேர்ந்து விட்டான். அடுத்து படிப்பை முடித்த வாணியும் ஒரு மென்பொருள் கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலை தேடிக் கொண்டாள்.

இருவரும் சம்பாதிக்க ஆரம்பித்ததும் முதல் வேலையாய் கற்பகத்தை வீட்டில் உட்கார வைத்து ஓய்வெடுக்க வைத்தனர். காலங் காலமாய் தங்களுக்காக உழைத்து ஓடாய் தேய்ந்து விட்ட தாயின் மெலிந்த உருவத்தைக் கண்டு உள்ளத்தில் கண் கலங்க உருகினர்.



மருத்துவரிடம் காட்டியபோது தினம் உட்கொள்ள வேண்டிய மருந்து, மாத்திரைகள் என ஒரு பெரிய லிஸ்ட்டையே நீட்டினார் அவர். இருவரும் வேலைக்கு வேறு போவதால் தாயாரை மற்ற நேரங்களில் கவனிக்கவாவது ஒரு நல்ல பெண் துணை வேண்டுமென நினைத்து வாணிதான் சுகேசனை கல்யாணத்திற்கு வற்புறுத்தினாள்.

சுகேசனுக்கு இயல்பிலிருந்தே சிடுமூஞ்சி சுபாவமும் முன்கோபமும் ஜாஸ்தி. சிரிக்க காசு கேட்பவன் போலத்தான் எப்போதும் முகத்தை உர்ரென வைத்துக் கொண்டு இருப்பான். அதனாலேயே வாணி சிறு வயதில் அடிக்கடி, ''அண்ணனை இப்போது சிரிக்க வைக்கிறேன் பார்'' என அம்மாவிடம் பத்து ரூபாய் பெட் கட்டி கூட விளையாட்டு விளையாடுவது உண்டு.

அந்த விளையாட்டில் கூட, விளையாட்டுக்காக கூட சிரிக்க மாட்டான் சுகேசன்.

''போ... நீ! உனக்கு வேறு வேலை இல்லை...?'' என எரிந்துதான் விழுவான்.

வாணிக்கும் அவனது அந்த 'சிடுசிடுத்தனம்' பழகிப் போய் விட்டதால் எரிச்சல் படுவதற்குப் பதில் அதைக் கண்டு ரசிக்கவே செய்தாள்.

அதனாலே அடிக்கடி சிரிக்கும் புன்னகை முகமான மாலினியைப் பார்த்ததும், ''இவள்தான் உனக்கு சரியான பொருத்தம்...'' என குரல் உயர்த்தி சுகேசனை சம்மதிக்கச் செய்து கட்டியும் வைத்தாள்.

அவள் நினைப்பு கொஞ்சமும் வீண் போகவில்லை. மாலினி புன்னகை முகம் மட்டும் காட்டவில்லை.

அன்பைப் பொழியும் அன்புச் சுரங்கமாக ஏறக்குறைய மாறியிருந்தாள்.

கணவன் சுகேசனை, தாயார் கற்பகத்தை, வாணியை என எல்லோரையும், விழுந்து விழுந்து கவனித்தாள். அதிலும் வாணியிடம் ஒரு படி மேலே போய் அவளுக்கு உடன் பிறவா சகோதரியாகவே ஆகிவிட்டாள்.

அவளுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதும், சீண்டி விளையாடுவதும், கூட்டிக் கொண்டு ஊர் சுற்றுவதும் அவளை உட்கார வைத்து அழகுபடுத்துவதும் ரசிப்பது மாய் நல்ல தோழி போலவும் ஆகிவிட்டாள்.

அம்மா கற்பகத்துக்கே ஒரே ஆச்சரியம்தான்! "கண்ணு, நீ நினைச்ச மாதிரியே அன்பான மருமக வந்திருக்கா. சுகேசனையும் நல்லா கவனிச்சுக்கிறா. என்னையும் நல்லா பார்த்துக்கிறா. நாம கொடுத்து வைச்சிருக்கோம்!" என நிஜமாகவே சொல்லிச் சொல்லி புளகாங்கிதம் அடைந் தாள்.

ஆனால் சுகேசன்தான் மாறவில்லை. அப்படியேதான் இருந்தான். கல்யாணத்திற்கு முன் இருந்த அதே சிடு சிடுத்தனம் கொஞ்சமும் மாறவில்லை. அண்ணி மாலினி சிரிக்கச் சிரிக்க பேசினாலும் அவன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

வாணி அதற்குத்தான் ரொம்பவும் கவலைப்பட்டாள். இப்படிக் கலகலப்பான ஒருத்தி மனைவியாய் வந்தும் தன் சுபாவத்தை கொஞ்சமும் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறானே? என வருந்தினாள். கூடவே அவனது சிடு சிடு சுபாவத்தை மாலினி உணர்ந்து அவள் அவன் மீது வெறுப்பு கொண்டிரக்கூடாதே என்ற பயமும் ஏற்பட்டது.



ஆனால் மாலினி வந்த ஒரே வாரத்திலேயே சொல்லி விட்டாள். "அவர் உன் அண்ணன் சிறு வயதில் இருந்தே இப்படித்தானாமே...? அதிகம் பேச மாட்டாராம். கொஞ்சம் கோபக்காரராம்..." என்று சொல்லவும் வாணி பதறித்தான் அவளைப் பார்த்தாள்.

"இதெல்லாம் யார் சொன்னார்கள்?" என்றாள் அதே பதட்டத்துடன்.

மாலினியோ புன்னகைத்தபடி, "வேறு யார்? உன் அண்ணன்தான் சொன்னார். அது, அப்படி இருப்பது அவர் சுபாவமாம். நான் பழகிக் கொள்ள வேண்டுமாம்..." என்றவள் அதே புன்னகையை பெரிதாக்கியபடி, "சரி... நானும் பழகிக் கொள்கிறேன்... என்று சொல்லி விட்டேன். சரிதானே வாணி?" என நகைச்சுவையை ரசிப்பது போல் சிரித்தாள்.

வாணியும், நல்லவேளை இவள் அண்ணனைப் புரிந்து கொண்டாள். அப்படியே ஏற்றுக் கொண்டாள் எனவும் நிம்மதியடைந்தாள்.

அதனாலே அவளுக்கு மாலினி மீது அதீத அன் பொன்று ஏற்பட்டு அளவற்ற பிரியமாய் வளர்ந்தது. மாலை அலுவலகம் முடிந்து வருகையில் அண்ணிக் கென எதாவது உணவுப் பதார்த்தங்கள், பொட்டு, ஜிமிக்கி என ஜிகினா அயிட்டங்கள் வாங்கி வந்து ஆர்வமாய் கொடுப்பாள்.

ஆனால் மாலினியோ, "அட.. என்னை நீ கவனிப்பது இருக்கட்டும். உன்னை நான் எப்படி கவனிக்கிறேன்... பார்..." என வரிந்து கட்டிக் கொண்டு அவளை அன்பில் உபசரிப்பில் திணறடிப்பாள்.

மாலை களைத்து திரும்புபவளுக்கு ரெடியாய் அவளுக்குப் பிடித்தமான பாதாம் அல்வாவை செய்து கொடுத்து அசத்துவாள். அண்ணன் செலவுக்காக அவளுக்கு கொடுக்கும் பணத்தை மிச்சம் பிடித்து அழகான சேலை ஒன்றை வாணிக்கு எடுத்து பரிசளிப்பாள்.

வாணி வானம் வரை குதிக்காத குறையாய் புளகாங்கிதம் தான் அடைவாள். அவளுக்கும் மாலினி மீது இனம் புரியாத அபரீதமான அன்பொன்று எழுந்து அவளை திக்கு முக்காடத்தான் வைக்கும்!




வாணி அண்ணியைப் பற்றிய நினைவுகளில் மூழ்கியவாறு இயந்திரத் தனமாய் பஸ்ஸில் ஏறி இறங்கி தான் வேலை பார்க்கும் மென்பொருள் கம்பெனியில் நுழையும் போதுதான் உணர்வுக்கு வந்தாள்.

உள்ளே நுழையும் போதும் மாலினி சொன்ன, 'இங்கு அலுவலகத்தில் ஒரு ராஜகுமாரி உட்கார்ந்திருக்கிறாள் என்பது நாலு பேருக்குத் தெரிய வேண்டாமா?' என்பது ஞாபகம் வர அவளையறியாமல் இதழ்களில் புன்னகை பூத்து மறைந்தது.

அதற்கேற்றாற் போல், ''வந்தனம் ராஜகுமாரி...'' என அசரீக் குரல் ஒன்று கேட்க திடுக்கிட்டுத்தான் திரும்பிப் பார்த்தாள்.



புதியதாய் அலுவலக மேனேஜராய் வந்திருக்கும் உதயசந்திரன் பற்கள் அனைத்தையும் காட்டி இளித்தபடி,

'வர.. வர... இவன் போக்கே சரியில்லையே..' என நினைத்த தனது நினைப்பு உறுதிப்படுத்தப் பட்டது போல் அவனை உறுத்துப் பார்த்தாள்.

''என்ன சொன்னீகள்...?'' என்றாள் சரியாக விழாதது போல்.

''காதில் விழவில்லையா...? ராஜகுமாரி என்று சொன்னேன். உன் அழகை வர்ணித்தேன்...''

''ராஜகுமாரியா?''

''இந்த அலுவலகத்தில் அதிகப்படியான அபார அழகுடன் என் கண்களுக்குத் தெரிவது நீ ஒருத்திதான். அதனாலே இப்படியொரு பட்டம் சூட்டி அழைக்கிறேன். அதில் தவறு ஒன்றும் இல்லையே ராஜகுமாரி?''

மறுபடியும் திரும்பி அவனை ஒரு முறைப்பு பார்வை பார்த்தவள், ''தவறு அதில் இல்லை. ஒரு பொறுப்பான மேனேஜர் தனக்குக் கீழ் வேலை பார்க்கும் பணியாளிடம் இப்படி ஜொள் மன்னனாய் பிதற்றுவது அசிங்கமான செயலாகவே எனக்குப் படுகிறது. புரிந்தால் சரி...'' என மூக்கு நுனி சிவந்த கோபத்தையும்,

''ம்ம்... புரிகிறது... புரிகிறது...'' என பலமாய் தலையாட்டியபடி, ''அழகு ரதிகளின் கோபம் கூட மிக அழகாய் ரசிக்கும்படியல்லவா இருக்கிறது...'' என்றவன், ''வாணி, உன்னைப் பார்த்தால் என்ன தோன்றுகிறது தெரியுமா?'' என்றான்.

அவள் பதில் சொல்லாமல் முறைக்கவும் அவனே விளக்கமளிக்க ஆரம்பித்தான்.

''அதாவது வாணி சங்க கால இலக்கியமான வளையாபதியில் ஒரு பாட்டு உண்டு. அதில் பெண்களை, 'வண்டொடு தேனினம் ஆர்ப்பப் புனத்திடைப் பூத்த பூங்கொடி ஒப்ப...' என ஓர் வர்ணனை உண்டு. அதாவது, 'பெண் எப்படியென்றால் வண்டினம் தம்மிடம் மயங்கி வந்து நெருங்கி ஆரவாரித்து மொய்க்கும்படி அழகாக மலர்ந்து சோலையில் நிற்கும் பூங்கொடியைப் போலவர் பெண்கள்...' என்கிறது.

அப்படித்தான் அபார அழகுடன் நீ விளங்குகிறாய். வண்டுவான நான் உன்னைத் தேடி வந்து மயங்குகிறேன். இன்னுமா இது உனக்குப் புரியவில்லை?''

அவனுக்கு பதிலுக்குப் பதில் நன்கு கொடுக்கலாம் எனத்தான் நினைத்தாள் வாணி. ஆனால் பதிலுக்குப் பதில் எதாவது பேசி பேச்சை வளப்பானேன் என நினைப்புடன் தலையைத் தட்டியபடி முறைப்புப் பார்வையுடன் அங்கிருந்து தன் இருக்கையை நோக்கி அகன்றாள். உதயசந்திரனும் மற்ற பணியாளர்கள் வருவதை உணர்ந்து விடுவிடுவென சென்று விட்டான்.

தன் இருக்கையில் வந்து நீளமாய் மூச்சிழுத்தவளுக்கு உதயசந்திரன் செய்யும் ரோமியோத் தொல்லை புதிதாய் வியக்கும்படி இருந்தது.

புதிதாய் இந்தக் கிளைக்கு மாற்றலாகி வந்தவன் வந்த ஒரே வாரத்தில் அவளைக் காணாததைக் கண்டது போல் பார்க்க ஆரம்பித்து விட்டான். என்னடா.. இது வம்பு? என அவள் திகைப்பதற்குள் மேலும் மேலும் அவளிடம் பேசும் சந்தர்ப்பத்தை உருவாக்கி ஏறக்குறைய காதல் வசனம் என்ற பெயரில் வழிய ஆரம்பித்து விட்டான்.



தன்னை விட உயர் அதிகாரி, பொறுப்பான பதவியில் இருப்பவன் இவனிடம் முகத்திலடித்தாற் போல் சொல்வது கடினமே... என அவள் பொறுத்துப் போனாள்.

ஆனாலும் சில சமயங்களில் எரிச்சலுற்று, ''ஏன்.. ஸார்... இந்த அலுவலகத்தில் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு என்னை ஏன் துரத்துகிறீர்கள்?'' என கேட்டும் பார்த்து விட்டாள்.

அதற்கும், ''நிறைய பூக்கள் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் ரோஜா இதழ்தானே என்னைக் கவர்ந்து சுண்டி இழுக்கிறது..? அது போல்தான் நீயும். நீதான் என்னைக் கவர்ந்தவள். உன்னைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது...'' என்பான் அதற்கும் சிலேடையாய்.

வாணி இப்படிக் கேட்டதற்குக் காரணமும் உண்டு. அலுவலகத்தில் அவள் காதுபடவே சக அலுவலகப் பெண்கள் உதயசந்திரனின் அழகை கம்பீர பர்ஸனாலிட்டியை வியந்து புகழ்வதைக் கண்டிருக்கிறாள்.

உதயசந்திரனின் அந்த நெடு நெடு உயரமும், திடகாத்திரமான உடம்பும், சுருள் முடி தவழும் பரந்த நெற்றியும், கூர்மையான கண்கள் துளைக்கப் பளிரீடும் அந்த முத்துப் புன்னகையும் வசீகரமான அந்த முகமும் எந்த இளம் பெண்ணையும் சலனப்படுத்தக் கூடிய ஒன்றுதான்.

அதில் உதயசந்திரன் பொருளாதார விஷயத்திலும் உயர்ந்தவன். பரம்பரை பணக்காரன். கார் பங்களா என சொகுசு வாழ்க்கை வாழ்ந்தாலும் பெயருக்கு, பொழுது போக்கிற்கு வேலை பார்ப்பது போல் இக்கம்பெனியில் சேர்ந்து வேலை பார்ப்பவன். அவனது பளபளக் காரையும்

அவன் லாவகமாய் ஒரு வித ஸ்டைலுடன் அவன் ஓட்டிச் செல்லும் அழகையும் அவளே வியந்து பார்த்ததுண்டு.

அப்படி வியந்து பார்த்தவளுக்கு அவன் தன்னிடமே காதல் வசனம் பேசி வழிவது கண்டு வியப்பு அதிர்ச்சியாய் அதிசயமாகவும் ஆகிக் கொண்டது.

ஆனாலும் உள்ளூர இப்படி ஆளுமையும் கம்பீரமும் கொண்ட பர்ஸனாலிட்டியான ஒருவன் தனக்காக உருகுவதை, தன் அன்பிற்காக அலைவதை அவள் ரசிக்கத்தான் செய்தாள்.

அதனாலே அவன் அவ்வப்போது செய்யும் காதல் குறும்புகளுக்கு கோபமாய் எரிந்து விழுந்தாலும் அவனை நோகும்படி நோகடிக்கும்படி பதில் நடவடிக்கை எதுவும் அவள் மேற்கொண்டதும் கிடையாது.

உதயசந்திரனும் விட மாட்டான். அலுவலக அவளது பிரிவின் மேனேஜர் என்பதால் தினம் அவளை எதாவது விபரம் கேட்பது போல் பைல்களை கொடுப்பது போல் அடிக்கடி அவனது ரூமிற்கு அழைத்துப் பேச்சு கொடுப்பான். அவள் பேசும் அழகை, அந்த மை விழிகளின் படபடப்பை, இதழ்கள் விரிய ஓடும் அழகுப் புன்னகையை எல்லாவற்றையும் ஆசை தீர பருகுவான்.

அவன் அப்படி தன்னை விழுங்காத குறையாய் பார்ப்பதை சில சமயம் எரிச்சலாக உணர்ந்தாலும் பல சமயங்களில் அதை ரசிக்கவே செய்தாள். ஆனாலும் அவன் செய்யும் இந்த சேஷ்டைகளை அவள் உணராதது போல் கவனியாதது போலவே நடந்து கொள்வாள்.

வாணியின் இந்த விசித்திரமான விருப்பும் வெறுப்பும் கலந்த செய்கைக்கு பெரிதாய் ஒரு காரணமும் இருந்தது.



அந்தக் காரணத்தினாலே அவள் தன்னைப் பற்றியோ, தனக்கு ஒரு வாழ்க்கை அமைவது பற்றியோ என்றுமே யோசித்துப் பார்த்ததில்லை.

சொல்லப் போனால் அண்ணனை கரம் பிடித்து அண்ணியாய் என்று மாலினி வந்தாளோ அன்று முதலே அவளது உலகம் அவளுக்கான சகலமும் மாலினி என்றாயிற்று.

மாலினி காட்டிய அபரீத அன்பு, நெகிழ வைக்கும் பாசம் என ஒவ்வொரு அன்பிலும் திளைத்தவள் அப்படியே மாலினியை நினைத்து உருகித்தான் போனாள்.

அதனாலே அவளை அண்ணியாய் எண்ணாமல் உடன் பிறந்த சகோதரியாகவே பாவித்தாள். அலுவலக வேலை முடிந்து வந்ததும் நேராக மாலினியைத் தேடிச் சென்று அவளைக் கட்டிக் கொள்ளாத குறையாய் அமர்ந்து, அன்று நடந்த விஷயங்களை அவளிடம் கதையளக்க ஆரம்பித்து விடுவாள்.

மாலினியும் அவளை ஒரு அன்புச் சகோதரி போலவே மடியில் சாய்த்து அவள் தலைக்கேசத்தை வாஞ்சையாய் நீவி விடுவாள். கை விரல்களை இதமாகப் பிடித்து விடுவாள். நெற்றியில் தோன்றும் அவளது ஒற்றைத் தலைவலிக்கு மருந்திட்டு இதமாகத் தடவி விடுவாள்.

எப்போதும் வீடு திரும்பும் அவளை சூடான காபியுடன் வரவேற்கும் மாலினி வாணி உற்சாக மூடில் இருந்தால், "வா... ஷாப்பிங் போவோம்.." என கிளம்பி விடுவாள்.

அப்படி ஷாப்பிங் செய்தாலும் வாங்குவது எல்லாம் வாணிக்காகத்தான் இருக்கும். விதவிதமான தொங்கட்

டான்கள், புது டிசைன் வளையல்கள், ஜடை மாட்டிகள், வாசனை பர்ப்யூம்கள் என ஒரு வண்டி வாங்கிக் கொடுத்து வாணியை அசத்தி விடுவாள்.

வாணியும் அன்று இரவு முழுவதும் தூங்காமல் மாலினி பற்றி, அவள் காட்டும் அன்பு பற்றியே மெய் சிலிர்க்க நினைத்துக் கொண்டிருப்பாள். அப்படிப்பட்ட அன்பை அவளுக்கு பொழிந்தாள் மாலினி!




நாளுக்கு நாள் ஆச்சரியம்தான். மாலினி ஒவ்வொரு நாளும் அன்பையும், பாசத்தையும் வாணியின் மேல் கூட்டிக் கொண்டே இருந்தாள்.

இப்படித்தான் ஒரு நாள் வாணியை அழைத்துக் கொண்டு ஷாப்பிங் என்ற பெயரில் ஊர் சுற்றியவள் அந்த பளிங்கு கட்டிடத்தின் முன் நின்று அதன் முகப்பு போர்டைக் காட்டினாள். ''வெஸ்டர்ன் அண்ட் கிளாஸிக் டான்ஸ்'' என எழுதப்பட்டிருக்க வாணி விழிக்கத்தான் செய்தாள்.

''என்ன பார்க்கிறாய்..? உனக்கு வெஸ்டர்ன் பிடிக்குமா.. இல்லை பரதம் பிடிக்குமா?'' என்றாள்.

''எதற்கு அண்ணி கேட்கிறீர்கள்?'' என வாணி வியந்த போது உரிமையுடன் தோளைத் தட்டிய மாலினி, ''வேறெதற்கு? நீ கற்றுக் கொள்வதற்குத்தான். உனக்கு ஆசை இல்லையா?'' என்றாள்.



''ஆசை உண்டு. ஆனால்...''

வாணி இழுக்க.. மறுபடியும் செல்லமாய் தட்டினாள்.

''பின்... என்ன?''

''கல்லூரி நாட்களில் படிக்க ரொம்ப ஆசை இருந்தது. அப்போதெல்லாம் விட்டு விட்டு இப்போது வேலை பார்க்கும் நேரத்தில் போய்...'' எனத் தயங்கியவளை மிரட்டலாகவே அடக்கினாள் மாலினி. ''அட.... என்ன இது பேச்சு? சொல்லப் போனால் உன் அழகு இப்போதுதான் கூடி மின்னலாய் ஜொலிக்கிறது. இப்போது நீ படிப்பது தான் சரி. எதில் உனக்கு இன்ட்ரஸ்ட்? ஆர்வம்? பரதம். பரத நாட்டியத்தில் தானே...?'' என கேட்கவும் வாணியின் தலை கீழே விழாத குறையாய் பலமாய் ஆடியது.

ஏற்கனவே இந்த 'பரத நாட்டியத்தின்' மேல் அவளுக்கு ஒரு கிறுக்கு உண்டு. உடன் படித்த சக கல்லூரி மாணவிகள் பரதம் கற்று முதல் முதல் மேடை அரங்கேறும் நிகழ்ச்சிக்கு அவளை அழைக்கும்போது அதைப் பார்க்க பரவசமாய்த்தான் கலந்து கொள்வாள். நாமும் இது போன்று செய்ய வாய்ப்பு எப்போதுதான் அமையுமோ? என ஏங்கத்தான் செய்வாள். இனிமையான இசையுடன் ஜதிகள் ஒலிக்க பரதப் பெண்மணிகள் அபிநயம் பிடித்து ஆடும் அழகில் அப்படியே ஒரு கணம் மெய்மறந்துதான் போவாள் அவள்.

அப்படிப்பட்டவளிடம் இப்படி ஒரு கேள்வி கேட்டால் தலை கிறுகிறுக்காமல் பின் என்ன செய்யும்?

முத்துப் பற்கள் அத்தனையையும் காட்டிக் கொண்டு மாலினியை நோக்கி வெட்கமாய் இளிக்கத்தான் செய்தாள் அவள்.

அது போதாதா மாலினிக்கு..? விடுவிடுவென அவளைக் கூட்டிக் கொண்டு அந்த இசைப் பள்ளிக்குள் நுழைந்து விட்டாள்.

உள்ளே ரிசப்ஷனில் வரவேற்பு பெண்மணி ஒருத்தி தெரிய அவளிடம் பரதநாட்டியம் பயிலுவதற்கான விபரங்களை விசாரிக்க ஆரம்பித்து விட்டாள். தினம் மாலை ஆறு மணி முதல் ஏழு மணி வரை, ஐந்து மணிக்கு அலுவலக வேலை முடிந்து திரும்பும் வாணி கலந்து கொள்ள சரியான டயம் என பயிலுவதற்கான நேரம் கூட பிக்ஸ் செய்தாயிற்று.

இன்னும் இரண்டொரு நாளில் தேவையான பணத்தை கட்டி சேர்ந்து விடுவதாக உறுதியும் கூறி விட்டாள் மாலினி. வாணிக்குத்தான் நம்ப முடியாத ஆச்சரியம்! வெளியே அவளை தரதரவென இழுத்துக் கொண்டு வந்தவள் பிலுபிலுவென பிடித்தாள்.

''என்ன அண்ணி இது...? யாரிடமும் கேட்காமல் நீங்கள் உறுதி கூறிவிட்டீர்கள்? இதெல்லாம் சாத்தியப் படுமா... நடக்கிற காரியமா?'' என்றாள்.

''ஏன்... நடக்காது.. வாணி? கண்டிப்பாக நடக்கும்...'' என்று அழுத்தந்திருத்தமாய் சொன்ன மாலினி அவள் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தாள். ''உனக்குப் பரதம் பயில நிஜமான ஆசை ஆர்வம் இருக்கிறதுதானே?'' என்றாள்.

மை விழிகள் தரை தாழ குனிந்த வாணி தலையை வேகமாய் அசைத்து சம்மதத்தைச் சொன்னதும் அவள் தலையில் செல்லமாய் குட்டத்தான் செய்தாள் மாலினி.



''இவ்வளவு ஆசையை மனதில் வைத்துக் கொண்டு எதற்காக மறைக்க வேண்டும்? யாருக்காக பயப்படு கிறாய்?'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

''எல்லாம் அண்ணனை நினைத்துதான். அவருக்கு இது சுத்தமாய்ப் பிடிக்காது..'' என உண்மையைக் கொட்டி சொன்னாள் வாணி.

தனது நீள புருவத்தை உயர்த்தி அசூயையாய் உதட்டைச் சுழித்தாள் மாலினி. ''அவருக்கு எதுதான் பிடிக்கும்? எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்றாள் அவள் தைரியத்துடன்.

வாணி நினைத்தது போல் வீட்டில் விஷயத்தைச் சொன்னதும் பிரளயம்தான் உண்டாயிற்று. அண்ணன் சுகேசன் வானத்துக்கும் கீழுக்குமாய்த்தான் குதித்தான்.

''வேலை பார்க்கும் வயதில் அடுத்து கல்யாணத்திற்கு வரன் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டுப் பரத நாட்டியம் கற்றுக் கொள்ளப் போகிறாயா? இதெல்லாம் உனக்குத் தேவையா? இதோ பார் வாணி வீணாக இவளது பேச்சையெல்லாம் கேட்டு உனது மனதை குழப்பிக் கொள்ளாதே. நீயாக யோசித்து முடிவெடு...!'' என்றான் கர்ஜிக்காத குறையாய்.

வாணி மலங்க மலங்க விழித்து அண்ணியை பயப் பார்வை பார்க்க மாலினி சைகையாலே 'தைரியமாகப் பேசு...' என்பது போல் உத்தரவே இட்டாள்.

''அது.. இது... இல்லை... அண்ணா... எனக்கும் ஆசை உண்டு. பரத நாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும்..

என்பது எனது நீண்ட நாள் கனவு. அதான்... அதனால் தான்...''

திக்கித் திணறினாலும் துணிச்சலாய் பேசினாள் வாணி. அதற்கு ஒரு 'சபாஷ்...' போடுவது போல் கைக ளாலே சியர்ஸ் காட்டி மறுபடி ஊக்குவித்தாள் மாலினி.

கூடவே தன் பங்குக்கு, ''இதோ பாருங்கள்... ஒரு விஷயத்தை நன்றாக யோசியுங்கள். என்ன இருந்தாலும் நம் வாணி இன்னும் ஓரிரு வருடத்தில் கல்யாணமாகி யார் வீட்டுக்கோ மாட்டுப் பெண்ணாய் செல்லப் போகிறவள். அங்கு எப்படி எப்படி அமைகிறதோ.. இங்கு... பிறந்தகத் திலாவது சந்தோஷமாய் தன் ஆசைகளை நிறைவேற்றி கொள்ளட்டுமே... ஏன் தடை போடுகிறீர்கள்?'' என்றாள் குரலை உயர்த்திக் கொண்டு.

இரண்டு பெண்களும் பிலுபிலுவென பிடித்ததாலோ என்னவோ சுகேசன் வேறு வழியில்லாதவனாய் சம்மதிக்க வேண்டியதாயிற்று. ''சரி.. எப்படியோ போங்கள்!'' என தலையாட்டியவன் கூடவே சிந்தனை வந்தவனாய், ''ஆமாம். தினம் தனியாகவா போகப் போகிறாய்?'' என்றதும் மாலினி உதட்டுச் சுழிப்புடன் முன் வந்து, ''அது எப்படி? நான் எதற்கு இருக்கிறேன்? தினமும் வால் போல் அவளை கூட்டிச் சென்று விட்டு திரும்ப அழைத்து வருவது என் பொறுப்பு!'' என்றாள்.

அவளை நன்றாக முறைத்த சுகேசன், ''நீ... சரியான வால்தான். முதலில் உன் வாலை நன்றாக ஒட்ட நறுக்க வேண்டும். அப்போதுதான் சரியாக வருவாய்...'' என்றபடி அதே கோபப் பார்வையில் அகன்றான் அவன்.



ஆயிற்று. மாலினி திட்டமிட்டவாறே சம்மதம் வாங்கி இரண்டே நாளில் வாணியை பரத நாட்டிய கிளாஸில் சேர்த்து விட்டு விட்டாள். தாய் கற்பகமும் முதலில் தயங் கியவள் வாணியின் ஆர்வத்தைக் கண்டு சம்மதித்து விட்டாள்.

முதல் நாள் பயிற்சிக்கு அவளைக் கூட்டிக் கொண்டு குதி போடாத குறையாய் மாலினி கிளம்பியது கண்டு வாணிக்கே ஒரே ஆச்சரியம்! படிக்கப் போவது நாம். நம்மை பயில வைப்பதில் அண்ணிக்கு இவ்வளவு ஆர் வமா? தனக்குள் எழுந்த கேள்வியை அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக கைகளால் அவள் முகத்தை ஆசையுடன் வருடி அழகாய் நெட்டி முறித்தாள் மாலினி. ''பின் இருக்காதா எனக்கு? சிறு வயது முதலே பரதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது என் நீங்காத ஆசை. ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த என்னால அதை நினைத்துப் பார்த்து கனவு கொள்ள முடிந்ததே தவிர... நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. அதான் அதனால்தான் இப்போது சந்தர்ப்பம் வரும்போது எனது அந்த ஆசைகளை என் அன்பான, ப்ரியத்துக்குரிய மைத் துனி மூலம் நிறைவேற்றிக் கொள்கிறேன். சரிதானே?'' என்றபோது அண்ணியின் பாசத்தைக் கண்டு ஒரு கணம் மெய்சிலிர்த்தவளாய் அவளை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள் வாணி.

ஒரு வழியாய் மணியைப் பார்த்துக் கொண்டே இரு வரும் அரக்கப் பரக்க டான்ஸ் ஸ்கூலை நோக்கி நடந் தார்கள். டான்ஸ் ஸ்கூல் கட்டிடத்தை நெருங்கும்போது ஜீன்ஸூம் டாப்புமாய், டீ ஷர்ட் மிடியுமாய், குட்டைப்

பாவாடை ஸ்கர்ட் என பலவித நாகரீக உடைகளில் கல்லூரி யுவதிகள் பளிச்சிட்டுக் கொண்டிருப்பது கண்டு வாணியே ஒரு கணம் மிரளத்தான் செய்தாள்.

அவளது எண்ணத்தை புரிந்து கொண்ட மாலினி அவள் தோள்களைத் தட்டியவள், ''ஒன்றும் மிரளத் தேவையில்லை வாணி. இவர்களெல்லாம் வெஸ்டர்ன் டான்ஸ் பயில வந்தவர்கள். நீ நமது பாரம்பரிய கலையான பரதம் பயில வந்திருக்கிறாய். பெரும் நாட்டியப் பேரொளி யாய் பெரும் விருதுகள் பெற்று மிளிரப் போகிறாய். எனக்கு அதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை'' என குளிர்ச்சியான ஐஸ்ூம் வைக்க வாணியின் அழகான தலை சந்தோஷத்தில் கிடுகிடுவென ஆடத்தான் செய்தது.

கட்டிடத்தினுள் நுழைந்து ரிசப்ஷனில் பணத்தைக் கட்டி பெயரை பதிவு செய்து பயிலும் அரங்கில் நுழைந்த வாணிக்கு மற்றொரு எண்ணம் கவலையாய் வாட்டிற்று. தான் பயிலும் நேரம் வரை அண்ணி வெட்டியாய் ரிசப்ஷ னில் உட்கார்ந்து வாய் பார்த்துக் கொண்டு பொழுதை கழிக்க வேண்டுமே? தினம் தினம் இப்படி உட்காருவது ஒரு தண்டனை போல் ஆகி விடுமே! என மருக அவள் நினைப்பை புரிந்த மாலினி கைகளை அழுத்தி தைரியம் கொடுத்தாள்; ''அட இதற்குப் போய் யோசிக்கிறாயா? என்னை விடு. நான் பாட்டுக்கு பராக்கு பார்த்துக் கொண்டே நேரத்தைப் போக்கி விடுவேன். நீ சென்று வா!'' என்று உதடுகளை விரித்து பெரும் புன்னகையுடன் அவளுக்கு விடை கொடுத்தாள். அந்த புன்னகைக் கிடையே பெரும் விஷமம் மறைந்திருப்பதை அப்போது வாணி கொஞ்சமும் உணரவில்லை.





# 4

டான்ஸ் ஸ்கூலில் முதல் இரண்டு நாட்கள் சுவாரஸ்ய மாய்ச் சென்றது. நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர் அன்பாய் அழகாய் நாட்டியத்தின் ஒவ்வொரு பகுதியை யும் விளக்கி சொல்லிக் கொடுத்தது அவளை மிகவும் கவர்ந்தது. தன் கால்கள் இது போன்று மின்னலாய் ஆடி ஒத்துழைக்குமோ என பயந்தவளுக்கு மனம் லயித்ததும் எல்லாமே இலகுவாய்த்தான் தோன்றியது.

அதனாலே பயிற்சி முடிந்து வீடு வந்தாலும் யாருக்கும் தெரியாமல் இரவுகளில் தனிமையில் மொட்டை மாடிக் குச் சென்று கற்றுக் கொடுத்த ஸ்டெப்களை ஆடியும் பார்த்தாள். அப்படிக் கற்றுக் கொள்வதும் ஆடுவதுமே அவ ளுக்கு மிகப் பரவசமாக இருந்தது.

மூன்று நாட்கள் எவ்வித பிரச்சினையுமில்லாமல் சென்ற நடன வகுப்பில் நான்காம் நாள் பிரச்சினை உதயசந்திரன் ரூபத்தில் வந்தது. வழக்கம் போல் அன்றும் மாலினி அண்ணியை ரிசப்ஷனில் உட்கார வைத்து விட்டுப் பயிலும் அரங்கத்தில் நுழைந்தவள் அங்கு நடனம் பயில புதியதாய் வந்திருந்தவனைக் கண்டு அரண்டுதான் போனாள்.

காலில் சலங்கைகளை கட்டிக் கொண்டு நடன ஆசிரியை முன் நின்று கொண்டிருந்தது சாட்சாத் உதயசந்திரனேதான்.

தனது உயர் அதிகாரியாய் இருப்பவன் தனக்காக இப்படி வந்திருக்கிறானா? என்ன கூத்து இது! அவனை அங்கு அந்த சூழ்நிலையில் பார்த்த வாணிக்கு திக்கென்றுதான் இருந்தது.

இவன் எதற்கு இங்கு வந்தான்?

விழிகள் விரித்து அவள் வியப்பாய் அவனைப் பார்க்க... அவள் வருவதைக் கண்டு விட்டு முகத்தைத் திருப்பி னான். அவளை நோக்கி குறுநகை படரும் கள்ளச் சிரிப்பொன்றை உதிர்த்தான்.

அந்த சிரிப்பு ஒன்றே வாணிக்கு எல்லாவற்றையும் உணர்த்திற்று. உண்மையில் இவன் நடனம் பயில வரவில்லை. அவளுக்காக... சினிமாக் கதாநாயகர்கள் போல் ஜொள் மன்னனாய் இங்கு வந்திருக்கிறான். என்ன செய்வது இவனை? ஒரு பொறுப்பான கம்பெனி மேனேஜர் பதவியில் இருப்பவன் இப்படி இருப்பானா?

அவள் திகைத்தவாறு மெல்ல அன்ன நடை போட்டுத் தான் அவர்கள் பக்கம் போனாள்.

நடன ஆசிரியை, "இவர் உதயசந்திரன். புதிதாக பயில வந்திருக்கிறார்.." என அறிமுகப்படுத்தியபோது அவளை முன்பின் தெரியாது போல்தான் பவ்யமாய் கை கூப்பிச் சிரித்தான் அவன்.

எரிச்சலாய் உணர்ந்தவள் நடன ஆசிரியை அகன்ற தும், "எதற்காக இங்கு வந்தீர்கள்?" என்றாள் கோபமாய்.

அசால்டாய் தோள்களைக் குலுக்கியபடி அசட்டுப் புன்னகையுடன் சிரித்தான் அவன்.

"வேறென்ன? நடனம் கற்றுக் கொள்ளத்தான்...!"



"உங்களைப் பார்த்தால் கற்றுக் கொள்ள வந்ததுபோல் தெரியவில்லையே...?"

"அது உனக்கு மட்டும் புரிந்தால் சரி..." என அவன் வெட்கமில்லாமல் சொன்னதும் கண்களை உருட்டிப் பெரிதாய் முறைத்தாள்.

"உங்கள் ஆசை ஒரு போதும் நிறைவேறாது..." அவள் வார்த்தைகளை முடிக்கும் முன் அவன் அவசரமாய் குறுக் கிட்டுக் "கண்டிப்பாய் நிறைவேறும்..." என இடை மறித்தது அவள் சினத்தை அதிகப்படுத்தியது.

"என்ன உளறுகிறீர்கள்?"

"உளறவில்லை கண்மணி. நான் இங்கு வருவது கம்பர் வர்ணித்த அற்புதமான காட்சியான அண்ணலும் நோக்கி னாள். அவளும் நோக்கினாள். காட்சிக்காகத்தான். அந்த உன் பெரிய மை விழிகளை விரித்து அழகான பார்வை ஒன்று பார்க்கிறாயே... அது போதும் எனக்கு. அந்த அபார விழி வீச்சை ரசிக்கத்தான் இங்கு தினம் வருகிறேன்... அதற்காக நடனமும் பயிலுகிறேன்..."

அவன் பாட்டுக்கு சிரிப்புடன் சொல்லிக் கொண்டு போக முகம் சிவக்கும் கோபத்துடன் விருட்டென அங்கிருந்து அகன்றாள் அவள்.

தான் பயிலும் பகுதிக்குச் சென்றவள் தான் உண்டு தன் வேலை என்பது போல் தன் கவனம் முழுவதையும் பயிலுவதிலேயே செலுத்தினாள். அவன் அவள் பகுதிக்கு அடிக்கடி தேவையில்லாமல் வருவதையும், கண்களை உருட்டி உருட்டி வைத்த கண் மாறாமல் அவளையே பார்ப்பதையும் உணர்ந்தாலும் கொஞ்சமும் கவனியா தவள் போல் நடமாடினாள்.

மேலும் இரண்டு மூன்று நாட்களில் அது பழகிப் போய் சிரமமில்லாத ஒன்றாகவே அவளுக்குத் தோன்றியது. ஏனெனில் அலுவலகத்தில் இப்படித்தான் அவன் முன் இயந்திர கதியாய் நடமாடிப் பழக்கம் அவளுக்கு. அதை அப்படியே டான்ஸ் ஸ்கூலில் கடைப்பிடிப்பது பெரிய விஷயமில்லாமல் போயிற்று.

ஆயினும் மேனேஜர் போன்ற பொறுப்பான பதவியில் இருப்பவன் இப்படியாகவா அசடு வழிய ஜொள் மன்ன னாய்த் திரிவான் என்ற ஆச்சர்யமும் அவளுக்கு! அதே நேரத்தில் உதயசந்திரனை ஒரேயடியாய் விடலைத் தனமாய் திரியும் 'ரோமியோ' போலும் நினைத்து விட அவள் மனம் மறுதலித்துதான் நிற்கும்.

அந்த நெடுவான உயரம். சுருளான முடி தவழும் பரந்த நெற்றி. முறுக்கு மீசை. ஆழமாய் ஊடுருவும் கருவிழிகள். இறுக்கமில்லாமல் சிரிக்கும் வசீகரப் புன்னகை. ஆஜானு பாகுவான உடம்புடன் கம்பீரமான ஆண்மை பொங்க நிற்கும் அவன் அழகு.

மற்றவளிடம் தெளிவாய் பேசி கண்டிப்புடன் நடந்து கொள்கிறவன் அவளிடம் மட்டும் மயக்கமாய் ஒருவித கிறக்கத்துடன் நடந்து கொள்கிறான்!

ஒரு கணம் அவன் தன்னையே காணாததைக் கண்டது போல், தனக்காக அப்படி விழுந்தடித்து சுற்றி வருவது அவளுக்குப் பரவசமாகவும் இருந்தது.

அவன் பார்வையில் படாமல் டான்ஸ் கிளாஸில் ஒளிந்து நடமாடிய தன்னை.. அவன் காண முடியாமல் தவித்தது... சுற்றிச் சுற்றி ஒவ்வொரு பகுதிகளிலும் போய் தன்னைத் தேடியது... ஏமாற்றத்துடன் கைகளை குத்திக்



கொண்டு தவித்தபடி சோகமாய் நின்றது... என அவனது கோலத்தை அவன் கவனியா வண்ணம் பார்த்துவிட்டு வீட்டிற்கு வந்து விழுந்து விழுந்து சிரிப்பாள் அவள்.

தனக்காக இப்படி வெறி பிடித்தாற் போல் ஒருவன் அலைகிறானே என்ற ஆச்சரியமும் அவளுள் ஏற்படும். ஆனால் உதயசந்திரன் விஷயத்தில் அவளால் உடனடி யாக எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ரீதியில் முடிவெடுக்க முடியவில்லை. அவனது விஷயத்தில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியிருந்தது. அதற்கு சரியான காரணமும் இருந்தது அவளுக்கு.




அலுவலகத்தில் மற்ற ஊழியர்கள் முன் அடக்கமாக நடந்து கொள்கிறவன் டான்ஸ் ஸ்கூலில் கொஞ்சம் கூடுத லாக அசடு வழிய நடந்து கொள்வது சில சமயம் எரிச் சலையே தந்தாலும் இந்த உதயசந்திரன் ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறி இடைஞ்சல் கொடுக்க மாட்டான் என்ற நினைப்பில் பொறுத்துக் கொண்டாள்.

அதனாலே அண்ணி மாலினியிடம் கூட இந்த விஷ யத்தைக் கூறாமல் தவிர்த்து விட்டாள்.

ஆனாலும் சில சமயம் அவன் அப்படி காணாததைக் கண்டது போல் டான்ஸ் ஸ்கூலில் தன்னைத் தேடி சுற்றிச்

சுற்றி வந்தது ஒருவித அச்சத்தை ஏற்படுத்த அந்த எண்ணத்திற்கு வந்தாள்.

அன்று விழிகள் உருட்டிப் பார்த்துக் கொண்டிருந் தவனை "ஒரு நிமிடம் வருகிறீர்களா?" என்றபடி டான்ஸ் ஸ்கூலின் இன்னொரு பகுதிக்கு அழைத்துச் சென்றாள்.

தனியறையில் நின்று கொண்டு கேள்விகளால் அவனை விளாசியபோது அசராமல் பதில் சொன்னான் அவன்.

"நீங்கள்.. என்னதான் நினைத்துக் கொண்டிருக் கிறீர்கள்..?"

"ம்ம்... ஒன்றும் நினைக்கவில்லை..."

"ஒரு பொறுப்பான கம்பெனியின் மேனேஜர் செய்கிற காரியமா இது?"

"லுக், இங்கு நான் உன் கம்பெனி மேனேஜர் இல்லை. உன்னைப் போல் நடனம் பயிலும் ஒரு சக மாணவி... ஸாரி.. மாணவன்...

நீங்கள் நடனம் பயிலும் லட்சணம்தான் தெரி கிறதே..."

அவள் கிண்டல் குரலுக்குச் சிரித்தான். "உனகு தெரிகிறது.. தெரிகிறது அல்லவா...? அது.. போதும்... அது போதும்..." மேலும் மேலும் அவன் சிரித்தபோது கைகளை உயர்த்தி எரிச்சலாய் நிறுத்தினாள்.

"மிஸ்டர் உதயசந்திரன்.. ஒரு பெண்ணை இப்படி ரோமியோ போல் விடலைத் தனமாய் சுற்றி வருவது உங்களுக்கு வெட்கமாய்த் தெரியவில்லை...?"

"தெரியவில்லை..." என்றான் சுருக்கமாக.



"தெரியவில்லை என்றால்... என்ன அர்த்தம்?"

அவனும் கைகளை உயர்த்தினான்.

"இதோ பார் வாணி, நான் உன் பின்னால் சுற்றுவது வாஸ்தவம்தான். ஆனால் நான் என்ன செய்கிறேன் என்று கவனித்தாயா?"

"என்ன செய்கிறீர்கள்?" என்றாள் அவள் கோபம் குறையாதவளாய் புருவம் உயர்த்தி.

அவள் சினமாய் கேட்டதற்கு ஒரு கணம் பதில் சொல்லாமல் அவள் பக்கத்தில் வந்து ஊடுருவுவது போல் அவள் கண்களை நன்கு உற்றுப் பார்த்தான் உதயசந்திரன்.

"இதோ.. இதோ.. தெரிகிறதே.. இந்த மைவிழிக் கண்கள்.. இதன் அபார அற்புத ஒளிவீச்சு... இதை.. இந்த அழகை ரசிக்கத்தான் தினம் தினம் ஓடோடி வருகிறேன். ஆசை தீர பார்த்து பருகுகிறேன். நான் செய்வது வெறும் பார்வை. பார்வை மட்டுமே.. இதில் உனக்கு.. என்னம்மா சங்கடம் வந்து விட்டது?"

கெட்டிக்காரத்தனமாய் எதையோ ஆரம்பித்து எப் படியோ அவன் முடித்ததில் அவள் கோபம் மூச்சு வாங் கியது. 'பேசாமல் அந்தக் கண்களைப் பிடுங்கி உங்கள் கையில் கொடுத்து விடட்டுமா?' என கேட்க நினைத்து வாயை அடக்கியவள், அவனைப் போலவே பேசினாள். "ஆனால், ஒருவர் அனுமதியில்லாமல் ஒருவரை பார்வை யால் பார்ப்பதும் தவறுதானே?" என்றாள்.

"தவறுதான். வேண்டுமானால் முறைப்படி உன்னிடம் அனுமதி கேட்கிறேன். இன்னும் ஒரு ஆறு மாத காலத் திற்கு இந்த விழிகளால் அந்த மை விழிகளை ஆசை தீர

பார்த்து பழக அனுமதி கொடு. கொடுக்கிறாயா...?'' என்றான்.

குப்பென முகம் சிவந்து போனவள் திரும்பி அதே ஆத்திரத்துடன் முறைத்தாள்.

அப்போதும் விம்மிக் கோபப்படும் அவள் ஆச்சரியமான அழகை ஆசை தீர ரசித்துக் கொண்டிருந்தான் அவன் உதயசந்திரன்.

அன்று ஒரு நாள் முழுவதும் அதற்கென ஒதுக்கி அவள் யோசித்தும் பார்த்தாள். என்னதான் உதயசந்திரனின் ஆளுமை அந்த கம்பீர பர்ஸனாலிட்டி அவளை ஈர்த்திருந்தாலும் மனது தன்னை மீறி அவன் மேல் ஒரு லயிப்பு காட்டினாலும் ஒரு விஷயம் அவளுக்கு முக்கியமாக இடித்தது.

சரி.. அவன் நினைப்பது போலவே இந்த உதயசந்திரனை விரும்ப ஆரம்பித்தால், அல்லது அவன் விருப்பத்தை ஏற்றுக் கொண்டால் என்ன நடக்கும்? உடனே பெரியவர்களின் பேச்சு வார்த்தை தான். நாள் குறிக்கப்பட்டு கல்யாணமும் நடந்து விடும்.

பின் அவள் சூட்கேஸ் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உதயசந்திரனின் மனைவியாய் புகுந்த வீடு சென்று விட வேண்டியதுதான். அங்கு பிரும்மாண்டமான பங்களா, விசாலமான அறைகள், ஏ.ஸி. கார் என ஒரு சொகுசான வாழ்க்கையே அவளுக்கு காத்திருக்கும். அவளும் ஒரே நாளில் மேல் தட்டு பகட்டான 'பணக்காரத்தனத்திற்கு' வந்து விடுவாள்.

ஆனால்... ஆனால்... அவளுக்கு அதில் கொஞ்சமும் இஷ்டமில்லையே...! அவளுக்கு எல்லாவற்றையும் விட



அன்பான அம்மா, அண்ணன், பிரியமான அண்ணி, அமைதியான அவளது பழைய கால ஓட்டு வீடு, அதன் மாடியில் அவளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் சிறிய அறை. அதுதானே பிடித்திருக்கிறது. அந்த சிறிய அறையின் ஓரமாய் கிடக்கும். அந்த பழைய மரக் கட்டிலில் உட்கார்ந்து ஒரு கணம் கண்ணை மூடினால் உலகையே மறந்து விடுவாளே!

வேலை முடிந்து வரும் தினங்களில் அப்படியே வந்து சேலையைக் கூட மாற்றாமல் அந்தக் கட்டிலில் கவிழப் படுத்து மணிக்கணக்காய் கண்களை மூடிக் கொண்டு கிடப்பது அவளுக்கு எவ்வளவு பெரிய சுக அனுபவமாய் இருக்கும்?

அதே போல் இரவு நேரங்களில் தனிமையாய் அந்தச் சிறிய பிலிப்ஸ் டிரான்சிஸ்டரில் பழைய பாட்டுக்களை கேட்டபடி எவ்வளவு நேரம் சிலையாய் மெய் மறந்து கிடந்திருக்கிறாள்?

அது மட்டுமா.. கீழே இறங்கி வந்தால் அம்மாவில் இருந்து அண்ணி வரை அவளை அன்பாய் தாங்கும் பாங்கு? சுடச் சுட காபியா... இல்லை அவளுக்குப் பிடித்த பால் பாஸந்தியா? அண்ணி மணமணக்க அவள் முன் டம்ளரில் நீட்டும் போது பரவசமாய்த்தான் இருக்கும்.

அம்மா மட்டும் சும்மா இருப்பாளா? அவளை ஆசையாய் தன் மடியில் படுக்க வைத்து, "வேலை பார்த்து களைத்திருப்பாய். கொஞ்சம் தூங்கு கண்ணு..." என வாஞ்சையுடன் தனது நடுங்கும் கை விரல்களால் அவள் தலையைக் கோதி விட்டு அதில் பெரும் நிம்மதியை அடையும் போது அவளுக்கு சொர்க்கத்தில் மிதப்பது போல் தான் இருக்கும்.

என்னதான் அண்ணன் வீட்டில் அடிக்கடி சிடுசிடுத் தாலும் அவள் மேல் மட்டும் அந்த கடுகடுப்பை காட்ட மாட்டான். வழக்கம் போல் சம்பளம் வாங்கிய கையோடு அவளுக்கு ஒரு சேலை எடுத்து வருவதை கல்யாணம் ஆகி அண்ணி வந்த பிறகும் அவன் நிறுத்தவில்லை.

அவள் முன் சேலையை நீட்டி, "உனக்குப் பிடித்திருக் கிறதா பார்?" என கேட்கும்போது வாணி நெளியத்தான் செய்வாள்.

"இன்னும் எனக்கெதற்கு அண்ணா? அண்ணிக்கு எடுத்துக் கொடுங்கள்" என்று சொல்லும்போது பிடி வாதமாய் அவள் கையில் திணித்து "அவளுக்குத் தேவை யில்லை. இது உனக்குத்தான்!" என்றபடி சென்று விடு வான்.

பின்னால் கதவோரமாய் நின்று கொண்டு எல்லா வற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் அண்ணியைக் கண்டு ஒரு கணம்.. என்ன செய்ய.. என்ன சொல்ல.. என தவிக்கத்தான் செய்வாள் வாணி.

முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் அன்று முழுதும் நடமாடும் அண்ணியைக் கண்டு உள்ளூர அவளுக்கு பயமாகவும் இருக்கும். ஆனால் மறுநாள் அதே நேரத்தில், அதே அண்ணன் முன், "அவ ஒரு சேலை உனக்கு எடுத்துக் கொடுத்தால் நான் சும்மா இருந்து விடுவேனா? இந்தா.. பிடி.. என் சார்பில் உனக்கு இரண்டு சேலைகள்..!" என தனது சேமிப்பு பணத் திலிருந்து அண்ணி சர்ப்பரைஸாக வாங்கி வந்து சேலைகளை நீட்டும்போது அவள் இன்பமாய் அதிர்ந்து தான் போவாள்.



அட.. கணவன் தனக்கு எடுத்துக் கொடுக்காமல் தங்கைக்குக் கொண்டு வந்து நீட்டுகிறானே... என்று பார்த்தால்... அதையெல்லாம் உதறிவிட்டு ஒருபடி மேலே போய் இரண்டு சேலைகளை அல்லவா நீட்டு கிறாள்..? என்ன ஒரு பாசம்...? என்ன.. ஒரு அன்பு..? தொண்டை விக்கித்துப் போனவள் போல் அப்படியே பேச வார்த்தைகளின்றி அண்ணியை இறுகக் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீரில் மிதப்பாள் அவள்.

இது போன்று மென்மையான இதமான அனுபவங்கள் அவளுக்கு வீட்டில் அடிக்கடி ஏற்பட அப்போதே அவள் மனதுள் தீர்மானித்து விட்டாள். எந்த சூழ்நிலையிலும் எதற்காகவும் இந்த வீட்டை விட்டும் இவர்களது அன்பை விட்டும் பிரியக்கூடாது. பிரியவே கூடாது என்று!

அப்போதே அந்தக் கேள்வி பூதாகாரமாய் எழுந்து அவளை வாட்டவும் செய்தது. என்ன இருந்தாலும் அவள் ஒரு பெண். நாளைக் கல்யாணம் என்ற ஒன்று நடந்து புகுந்த வீடு செல்ல வேண்டுமே.. அப்போது என்ன செய்யப் போகிறாள்?

எழுந்த கேள்விக்கு அவளுள்ளே பதிலும் தேடிக் கொண்டாள். அமைதியான சுபாவம் கொண்ட ஒருவனை வீட்டோடு மாப்பிள்ளை போல் பேசி வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் போதுமே? அந்தப் பிரச் சினையைக் கூட சரி செய்து விடலாமே? அன்பான வீட்டை பாசமான சூழ்நிலையை பிரிய வேண்டிய அவ சியம் இராதே?"

அப்படி ஒரு மனக் கணக்கு போட்டு தன்னுள் தெளி வாகத்தான் இருந்தாள் வாணி. ஆனால் இப்போது உதய சந்திரன் காதலன் என்கிற பெயரில் சலனம் ஏற்படுத்

துவதுதான் அவளுள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

உதயசந்திரனின் காதல் விரட்டல் ஆரம்பித்ததுமே முதலில் அவனை தனது அந்த மனக்கணக்கு வட்டத்தில் பொருத்தித்தான் பார்த்தாள். முதலிலே ஒரு பாயிண்ட் இடித்தது. உதயசந்திரன் ஒன்றும் அமைதியான ஆமாம் சாமி டைப் இல்லை. எப்போதும் எதற்கும் தன் கருத்தை தெளிவாய் எடுத்து உரைக்கிறவன். சரி அந்தப் பாயிண்ட்டை கூட அப்படியே ஏற்றுக் கொண்டாலும் அடுத்த மெயின் பாயிண்ட் உதயசந்திரன் விஷயத்தில் ஜீரணிக்க முடியாத ஒன்று.

வீட்டோடு மாப்பிள்ளையாய் உதயசந்திரனை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. பரம்பரை பணக்காரனாய் பங்களாவில் உயர்ரக கார்களில் பவனி வருகிறவன் அவளுக்காக இந்த ஓட்டு வீட்டில் வந்து குடியிருப்பானா? ஆக அந்த 'ஸ்டேட்டஸ்' விஷயம் நிச்சயம் நடக்காத ஒன்றுதான்!

அதனால் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவளின் மனக் கணக்கு குறியீட்டில் இந்த உதயசந்திரனை கொஞ்சமும் பொருத்திப் பார்க்க முடியாது. அதனாலே உதயசந்திரனை கணக்கில் எடுத்துக் கொள்ளாதபடி நிராகரிக்க வேண்டிய கட்டாயமும் அவளுக்கு.

இரண்டு நாள் யோசித்து தெளிவாய் சிந்தித்தவள், இனியும் காலம் தாழ்த்தாமல் இது பற்றி உதயசந்திரனிடம் பேசி தன் நிலையை அவனுக்கு உணர்த்திவிட வேண்டும் என்ற முடிவிற்கும் வந்தாள்.



## 6



வாணி முடிவெடுத்ததோடு தாமதிக்கவில்லை. அன்று அலுவலக மதிய உணவு இடைவேளையின் போதே ஓய்வறையில் தனியே இருந்த உதயசந்திரனிடம் பேசச் சென்று விட்டாள்.

குஷன் சீட் ஒன்றில் தளர்வாய் சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவன் விறுவிறுவென தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் வாணியைக் கண்டு முகம் மலர நிமிர்ந்தான்.

அதிசயத்தோடு கண்களை விரித்து தன்னை ஆவலோடு அவன் பார்ப்பதை கொஞ்சமும் பொருட்படுத்தாதவளாய் எதிர் இருக்கை ஒன்றை இழுத்துப் போட்டு அவன் முன் உட்கார்ந்தாள் வாணி.

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்...'' என்று அவள் ஆரம்பித்த போது அவன் கொஞ்சமும் அதிராமல் கொண்டிருந்த புன்னகையை பெரிதாக்கினான்.

''தாராளமாக.. எந்த விஷயம் வேண்டுமானாலும் பேசலாம். இன்னும் அரை மணி நேர ஓய்வு அவகாசமாய் இருக்கிறது.''

சொன்னவன் வேண்டுமென்றே ''எந்த விஷயம் வேண்டுமானாலும்...'' என வார்த்தைகளில் அழுத்தம்

கொடுத்தது எதற்கோ அழைப்பு விடுவிப்பது போலவே வாணிக்குத் தோன்றியது.

எதுவானாலும் அவள் பேச வந்ததும் அது பற்றிதானே! அவனே ஆரம்பித்து எதிர்பார்த்தால் அதைப் பேசுவதும் எளிதுதானே...? நினைத்தவள் நேரிடையாகவே விஷயத்திற்கு வந்து விட்டாள்.

"இதோ பாருங்கள் மிஸ்டர் உதயசந்திரன், நான் பேச வருவது நீங்கள் தினம் என்னைச் சுற்றி சுற்றி ரோமியோ போல் அலைவது பற்றித்தான்..."

அவள் சொன்னதற்கு எவ்வித அதிர்வும் கொள்ளாமல் ஏதோ சுவாரஸ்யமாய் கதை கேட்பது போல், "ம்ம்.. சொல்லுங்கள்..." என்றான் உதயசந்திரன்.

கண்கள் அகல விரிய ஒரு கணம் முறைத்து விட்டு குரலில் உஷ்ணத்தைக் காட்டினாள் அவள்.

"இந்த விஷயத்திற்கு இன்றோடு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அதனால் நான் மனதுள் ஒரு தீர்மானத்தை எடுத்து விட்டேன்."

"ம்ம்... நல்ல முடிவு! உங்கள் தீர்மானத்தை நானும் வரவேற்கிறேன். தெரிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறேன்..."

அவன் தலையை வெகுவாய் ஆட்டியபடி பேசியது அவளுக்கு எரிச்சலையே தந்தது. புருவம் உயர்த்தி மீண்டும் பார்வையால் எரித்தவள், "மிஸ்டர் எனது முடிவின்படி நீங்கள் உங்கள் காதல் ரோமியோத்தனத்தை உடனடியாக நிறுத்தியாக வேண்டும். இல்லாவிட்டால்..."

அவள் நிறுத்த, "ம்ம்... சொல்லுங்கள்..." என்றான் அவன் எவ்வித உணர்ச்சியுமில்லாமல்.



"இல்லாவிட்டால்.. தக்க விளைவுகளை உடனுக்குடன் சந்திக்க வேண்டியிருக்கும்..." வேகமாய் முடித்தாள் அவள்.

"தக்க விளைவுகள் என்றால்...?" என்றான் அவன் இழுத்து விளக்கம் கேட்பவனாய்.

அவன் கேட்டதற்கு ஒரு நிமிடம் பதில் சொல்லாமல் பெரிதாய் மேலும் கீழும் மூச்சு வாங்கினாள்.

பின் டக்கென குனிந்து பாதங்களில் கிடந்தவைகளை எடுத்து உயர்த்திக் காட்டினாள்.

அவனும் ஒரு கணம் புரியாமல் திகைத்துதான் போனான்.

"என்ன புரியவில்லையா? செருப்படிகள் விழும்!" என்றாள் தெளிவான குரலில் விளக்குவது போல.

உதயசந்திரன் நிஜமாக இப்படியொரு செய்கையையும் வார்த்தையையும் எதிர்பார்க்கவில்லை என்பது அவன் முக அதிர்வில் இருந்தே தெரிந்தது.

கண்களை அகல விரித்து அவளை நன்கு உற்றுப் பார்த்தான்.

"என்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறாய்?"

அவள் பதில் சொல்லாமல் முறைத்தபடியே தலையை ஆட்டினாள். அவன் கோபம் அதிகமாகியது.

"நான் உன் மேலதிகாரி. தெருப் பொறுக்கி இல்லை..."

"ஆனால்... மேலதிகாரி நடந்து கொள்ளும் விதம் தெருப்பொறுக்கி போல்தானே இருக்கிறது?"

கண்கள் நிலை கொத்தியது போல் இருவரும் ஒருவரையொருவர் சில நிமிடங்கள் முறைத்துப் பார்த்தனர்.

"ஆல் ரைட். என்னதான் சொல்ல வருகிறாய்?"

"உங்கள் ரோமியோத் தொல்லையை நீங்கள் உடனடியாக நிறுத்திவிட வேண்டும்..."

"அப்புறம்?"

"அப்புறமென்ன...? நீங்கள் பாட்டுக்கு உங்கள் வேலையைப் பாருங்கள். நான் என் வேலையைப் பார்க்கிறேன். உங்களால் எனக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படக் கூடாது. அப்படி ஏற்பட்டாலும் நான் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை. உடனே பதிலடிதான்...!"

"ஓஹோ...!"

"எனக்குத் தேவையான பதில் 'ஓஹோ..' இல்லை. இனி.. திருந்தி விட்டேன்... நிறுத்தி விடுகிறேன் என்பது தான்..."

"ம்ம்... சரி... நிறுத்தி விடுகிறேன்..."

சொல்லும்போதே அவன் முகம் பாறை போல் இறுக ஆரம்பித்தது.

அவள் சட்டென முகம் வெட்டி அகலப் போனாள்.

"நில்... ஒரு நிமிடம்..."

குரல் மாறி அவன் கூப்பிட அதே வேகத்தில் திரும்பியவள் நின்றாள்.

"உண்மையாகச் சொல். உனக்கு என் மீது எந்தவித விருப்பமும் இல்லையா?"

குரல் மாறி கனிவும் கெஞ்சலுமாய் அவன் கேட்ட விதம் ஒரு கணம் அவளைத் தடுமாறத்தான் வைத்தது.

சீறும் சிங்கம் போல் ஆறடி உயரத்தில் திண் தோள்களுடன் ஆஜானுபாகுவான உடம்போடு, களையான



முகமும், துளைக்கும் விழிப் பார்வையும் உதடுகளில் தோன்றி மறையும் அந்த வசீகரச் சிரிப்பும் அந்த கம்பீரமான ஆளை விழுங்கும் ஆளுமையும்... நிச்சயம் இவன் தட்டிக் கழிக்கக் கூடிய பர்ஸனாலிட்டி இல்லைதான் என்பதை அவளுக்குத் தெளிவாய் பறை சாற்றத்தான் செய்தது.

ஆனாலும் இந்த உதயசந்திரன் அவள் போட்டு வைத்திருக்கும் மனக் கணக்கு வட்டத்தில் பொருந்தாதவனாயிற்றே...! அதற்காகவாவது அவனைக் கட்டாயமாக நிராகரிக்க வேண்டிய சூழ்நிலை அவளுக்கு.

உதடுகளிலும் முகத்திலும் பிடிவாதமான ஒருவித செயற்கை இறுக்கத்தைக் கொண்டு வந்தவள், "ஐ...ஆம் ஸாரி! எனக்கு அப்படி எந்தவொரு எண்ணமும் இல்லை.." என்றாள் தெளிவான குரலில்.

அவளது பதில். நம்ப முடியாத அதிர்ச்சியுடன் கேட்டவன் தன் முகத்தை முன்னால் கொண்டு வந்து, "நிஜமாகவா சொல்கிறாய்?" என்றான் குரல் கம்ம.

"நிஜமாகத்தான்...!"

மறுபடியும் அழுத்தந்திருத்தமான குரலில் உச்சரித்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து அகன்றாள் அவள்.

அவள் அகல... அவளது முதுகை துளைப்பது போல் ஊடுருவலான பார்வை பார்த்து அவன் வெறிப்பது அவளுக்கும் புரிந்தது.

தன் இருக்கையில் வந்து அமர்ந்தும் வேகமாய் மூச்சு வாங்கினாள். இருப்புக் கொள்ளாமல் கன்னத்தில் கை வைத்தபடி சிந்தித்தாள். அதிகப்படியாக பேசி மிரட்டி விட்டோமோ? என தவித்தாள்.

ஆனாலும் உதயசந்திரன் செய்தது தவறுதானே? விருப்பமில்லை என்று சொல்லியும் விடாது விரட்டி ரோமியோ போல் மன உளைச்சலை ஏற்படுத்த முயன்றது... அவளுக்கு எவ்வளவு எரிச்சலை ஏற்படுத்தியது? இனியும் இதை சகித்துக் கொள்ளக் கூடாது என்று தானே முடி வெடுத்து இவ்வளவையும் சொல்லியிருக்கிறாள்?

எந்தவொரு ஆணிடமும் இப்படி இதுவரை முகத்தி லடித்தாற் போல் மிரட்டலாய் அவள் பேசியது இல் லையே...! அதனாலே கம்பீரமான பர்ஸனாலிட்டி உள்ள அவனிடம் அப்படி எச்சரித்துப் பேசுவது அவளுக்கும் வலிக்கத்தான் செய்தது.

ஆனாலும் வேறு வழியில்லையே... காய்ச்சல் என்று வந்த பிறகு கஷாயம் குடித்துத்தானே ஆக வேண்டும்...? அதனால் தான் உதயசந்திரனிடம் பேசியது முற்றிலும் சரியே.. என்ற முடிவுக்கு வந்து நிம்மதியடைந்தாள் வாணி.




வாணி நினைத்தது போலவே உதயசந்திரனும் அதிர்ந்துதான் போயிருந்தான். வாணியின் அந்த மிரட்ட லான நடவடிக்கை அவனை வெகுவாய் பாதித்து நிலை தடுமாற வைத்திருந்தது.

வாணியிடம் இருந்து இவ்வளவு வேகமான வார்த் தைகள் செருப்பைத் தூக்கிக் காட்டும் செய்கையை



எல்லாம் அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. என்ன ஒரு கோபம். என்ன ஒரு தைரியம்! அவனிடமே செருப் படிகள் விழும்... என வார்த்தைகளால் விளாசி விட்டாளே!

அந்த வார்த்தையே அவனை நிஜமாகவே செருப்பால் அடித்தது போலத்தானே இருந்தது. யாரை மனதுள் வைத்து பூஜிக்க நினைத்தானோ அவளே அவனது முகத்தில் 'ச்சீ... போ..!' என காறி உமிழ்ந்தால் எப்படி இருக்கும்?

சில நொடிகள், நிமிடங்கள் எதுவும் ஓடாமல் அப் படியே பேதலித்தவன் போல்தான் சிலையாய் உட்கார்ந் திருந்தான். இப்படி ஒரு அவமானம் அவனது வாழ்வில் இதுவரை ஏற்பட்டதில்லை. ஏன், அவனுக்கு நிகழும் என கனவிலும் நினைக்க முடியாத ஒன்றுதான். ஆனால் நடந்து விட்டதே!

சிறிய பெண்... புத்திசாலி என்றெல்லாம் சீண்டி விளை யாடினால்... இப்படிப் பாம்பாய் மாறி கொட்டி விட் டாளே..!

இது பெரும் அவமானம்தான்! அவமதிப்புதான்! தலையைத் தொங்கப் போட்டவனாய் அப்படியே கொஞ்ச நேரம் கவிழ்ந்து யோசித்தான் உதயசந்திரன்.

அவள் சொன்ன வார்த்தைகளின் வலியை விட, 'எனக்கு அப்படி எந்தவொரு எண்ணமும் இல்லை...' என வாணி தெளிவாய் உச்சரித்த மீண்டும் மீண்டும் அவன் காதுகளில் ரீங்காரமிட்டது.

என்ன... அது உண்மையா?

நிஜமாகவே... வாணிக்கு... அப்படி ஒரு எண்ணமே இல்லையா?

அவளை அவன் எந்த விதத்திலும் கவரவில்லையா? அவள் மனதில் சிறிதேனும் சலனம் ஏற்படுத்தவில்லையா?

அப்படியானால்...?

அவன்தான் அவளிடம் மயங்கி இருக்கிறான். காதல் கனவு கண்டு தொலைத்திருக்கிறான். அவளுக்கு அப்படி எந்த ஒரு கனவும் ஏற்படவில்லை!

அதனாலே.. பார்த்தாள். பொறுக்க முடியாமல் முகத்திலடித்தாற் போல் சொல்லி விட்டாள்.

அவளைச் சொல்லித் தப்பில்லை!

நாம்தான் அவசரப்பட்டு விட்டோம். அவள் மனதில் கொஞ்சமாவது நாம் இருக்கிறோமோ என்று தெரிந்து விட்டு முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும்.

அதைவிட்டு விட்டு முந்திரிக் கொட்டை போல் அவசரப்பட்டு ரோமியோ வேலையைக் காட்டி இப்படி வகையாய் அவளிடம் குட்டையும் வாங்கி விட்டோம்.

என்ன ஒரு வெட்கக் கேடு!

கண்களில் கோபமும் எரிச்சலும் ததும்ப அவள் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் வாழ்நாளில் இனி மறக்கவே முடியாதவைகள்தானே!

அவை மீண்டும் மீண்டும் அனல் துண்டுகளாய் நினைவுக்கு வந்து அவன் மனதை எரிக்குமே..!

அதை எப்படி அவனால் தாங்கிக் கொள்ள முடியும்?

அதைவிட... முக்கியமாய் இன்னொரு விஷயம்.

இனி அவனால் எப்படி அவள் முன் தலை நிமிர நடமாட முடியும்?



அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒருவித குற்ற உணர்வுடன் தவிக்கப் போகும் முகத்தை எப்படி எங்கே போய் வைத்துக் கொள்வது?

ரொம்ப நேரம் ஒன்றும் ஓடாதவனாய் சிந்தனையில் அலைகழிந்து கொண்டிருந்த உதயசந்திரன் ஒரு பத்து பதினைந்து நிமிடங்களுக்குப் பின் இயல்புக்கு வந்தான்.

அவன் முகத்தைப் போலவே மனதுள்ளும் ஒரு இறுக்கம் கூடியது.

அவள் வாணி தெளிவாக தன் முடிவை சொல்லி விட்டாள். உன் மீது எனக்கு எந்தவித விருப்பமும் இல்லை என்று.

இனியும் அவளே கதி என காதல் பித்து பிடித்து அலைய அவன் ஒன்றும் கிறுக்கன் இல்லை.

அவனுக்கும் மானம் இருக்கிறது. தன்னைப் பிடிக்காத பெண்ணை உதறித் தள்ளும் 'ரோஷம்' இருக்கிறது.

ஆக.. என்ன ஆனாலும் சரி.

இனி அவளை மறந்துவிட வேண்டியதுதான். அவள் பக்கம் தலை திருப்புதல் என்ன.. இனி அவள் முகத்திலேயே விழிக்கக் கூடாதுதான்!

படபடவென பல தீர்மானங்களை மனதுள் ஓடவிட்டவன் உடனடியாக அவைகளைச் செயல்படுத்தவும் ஆரம்பித்தான்.

முதல் வேலையாய் டான்ஸ் ஸ்கூலுக்கு பயில வருவதை நிறுத்தினான். மறுநாள் அதைவிட ஒரு படி மேலே போய் அலுவலகத்திலும் உற்பத்திப் பிரிவில் இருந்த அவனது மேனேஜர் வேலையை டிவிஷனல் மேனேஜரிடம் பேசி பார்ச்சேஸிங் செக்ஷனுக்கு மாற்றிக் கொண்டான்.

அதாவது.. வாணியை.. அவள் முகத்தில் தினம் முழிக்கத் தேவையில்லாத வேலை! பழைய உற்பத்திப் பிரிவு என்றால் மேனேஜர் என்கிற முறையில் வாணி பல முறை வந்து அவளைச் சந்திக்க வேண்டியிருக்கும். உற்பத்தி தகவல்களை அடிக்கடி வந்து சொல்ல வேண்டியிருக்கும். அதைத் தவிர்க்கவே மேலிடத்தில் பேசி வலுக் கட்டாயமான மாற்றல் ஒன்றை வாங்கிக் கொண்டான் உதயசந்திரன்!

இனி.. இதனால் அவன் நினைத்தது போல் வாணியைச் சந்திக்க வேண்டியதில்லை. அவள் முகத்தில் விழிக்க வேண்டிய அவசியமும் இல்லை!

உதயசந்திரனின் இந்த தடாலடி நடவடிக்கை வாணியை உண்மையாகவே திகைப்பாக்கி அதிரத்தான் செய்தது.

மறுநாள் டான்ஸ் ஸ்கூலில் அவன் இல்லாததை கண்டு அவன் படிப்பதை நிறுத்தி விட்டான் என்பதை உடனடியாக புரிந்து கொண்டாள்.

அவளுக்குத் தெரியுமே! அவன் நடனம் படிக்கச் சேர்ந்தது ஆர்வத்தில் இல்லையே... அவளுக்காகத்தானே!

சரிதான்.. நேற்று நாம் கொடுத்த 'கொடை'யில் ஆளுக்கு புத்தி வந்து விட்டது என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் அலுவலகம் சென்றபோது அவன் வேண்டுமென்றே வேறு செக்ஷனுக்கு தன்னை மாற்றிக் கொண்டு தன்னைப் பார்ப்பதை தவிர்க்க ஆரம்பித்தது அவளுக்கு என்னவோ போல் தான் இருந்தது.

மூன்றாம் நாள் தற்செயலாய் அலுவலக காரிடாரில் இருவரும் எதிர் எதிராய் வரும் சூழ்நிலை அமைந்தபோது கூட சற்றும் அவளைக் கவனியாதது போல் விடுவிடு வென குனிந்த தலையுடன் அவளைக் கடந்தான் உதய சந்திரன்.



அப்படிக் கடக்கும்போது கம்பீரமான அவன் முகத்தில் தெரிந்த அந்த என்றுமில்லாத இறுக்கத்தை அவள் விழியோர மை விழிகள் கவனிக்கத் தவறவில்லை.

அதற்குப் பின் வேலை விஷயமாய் இன்னொரு சமயம் இருவரும் ஒரே அறையில் ஏதோ குறிப்புகளை தேடும் போதும் சற்றும் சலனமில்லாமல் அவன் பாட்டுக்கு அவன் வேலையை கவனித்து விட்டு அகன்றான்.

வாணிக்கு ஒரு கணம் உள்ளுக்குள் சங்கடமாயும் இருந்தது. பிறவிப் பணக்காரன், பொறுப்பான பதவியில் இருப்பவன் அவனைப் போய் தெருப் பொறுக்கி ரேஞ்சுக்கு தரம் இறக்கி சற்று அதிகப்படியாய் திட்டி விட்டோமோ.. என தவிப்பாய் குமைந்தாள்.

நாசுக்காய் கொஞ்சம் உரைத்துப் புரியும்படியாய் சொல்வதை விட்டு விட்டு அவசரப்பட்டு தரக்குறைவாய் பேசி அவன் மனதை நோகடித்து விட்டோமோ.. எனவும் அவள் நினைப்பு ஓடியது.




உதயசந்திரன் அப்படி விலகிப் போனதில் ஒரு பக்கம் கஷ்டமாய் உணர்ந்தாலும் மறுபுறம் வாணிக்கு

அமைதியாகவும் இருந்தது. எவ்வித மனச்சலனமும் சங்கடமும் இல்லாமல் அலுவலகத்திலும் டான்ஸ் ஸ்கூலிலும் நடமாட முடிந்தது.

எல்லாவற்றையும்விட இந்த அன்பான வீட்டில் ப்ரியமான சூழ்நிலையில் எப்போதும் இருக்கலாம் என்ற நிம்மதியும் வந்தது. மேலும் டான்ஸ் ஸ்கூலில் உடன் வரும் அண்ணி மாலினி தினமும் அவளை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தாள்.

"இன்னும் மூன்று மாதத்தில் உன் பிறந்த நாள் வருகிறது அல்லவா? அன்று பிரமாதமாய் பிரும்மாண்ட மாய் உனக்கு விழா எடுத்து நடன அரங்கேற்றம் பண்ணி விடுவோம்..." என்று மாலினி சொன்னபோது வாணி திகைக்கத்தான் செய்தாள்.

"என்ன எனக்கா.. என்ன அண்ணி சொல்கிறீர்கள்?" என வியந்தவளின் வாயை அடக்கினாள் அவள். "இதில் வியப்படைய என்ன இருக்கிறது வாணி? முறைப்படி நடனம் பயின்ற பின் ஒரு நல்ல நாள் பார்த்து அரங் கேற்றம் செய்வதுதானே முறை. அதனால் அதை ஒரு விழா போல் எடுத்து கொண்டாடி விடுவோம்..."

"ஐயோ. அதெல்லாம் வேண்டாம். அண்ணா ஒரு போதும் ஒத்துக் கொள்ள மாட்டார்..."

"அட.. நீ.. சும்மா இரு..!" என மாலினி ஒரு அதட்டு போட்டவள், "உன் அண்ணனைப் பற்றி எனக்குத் தெரியாதா? அவரிடம் எப்படி சம்மதம் வாங்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீ.. உன் பயிற்சியைக் கவனி.. டான்ஸ் ஸ்கூலில் ஆடிப் பார்த்தால் மட்டுமே போதாது வீட்டிலும்



வந்து கொஞ்சம் பயிற்சி எடுக்க வேண்டும். நடன அசைவுகள் சரியாக வருகிறதா என்று செய்து பார்க்க வேண்டும்..." என சொன்னதோடு நிற்காமல் இரவு நேரங்களில் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்று அவளை 'ப்ராக்டிஸ்' செய்யவும் வைத்தாள்.

வாணிக்கே அண்ணியின் ஈடுபாடு தன் முன்னேற் றத்தில் அண்ணி காட்டும் அக்கறை மலைப்பாய் ஆச்சரியப்படுத்தும்படி இருந்தது. ஓரிரு சமயம் அடக்க முடியாமல் வாய்விட்டு கேட்டபோது கூட, "என்ன வாணி இது கூடவா புரியவில்லை? இவ்வளவு நடன ஆசை களும் கனவுகளும் எனக்கு இருந்ததுதான். என்ன அவை கள் நிறைவேற முடியாதவைகளாய் கனவுகளாகவே எனக்குப் போயிற்று. அதனாலேயே அவைகளை உன் மூலமாக நடத்தி வைத்து ஆசை தீர ஆனந்தம் கொள் கிறேன்" என்பாள்.

வாணியும் விடாது, "என்ன நானும் நீங்களும் ஒன்று தானா? என்னை உங்களாகவே நீங்கள் எண்ணிக் கொள் கிறீர்களா? அவ்வளவு பிரியமா என் மேல் உங்களுக்கு?" என்றபோது, "இருக்காதா.. பின்னே..? நீ.. யார்..? என் செல்லமான அன்பு மைத்துனி அல்லவா?" என்று வாணியை இறுக கட்டிக் கொண்டு மாலினி சொல்லும் போது அப்படியே அவள் பாசத்தை எண்ணி மனம் குளிர்ந்துதான் போவாள் வாணி.

அண்ணியின் இந்த பாசத்தை அடக்க முடியாமல் அண்ணனைத் தனியே கூப்பிட்டுக் கொட்டுவாள் வாணி. அவனும் எல்லாவற்றையும் ரசித்துக் கேட்டு விட்டு ஆச்சரியம் கொள்வான். "உண்மைதான் வாணி, நான் கூட உனக்கு அண்ணியாய் வருகிறவள் எப்படி

இருப்பாளோ உன்னை எப்படி நடத்துவாளோ.. என பயந்து கொண்டிருந்தேன். ஆனால் அவள் உன் மீது காட்டும் அன்பைப் பார்த்தால் எனக்கே வியப்பாய் இருக்கிறது. மேலும்..''

''சொல்லுங்கள் அண்ணா...''

''உன் மீது இவ்வளவு அன்பைக் காட்டுகிறவள் அதில் கால் பகுதியையாவது என் மீது காட்ட மறுக்கிறாளே.. என்ற ஆதங்கமும் எனக்கு உண்டு...''

அவன் சொல்ல... புன்னகையுடன் தலையை படபட வென ஆட்டினாள் வாணி.

''அதுவும் எனக்குத் தெரியும். அது பற்றியும் மாலினி யிடம் நீ சொல்வதற்கு முன்பே கேட்டிருக்கிறேன். அதற்கு அண்ணி என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா?''

''என்ன சொன்னாள்?'' என்றான் சுகேசன் ஆவலாய்.

''எல்லாம் உன் சிடுசிடு சுபாவம் தான். எப்போதும் கடுகை போட்டாற் போல் நீ வெடித்துப் பேசுவது அண் ணிக்கு பயமாக இருக்கிறதாம். அதனாலே உன்னைப் பார்த்ததுமே சில சமயம் நடுக்கம் கூட வந்து விடுகிற தாம்...''

''ஓஹோ! இப்படியெல்லாம் வேறு உன்னிடம் புளுகி யிருக்கிறாளோ..? வரட்டும்.. அவள்.. அவளை இன்று ஒரு வாங்கு.. வாங்குகிறேன்...'' என்று சுகேசன் பற்களைக் கடிக்காத குறையாய் கோபப்பட அவன் தலையை செல்லமாய்க் குட்டி கலகலவெனச் சிரித்தாள் வாணி.

''பார்த்தாயா... பார்த்தாயா...? இந்தக் கோபம்தான்.. இந்த சிடுசிடுத்தனம்தான் உன்னை ரொம்பவும் சிறுமைப் படுத்துகிறது. அண்ணியை உன் மீது பயம் கொள்ள



வைக்கிறது. இதை முதலில் நீ நிறுத்து.. நிறுத்த வேண் டும்...'' என்றாள் வாணி.

அவள் கேட்டதற்கு பலஹீனமாய் தலையை அசைத் தான் சுகேசன்.

''இல்லை... வாணி.. அது.. என்னால் முடியாத விஷயம்.. இந்த சிடுசிடுத்தனம் நான் செய்வது இல்லை... என் சுபாவமே அப்படித்தான்...''

''ம்ஹூம்..! அப்படியெல்லாம் சொன்னால் நான் விட்டு விடப் போவதில்லை. நான் மாற்றுவேன். உன்னை மாற்றிக் காட்டட்டுமா?''

''எப்படி வாணி அது?''

''நான் சொல்கிறபடி தினமும் செய். உன் சிடுசிடுத் தனம் மறைந்து விடும். நீ புன்னகை மன்னனாய் மாறி விடுவாய்...''

''நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்...!''

''வேறொன்றுமில்லை. தினமும் கண்ணாடி முன் நின்று ஒரு ஐந்து நிமிடம் ஒதுக்கி நீ அதைச் செய்ய வேண்டும்...''

''எதை வாணி?''

''வேறு எதை? சிரிப்பதைத்தான்...!''

''என்ன சிரிப்பதையா?''

''ஆமாம். கண்ணாடி முன் நின்று வெவ்வேறு வகை யில் வித விதமான கோணங்களில் நீ சிரிக்க வேண்டும். பற்கள் தெரிய நன்றாகச் சிரித்துப் பழக வேண்டும்...''

வாணி சொல்ல சுகேசன் கண்கள் விரித்து அவளை உற்றுப் பார்த்தான். ''நீ விளையாடவில்லையே... நிஜ மாகத்தானே சொல்கிறாய்?''

''ஐயோ! நிஜம் அண்ணா.. ஒரு புத்தகத்தில் இது பற்றி விரிவாக எழுதி விளக்கியிருந்தார்கள். நீ மட்டும் கொஞ்ச நாட்கள் செய்து பார். உன் சுபாவத்தில் நல்ல மாற்றங்கள் தெரியும்.''

வாணி சொல்ல பதிலுக்கு வேகமாய் தலையை ஆட்டினான் சுகேசன்.

''நீ.. சொல்லி விட்டாய் அல்லவா..? பார்... நாளைக்கே இந்தப் பயிற்சியை ஆரம்பித்து விடுகிறேன்..'' எனச் சொன்னவன் சொன்னபடியே மறுநாள் முதல் பயிற்சியை ஆரம்பித்து விட்டான்.

தினம் காலை எழுந்ததும் தனியே போய் கண்ணாடி முன் நின்று சத்தம் வராமல் தன் முகத்தை அப்படியும் இப்படியுமாய் அஷ்டகோணலாக்கி சிரிக்க ஆரம்பித்தான். சிரித்துப் பழக ஆரம்பித்தான்.

அப்படி அவன் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் கண்ணாடி முன் நின்று சிரிப்புப் பயிற்சி எடுப்பதைப் பார்த்த மாலினிக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. ''வாணி.. இங்கு வந்து பார்! ஒரு புன்னகை மன்னன் நின்று கொண்டு என்னமாய் சிரிக்கிறார் பார்!'' என கிசுகிசுக்க ஓடி வந்து பார்த்த வாணிக்கும் பொங்கிய சிரிப்பை அடக்க முடியவில்லை.

இருவரும் குலுங்காத குறையாய் சிரிக்க திரும்பிப் பார்த்த சுகேசன் அசடாய் அசட்டுப் புன்னகை புரிந்தான்.

அன்றிலிருந்து மாலினி சுகேசனுக்கு 'புன்னகை மன்னன்' என்ற பட்டமும் கொடுத்து விட்டாள்.

தினம் வாணியிடம் பேசும் போது இன்று நம் புன்னகை மன்னன் என்னிடம் இரண்டு முறை சிரித்தார். இன்று மூன்று முறை சிரித்தார் என சொல்வது, கிண்டலடிப்பது வாடிக்கையாயிற்று.



அப்படி சுகேசன் சிரித்துப் பேச முயன்றது கூட செயற்கையான ஒன்றுதான் என மாலினிக்கு தெரிந்து விட்டதால் அவள் சுகேசன் சிரிப்பதை பெரிதாய் நினைக்கவில்லை. அவன் சிடுசிடு சுபாவத்தை மாற்ற முடியும் என நம்பவும் இல்லை.

இருந்தாலும் வாணிதான் விடாது, ''அண்ணி, நீங்களும் அண்ணனிடம் சிரிக்கச் சிரிக்க பேசுங்கள். அண்ணன் தன் சுபாவத்தை மாற்றி விடுவார்...'' என நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

அதற்கும் மாலினி விடாது,

''உனக்கு நானும் அவரும் சிரிக்க வேண்டும். அவ்வளவுதானே? கவலையை விடு. இன்று கடைத் தெருவுக்குப் போய் நல்ல ஜோக் புக் ஒன்று வாங்கி வந்து விடுகிறேன். அதை இருவரும் இரவு உட்கார்ந்து படித்து விழுந்து விழுந்து சிரிக்கிறோம். சரியா!'' என்பாள் அதே கேலியோடு.

இப்படியாக சிறு சச்சரவுகள், பெரும் சிரிப்பலைகள் என ஆனந்தமாய் போய்க் கொண்டிருந்த குடும்பச் சக்கரத்தில் திடும்மென ஒரு புயல் மாலினி உருவத்தில் உள்ளே நுழைந்தபோது வாணி திகைத்துதான் போனாள்.

அதிலும் டான்ஸ் ஸ்கூலில், அந்த முரட்டு இளைஞன் ஒருவனுடன் மாலினி கூத்தடிக்காத குறையாய் சிரிக்கச் சிரிக்கப் பேசுவது கண்டு அரண்டுதான் போனாள்.




வாணி அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. டான்ஸ் ஸ்கூலில் ரிகர்சல் பயிற்சி ஒன்று முடிந்து தற்செயலாய் அவள் வெளிவந்தபோது முன்புற ரிசப்ஷன் அறையில் மாலினியுடன் அந்த முரட்டு இளைஞன்! இருவரும் சேரில் நெருக்கமாய் அமர்ந்து கொண்டு சிரிக்கச் சிரிக்கப் பேசியபடி,

அதைப் பார்த்த அவளுக்கு ஒரு கணம் ஒன்றும் ஓடவில்லை. அண்ணி மாலினி இப்படி ஒரு அந்நிய ஆணுடன் பேசிக் கொண்டு..? பேசும் விதத்தைப் பார்த்தால் இருவரும் ரொம்ப நாள் பழகியதைப் போல் அல்லவா இருக்கிறது? யாரது? நமக்குத் தெரியாமல் இந்த டான்ஸ் ஸ்கூலில் நடமாடும் அந்த நபர் யாராக இருக்கும்?

வாணி யோசித்தபடி வந்தவள் அண்ணி முன் போய் நின்று படபடவென கேள்விகளால் துளைக்கத்தான் நினைத்தாள். ஆனால் சட்டென அப்படி அவசரப்பட வேண்டாம் என இன்னொரு மனது தடுத்தது. ஒரு வேளை... யாராவது உடன் படித்தவரோ... அல்லது தூரத்து உறவினராகவோ கூட இருக்க வாய்ப்பிருக்கிறது. நாம் எக்குத் தப்பாய் கேட்டு அண்ணியை சங்கடப்படுத்தி விடக் கூடாது.

என்று நினைத்த வாணி அதே நினைப்புடன் தன் ஹாண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு முன்புற ரிசப்ஷன்



பகுதிக்கு அவர்களைக் கவனியாதது போலவே பார்வையை எங்கோ வைத்துக் கொண்டு வந்தாள்.

மாலினி சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டிருந்தவள் நிமிர அப்போதுதான் வாணி வருவதைக் கவனித்து விட்டாள். சட்டென அவள் முகம் மாறி பேச்சை நிறுத்தியவள் பேசிக் கொண்டிருந்த இளைஞனிடம் வாணி வருவதைச் சுற்றிக் காட்டி சைகை செய்ய மறு நிமிடம் பதிலேதும் சொல்லாமல் விருட்டென எழுந்து போனான் அவன்.

வாணி ஓரக் கண்களால் இவை அனைத்தையும் கவனித்து திடுக்கிடவே செய்தாள். அண்ணி பக்கம் சென்றதும் அந்த இளைஞன் யார்.. என்னவெனக் கூறி அறிமுகப்படுத்துவாள் என நினைத்தவளுக்கு மாலினி அப்படிச் செய்தது திகைப்பையே அதிகப்படுத்தியது.

அவளை மேலும் யோசிக்க விடாதபடி மாலினி இருக்கையில் இருந்து எழுந்து உற்சாகமாய் ஓடி வந்தாள். ''என்ன வாணி அதற்குள் பயிற்சி முடிந்து விட்டதா?'' என்றாள் இயல்பான குரலோடு.

வேகமாய் பதிலுக்கு தலையாட்டிய வாணி அந்த இளைஞன் விறுவிறுவென எதிர்புற கதவொன்றை திறந்து கொண்டு டான்ஸ் ஸ்கூலின் மற்றொரு அரங்கப் பிரிவிற்கு செல்வதை கவனித்தாள். அங்கு வெஸ்டர்ன். பாலே போன்ற மேல் நாட்டு நடன பயிற்சிகள் நடப்பதாக அறிந்திருக்கிறாள். அப்படியானால் அந்த இளைஞன். அது போன்று எதாவது பயில வந்தவனாய் இருக்கக் கூடும். ரிசப்ஷனில் தனியே உட்கார்ந்திருக்கும் மாலினியைப் பார்த்ததும் எதாவது ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசியிருக்கக் கூடும்.

வாணி இப்படி சமாதானமாய் நினைத்துப் பார்த்தாலும்... மனது நம்ப மறுத்தது. இருவரும் பேசிய நிலை... சிரிக்கச் சிரிக்கப் பேசிய பாங்கு... இது.. இது... பல நாள் பழகியது போல் அல்லவா இருந்தது. இது எப்படி சாத்தியம்?

வாணி அதே சிந்தனையுடன் நடக்க உடன் நடந்த மாலினியோ அவள் கவனத்தைத் திருப்பும் வகையாய் இன்று பயிற்சியில் என்ன நடந்தது என்ன அசைவுகளை சொல்லிக் கொடுத்தார்கள் என நச்சரித்துக் கொண்டிருந்தாள். வாணி அதற்குப் பதில் சொன்னாலும் மாலினி தானாகப் பேசிக் கொண்டிருந்த அந்த இளைஞன் பற்றி சொல்கிறாளா என கவனிக்கத்தான் செய்தாள்.

ஆனால் வீடு வந்து சேரும் வரை மாலினி வேறு ஊர்க் கதைகளைத் தேடிப் பிடித்து வம்பளந்து கொண்டிருந்தாளே தவிர.. அந்த இளைஞன் பற்றி மட்டுமே வாயே திறக்கவில்லை.

வாணியும் சரி.. இது சிறு விஷயம் பெரிது படுத்தக் கூடாது என்று அத்தோடு விட்டு விட்டாள். ஆனால் இரண்டு நாள் கழித்து அதே டான்ஸ் ஸ்கூலில் அவள் பார்த்த காட்சி அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

அன்றும் வழக்கம் போல் மாலை அண்ணியுடன் டான்ஸ் ஸ்கூலுக்கு கிளம்பிச் சென்றாள். டான்ஸ் ஸ்கூல் முகப்பு ரிசப்ஷன் பகுதியில் மாலினியை உட்காரச் சொல்லி விட்டு தான் பயிலும் நடன அரங்கிற்குச் சென்று விட்டாள்.

அன்று அலுவலகத்தில் வேலைப்பளு அதிகமாய் இருந்த காரணத்தினால் அவளுக்கு களைப்பாகவும் இருந்தது. அதனாலே அரை மணி நேர பயிற்சி முடிந்ததும் டான்ஸ் பெண்மணியிடம் தலை வலிப்பதாய் கூறி அரை மணி நேரத்திற்கு முன்னதாகவே நடன அரங்கை விட்டு வீட்டிற்கு கிளம்பி விட்டாள்.



அரங்கை விட்டு வெளி வந்தவள் ரிசப்ஷன் பகுதிக்கு வர.. அங்கு மாலினி இருந்த காட்சியைக் கண்டு திடுக்கிட்டே விட்டாள். மாலினி அந்த முரட்டு இளைஞனோடு நெருக்கமாய் இருக்கையில் உட்கார்ந்திருக்க.. அந்த இளைஞன் தனது கரங்களால் மாலினியின் தோளை இறுகப் பற்றி ஏறக்குறைய அவளை அணைத்திருந்தான். இருவரும் முன்பு போல் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டு!

என்ன... இது கோலம்? நம் அண்ணனின்... மனைவி அண்ணி... இப்படி இன்னொரு ஆடவனோடு நெருக்கமாய்.. சிரித்துப் பேசியபடி...?

சட்டென சினமானவள் இனியும் பொறுக்க முடியாது... மாலினியிடம் கேட்டு விட வேண்டும் என்பது போல மாலினியை கண்கள் விரியப் பார்த்துக் கொண்டே விறுவிறுவென ரிசப்ஷன் பகுதியில் நுழைய... மாலினியும் அப்போதுதான் தற்செயலாய் திரும்பியவள் வாணி வருவதைக் கவனித்து விட்டாள்.

சீக்கிரமாக பயிற்சி முடிந்து வந்து விட்டாளே.. என திகைத்தவள் அதைவிட மாலினியின் பார்வையில் இருந்த கேள்வியைக் கண்டு ஒரு கணம் மிரளத்தான் செய்தாள்.

இருந்தாலும் சட்டென சுதாரித்தவளாய் அந்த முரட்டு இளைஞனை ஒரு அர்த்தமான பார்வை பார்க்க.. அவன் முன்பு போலவே விருட்டென எழுந்து விறுவிறுவென அங்கிருந்து அகன்றான்.

வாணி இம்முறை தாமதியாமல் அகலும் அவனை மாலினியிடம் சுட்டிக் காட்டி, ''அண்ணி யார் இது...? உங்களோடு இப்படி பேசிக் கொண்டு...?'' எனச் சற்று கோபமாகவே கேட்டாள்.

ஆனால் மாலினி பதிலுக்குக் கலகலவென நகைத்து, ''ஓ.. அதுவா..? அது வேறு ஒன்றுமில்லை வாணி... அவர்.. அவர்.. இங்கு டான்ஸ் ஸ்கூலில் வெஸ்டர்ன் நடனப் பயிற்சி பயில வந்திருக்கிறாராம். ரிசப்ஷனில் உட்கார்ந்திருக்கும் என்னைப் பார்த்ததும் நான் டான்ஸ் ஸ்கூலின் நடன ஆசிரியை என நினைத்து என்னிடம் கேள்விகளாய் கேட்க... நான் அடக்க முடியாமல் சிரித்து விட்டேன்... நான் நடன ஆசிரியை அல்ல.. உனக்காகக் காத்திருக்கும் பெண்மணி என்பதை கடைசியில் உணர்ந்த அவரும் தனது அறியாமையை நினைத்துச் சிரித்து விட்டுப் போகிறார்... அவ்வளவுதான்...!'' மாலினி ஒரு விதமாய் குரலை ஏற்றி இறக்கி கதை போலவே சொல்லி முடித்தாள்.

வாணிக்கு அவள் பொய்தான் சொல்கிறாள் என்பது நன்றாகவேத் தெரிந்தது. அவள்தான் இருமுறை அவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதைப் பார்த்து விட்டாளே..! அதிலும் இந்த முறை அந்த இளைஞன் மாலினியை உரிமையாய் தோளோடு அணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பதை அவள் நேருக்கு நேர் கண்டு விட்டாளே!

ஆனாலும் தான் சொல்வது சத்தியமான உண்மை போல் தலையை வெகுவாய் ஆட்டி ஆணித்தரமான குரலில் பேசிய மாலினியின் நடவடிக்கை அவளை அதிரவே செய்ய வைத்தது. எதற்காக அண்ணி பொய் சொல்ல வேண்டும்? யாரவன்? அவனுக்கும் அண்ணிக்கும் சிரித்துப் பேசும் அளவுக்கு என்ன தொடர்பு... என்ன ரகசியம்..?



எத்தனையோ கேள்விகள் மனதைக் குடைந்தாலும் வாணியால் சட்டென மாலினியிடம் எல்லாவற்றையும் கேட்டுவிட முடியவில்லை.

மாலினி எதுவும் நடைபெறாதது போல் அவளுடன் வழக்கமான நடை நடந்து கொண்டு ஊர்க்கதை யொன்றை தேடிப் பிடித்து சளசளத்துக் கொண்டிருந்தாள்.

அவள் பேச்சை மாற்ற இப்படியெல்லாம் பேசுகிறாள் என்பது புரிந்தது. நேரிடையாக அந்த இளைஞன் பற்றி இன்னும் துளைத்துக் கேட்கலாம். ஆனால் அதற்கும் இந்த மாலினி எதையாவது பொய்யைத்தான் சொல்லி சமாளிப்பாள் என்றும் வாணி உணர்ந்தாள். அதனாலே மாலினியின் பேச்சுகளுக்கு வெறும் உம் கொட்டியவாறு தீவிர சிந்தனையுடன் நடந்தாள்.

வீட்டில் இதை யாரிடமும் சொல்லி யோசனை கேட்கலாமா என நினைத்தவள் மறுகணமே அந்த எண்ணத்தை துடைத்தாள். அண்ணனிடமோ அம்மாவிடமோ முழுமையாக இது பற்றி தெரியாமல் விவாதிக்க முடியாது என்பதால் முதலில் தீரமாய் விசாரித்து அந்த இளைஞன் யார். மாலினிக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என முடிவிற்கு வந்தாள்.

ஆனால் இரண்டு நாள் கழித்து டான்ஸ் ஸ்கூலில் மறுபடியும் அப்படி ஒரு சம்பவம் நடக்க அரண்டுதான் போய் விட்டாள் வாணி.




**வா**ணிக்கு அது பெரும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இரண்டு நாள் கழித்து ரிசப்ஷன் பகுதியில் நடன வகுப்பு முடியும் முன்னரே தற்செயலாய் வந்து மாலினி என்ன செய்கிறாள் என்பதை நோட்டமிட வந்த வாணி அரண்டு தான் போனாள்.

மாலினி இம்முறை கொஞ்சம் ஓவராய் அந்த இளை ஞனின் மடியில் காதலி போல் படுத்தபடி பேசிக் கொண்டு! என்ன இது கொடுமை! கல்யாணமான ஒரு பெண் இன்னொருவனின் மடியில் ஹாய்யாய் படுத்தபடி.. சிரித்து பேசிக் கொண்டு..

நம்ப முடியாதவளாய் அந்தக் காட்சியை மறுபடி மறுபடி உற்றுப் பார்த்தாள். மாலினி முகத்தில் எவ்வித பயமோ பதட்டமோ இல்லாமல் யாரையும் சட்டை செய்யாத ஒரு சுபாவமே தெரிந்தது. அவள் எதிலும் கவனம் கொள்ளாது அந்த முரட்டு இளைஞனின் முகத்தையே பார்த்து பேசிக் கொண்டிருக்க... பதிலுக்கு அவனும் அவள் முகத்தை அடிக்கடி கைகளால் தொட்டு வருடியபடியே பேசிக் கொண் டிருந்தான். அவர்கள் பேசிய விதமும் குபுகுபுவெனச் சிரிக்கும் பாங்கையும் கவனித்த வாணி... இது நிச்சயம் ஓரிரு நாட்களில் வந்த பழக்கம் அல்ல... வெகு நாளாய் ஏற்பட்டதால் வந்த பழக்கமே என்பதை உணர்ந்தாள்.



ஆனாலும் மாலினியா இப்படி.. என நம்ப முடியாமல் அவள் உடம்பே நடுங்கியது. எழுந்த நடுக்கத்தை அழுந்த உதட்டைக் கடித்து நிறுத்தியவள் இப்போது என்ன செய்வது... உள்ளே செல்வதா அவர்களை கையுங் களவுமாய் பிடிப்பதா? எனப் புரியாமல் தவித்தாள்.

என்ன செய்தாலும் மாலினி உடனே ஒப்புக் கொள்ளப் போவதில்லை. அதற்கும் ஏதாவது ஒரு பொய்யான காரணத்தைச் சொல்லி தப்பித்துக் கொள்ளத்தான் பார்ப்பாள். மேலும் உண்மையான காரணத்தை நாம்தான் முயற்சி செய்து கண்டுபிடிக்க வேண்டும். மாலினி வாயில் இருந்து நிச்சயம் வரவழைக்க முடியாது.

யோசித்த வாணி ரிசப்ஷன் பகுதியில் நுழைய தான் வைத்த கால்களை பின்னுக்கு இழுத்தாள். இது சமயமல்ல என்பது போல் மெல்ல திரும்பினாள். ஆனால் அவள் அப்படித் திரும்பும் வரை மாலினியோ அந்த இளை ஞனோ அவள் வந்ததையோ அவர்களை அந்தக் கோலத் தில் பார்த்துச் சென்றதையோ கொஞ்சமும் உணராமல் சுவாரஸ்யமாய் பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் பேச்சு எதைப் பற்றியது என வாணி காதைத் தீட்டியும் அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை. பேச்சை விட அதிர வைக்கும் மாலினியின் சிரிப்புச் சத்தமே பெரிதாய் கேட்டது.

என்னவோ ஒரு விபரீதம் ஏதோ ஒரு சூழ்ச்சி இருப்ப தாகவும் வாணிக்குத் தோன்றியது. அந்த நிலையில் வாணிக்கு சூழ்ச்சியின் சிகரமாய் மகாபாரதத்தில் வரும் காட்சியொன்று தான் ஞாபகத்திற்கு வந்தது.

மகாபாரதத்தில் திருதராஷ்டிரன் துரியோதனனை மன்னனாக்கும் ஆசையில் பாண்டவர்களை ஊரை விட்டு

வெளியேற்ற முடிவு செய்கிறான். அதற்காக சகுனியில் அமைச்சனான கனிகன் என்பவன் ஆலோசனைப்படி யுதிஷ்டிரனையும் பாண்டவர்களையும் வாரணாவதம் என்ற நகருக்குச் சென்று ஓய்வெடுத்து வரும்படி ஆலோசனை சொல்கிறான்.

இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்பதை பாண்டவர்கள் உணர்ந்தாலும், பெரிய தந்தையான திருதராஷ்டிரனின் வார்த்தைகளை தட்டி நடப்பதற்கு விருப்பமில்லாமல் அவர் சொல்படி வாரணாவதம் செல்கின்றனர்.

அங்கு வாரணாவதத்தில் அவர்கள் தங்குவதற்காக புரோசனன் என்பவன் மூலம் அழகிய மாளிகை ஒன்று வடிவமைக்கப்பட்டது.

அந்த மாளிகையில்தான் துரியோதனின் விருப்பப்படி ஒரு பெரிய சூழ்ச்சியும் அரங்கேறியது. அதாவது அந்த மாளிகை, குங்கலியம், எண்ணெய், மெழுகு, கொழுப்பு, அரக்கு என இவற்றோடு மண்ணினைக் கலந்து ஒரு அரக்கு மாளிகையாக உருவாக்கப்பட்டது. அதனால் ஒரு சிறு நெருப்புப் பொறி பட்டாலும் மாளிகை முழுவதும் குபீரென எளிதில் தீப்பற்றி விடும். மாளிகையின் உள்ளே இருப்போர் யாரும் எளிதில் தப்பிக்க முடியாது போல் அதன் விசேஷ விபரீத அமைப்பு அப்படியொரு சூழ்ச்சி வியூகம் அமைத்து பாண்டவர்களைக் கூண்டோடு ஒழித்துக் கட்ட நினைத்தான் துரியோதனன்.

அதுபோல்தான் மாலினியும் அவள் பழகுவதைப் பார்த்தாலும் மனதிற்குள் ஒரு பெரும் சூழ்ச்சி வியூகம் வகுத்து விபரீதம் ஒன்றிற்கு தயாராகுவது போல் வாணிக்குப் பட்டது.



அன்று கிளாஸ் முடிந்து வெளிவந்து எதுவும் நடவாதது போலவே மாலினியுடன் வீடு நோக்கி நடந்தாள். வழக்கம் போல் மாலினியுடன் பேசாமல் வந்தாலும் அவள் மாலினி விடாது ஏதாவது பேசி சளசளத்துக் கொண்டிருந்தாள். இந்த பேச்சு செயற்கையாய் தனது கவனத்தை திசை திருப்பும் பொருட்டு மாலினி பேசுகிறாளோ எனவும் வாணி நினைத்தாள்.

அன்று இரவு முழுவதும் தூங்காமல் நெடுநேரம் யோசித்த வாணி மறுநாள் ஒரு வழி செய்தாள். அன்று மாலை வேலை முடிந்து வந்தவள் வேண்டுமென்றே, "தலை வலிக்கிறது. இன்று டான்ஸ் ஸ்கூலுக்கு லீவு. போக வேண்டாம்.." என மாலினியிடம் பொய் கூறிய போது அவள் முகம் போன போக்கு! பதறத்தான் செய்தாள் அவள்.

"என்ன.. வாணி.. இது.. நடப்பதோ ஒரு மணி நேர கிளாஸ்.. அதற்கும் தலைவலி அது இதுவென லீவு போட்டு விட்டால்.. பின் பயிற்சி எப்படி நடக்கும்? நம் நடன அரங்கேற்றக் கனவு எப்படி பலிக்கும்..? நல்ல தலைவலி தைலம் ஒன்று வைத்திருக்கிறேன். அதை தேய்த்து விட்டால் வலி சிட்டாய்ப் பறந்திடும். நீ கிளம்பு" என்றபடி மாலினி தைலப் புட்டியை எடுத்துக் கொண்டு தேய்க்கவே வந்து விட்டாள்.

வாணிக்( ) அவளது இந்த பிடிவாதம் திகைக்க வைத்து சந்தேகத்தை வலுப்படுத்தியது. தலைவலி என்றால் விட்டு விடாமல் இந்த வரத்து வருகிறாளே.. அப்படியானால்..? அண்ணிக்கு எப்படியாவது அந்த டான்ஸ் ஸ்கூலுக்குப் போயாக வேண்டும். போய் அந்த முரட்டு இளை

ஞனைப் பார்த்துப் பேசியாக வேண்டும். அதற்காகத்தான் இப்படி பரபரக்கிறாளோ?

அவள் நினைத்தது போலவே அதற்குள் புட்டியில் இருந்து தைலத்தை எடுத்து பரபரவென அவள் நெற்றியில் நீவிக் கொண்டிருந்தாள் மாலினி. "இன்னும் ஐந்து நிமிடங்களில் பார். வலி போய் விடும்..!" என்று மாலினி சொன்ன போது, 'வலி போகவில்லை...' என்ற பதிலை உதடுகளுக்குள் தயாராய் வைத்திருந்தாள் வாணி.

அன்று அதே வலியைக் காரணம் காட்டி பிடிவாதமாய் டான்ஸ் ஸ்கூலுக்கு மட்டம் போட்டு விட்டாள் வாணி. ஆனால் மாலினியால் தான் தாங்க முடியவில்லை. அன்று முழுவதும் எரிச்சல் கொண்டவளாய் எந்த வேலையிலும் லயிப்பு இல்லாதவளாகவே நடமாடினாள்.

அவளது நடவடிக்கை மூலம் வாணிக்கு நன்றாகப் புரிந்து போயிற்று. மாலினி இன்று அந்த இளைஞனை சந்திக்க முடியாமல் பேச முடியாமல் போனதற்காகத்தான் இந்த எரிச்சலும் கோபமும் கொள்கிறாள். அப்படியானால்...?

இவர்கள் இருவருக்கும் இடையே என்ன விதமான உறவு..? காதலன் போன்ற தொடர்பா? கடவுளே.. கல்யாணமான பெண் ஒருத்தி செய்கிற விஷயமா... இது?

யோசித்த வாணிக்கு தன் மூலம் இப்படிப்பட்ட ஒரு விபரீதம் அரங்கேற ஆரம்பித்து விட்டதைத்தான் சகிக்க முடியவில்லை. இதை எப்படி தடுப்பது... எப்படியாவது உடனடியாக நிறுத்தியாக வேண்டுமே? என்ற நினைப்பு ஓடியது.

அன்று அலுவலகத்திலும் இதே நினைப்புடன் வேலைகளில் லயிப்பில்லாமல் பொழுதைக் கழித்தாள்.



பேசாமல் டான்ஸ் பயின்றது போதும். எனக்கு இப்போது பிடிக்கவில்லை. என டான்ஸ் ஸ்கூலுக்குப் போவதையே நிறுத்தி விடலாம். அதுவும் நல்ல யோசனைதான். என்ன... மாலினி சொல்கிறாய்... டான்ஸ் ஸ்கூலுக்குப் பணத்தைக் கட்டி விட்டுப் போகவில்லை என்றால் எப்படியெனக் கூட வாதிடுவாள்.

ஆனால் அதைக் கூட பிடிக்கவில்லை என பிடிவாதம் பிடித்து இரண்டு மூன்று நாளில் நிறுத்தி விடலாம். அப்படிச் செய்தால் மட்டும் அத்தோடு பிரச்சினை முடிந்து விடாது. மாலினி தினமும் மார்க்கெட் போகிறேன், லைப்ரரி செல்கிறேன் என எதையாவது சொல்லிக் கொண்டு அடிக்கடி வெளியில் சுற்றுபவள் தான்!

கல்யாணம் ஆன முதல் மாதம் முதற்கொண்டே அப்படியொரு பழக்கத்தை அவள் தனக்கென வாடிக்கை போல் ஆக்கிக் கொண்டாள். அண்ணனும் சரி அவளது சுபாவமே அப்படி.. அவளால் வீட்டுக்குள் அடைந்து கிடக்க முடியாது என்பது போல் விட்டு விட்டான்.

அதனால் வாணி டான்ஸ் ஸ்கூல் போவதை நிறுத்தினாலும் மாலினி ஏதேதோ காரணங்கள் சொல்லி வெளியே கிளம்பத்தான் செய்வாள். அப்படி கிளம்புபவள் அந்த முரட்டு இளைஞனை சந்திக்க மாட்டாள். அவன் உடன் பேச மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?

டான்ஸ் ஸ்கூலிலாவது வாணியின் கண் பார்வையில் இந்தப் பழக்கம் நடக்கிறது. அது இல்லையெனில் இந்த மாலினி தனியாகப் போய் சந்திக்க ஆரம்பித்தால் பெரும் விபரீதமாகக் கூடப் போய் விடுமே!

தீவிரமாய் யோசித்த வாணிக்கு ஒரு விஷயம் தெளிவாய்ப் புரிந்தது. முதலில் அந்த இளைஞன் யார்?

அவனுக்கும் மாலினிக்கும் என்ன வகையான பழக்கம்? என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அதன் பின் தான் என்ன செய்வது என்பது பற்றி முடிவெடுக்க வேண்டும். அதுவரை அவசரப்படக் கூடாது. விஷயத்தைப் பொறுமையாகக் கையாள வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள் அவள்.

சரி. அந்த இளைஞன் பற்றி எப்படி விசாரிப்பது.. எப்படி தெரிந்துகொள்வது.. தன்னால் எப்படி அது முடியும் என அவள் குழம்பித் தவித்தபோது அவள் கண் முன்னே உதயசந்திரன் தான் நினைவிற்கு வந்தான்.




'உதயசந்திரன் தான் இதற்கு சரியான ஆள்...' என வாணி முடிவெடுத்து விட்டாள். ஆனால் அடுத்த கணம் தான் தான் அவனிடம் முகத்திலடித்தாற் போல் பேசியது, 'செருப்படிகள் விழும்..' என மிரட்டியது எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது.

அதிலும் அந்த உதயசந்திரன் சரியான கவரிமான் பரம்பரைதான் போலும். சூடு கண்ட பூனை போல அவள் இருக்கும் பக்கம் இருப்பதையே தவிர்த்து விட்டான்!

முதலில் அலுவலகத்தில் தனது செக்ஷனை மாற்றி அவள் கண்ணில் படாத மற்றொரு மூலையில் இருக்கும் உற்பத்தி பிரிவிற்குச் சென்று விட்டான். யதேச்சையாய்



ஆபீஸ் ரிசப்ஷனில், கேண்டீன் பக்கம் பார்க்க நேர்ந்தாலும் ஏதோ பார்க்கக் கூடாததைப் பார்த்தது போல் விறுவிறுவென தலையைக் குனிந்தபடி கடந்து விடுவான்.

அன்று கூட அவள் பஸ் ஸ்டாப் நோக்கி நடந்து கொண்டிருக்க... தற்செயலாய் ஷெட்டில் இருந்து வெளிவந்த அவனது கார் அவளைப் பார்த்ததும் அசுர வேகமெடுத்து ஓடோடிச் சென்றதை கண்களால் நன்கு கண்டாளே! கார் அவளைக் கடக்கும்போது அந்த ரோஷமான இஞ்சின் உறுமல் வேறு. நல்ல ரோஷம் தான்!

அவனது அந்த கண்ணில் படாமல் ஓடும் செய்கை அதிகப்படியாய் பேசி அவன் மனதை நோகடித்து விட்டோமோ.. என்ற கலக்கத்தையும் அவளுள் உண்டு பண்ணியது.

ஆனாலும் அவன் அவளை விடாது ரோமியோத்தனமாய் விரட்டி நடந்து கொண்டது தவறுதானே. அதற்கு இது போன்ற பதிலடி அவசியம்தானே என மனது சமாதானமும் பேசியது. கூடவே இந்த மாலினி விஷயத்திற்கு அவசர அவசரமாய் விசாரிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இந்த உதயசந்திரனை விட்டால் வேறு ஆள் இல்லை என முடிவுக்கு வந்தவள் மறுநாளே அலுவலக உணவு இடைவேளையின் போது அவனை தேடிப் போனாள்.

எந்த மூஞ்சை வைத்துக் கொண்டு அவன் முகத்தில் விழிப்பது..? என பயங்காட்டிய மனதை வேறு.. என்ன.. இருக்கிற மூஞ்சை வைத்துக் கொண்டு தான் எதிர்கொள்ள வேண்டும் என்ற தைரிய நினைப்புடன் விரட்டி அவன் முன்னால் போனாள்.

மதிய உணவை முடித்து லஞ்ச் பாக்ஸை மூடியபடி நிமிர்ந்த உதயசந்திரன் வாணி தன்னை நோக்கி வருவதைக் கண்டு திடுக்கிடவே செய்தான்.

அவளைப் பார்த்ததும் முகத்தில் ஓடிய இயல்பான புன்னகை மறைந்து கடுமையாகியது. ஊடுருவும் அவனது கரு விழிகள் பார்க்கக் கூடாததைப் பார்த்தது போல் ஸ்தம்பித்தது.

தன்னைக் கண்டதும் அவன் முகம் இறுகி ஒருவித வெறுப்புடன் அசூயையாய் மாறுவதைக் கவனித்த வாணி என்ன செய்ய... எப்படி பேச்சை ஆரம்பிக்க... என சங்கடமாகவே உணர்ந்தாள்.

எதோ ஒருவித அசட்டுத் துணிச்சலுடன் அவன் முன் போய் சட்டென நின்றவள் அவள் அனுமதி பெறாமலே அவன் முன் இருந்த இருக்கையில் அமர்ந்தாள். அவளது இந்த செய்கை உண்மையிலே அவனை அதிர வைத்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னை இந்த வாறு வாரி விட்டு... என்ன தைரியமாய் என் முன்னே வந்து இப்படி உட்கார்ந்து கொண்டு... கொஞ்சங்கூட சங்கோஜமில்லாமல்.. என்னைப் பார்க்க வேறு செய்கிறாயே... சரியான துணிச்சல்காரிதான் நீ என்பது போல் உதயசந்திரனும் கண்களை அகல விரித்து அவளை உற்றுப் பார்த்தான்.

வாணி அவ்வளவு தைரியமாய் சென்றவளுக்கு அவன் முன்னே உட்கார்ந்து தனது மை விழிகளால் நேருக்கு நேர் அவனை உற்றுப் பார்த்ததும் வார்த்தைகள் வராமல் உதடுகள் உலறத்தான் செய்தது.



ஓரிரு நிமிடங்கள் அப்படி மௌனமாய் கழிய உதய சந்திரனின் பார்வை நெற்றியைச் சுருக்கியபடி மேலும் அவளை சுட்டெரிக்க அவசரமான வார்த்தைகளில், ''உங்களிடம் ஒரு உதவி கேட்க வந்திருக்கிறேன்'' என்றாள் தட்டுத் தடுமாறி.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை போலும். சட்டென ஒன்றும் புரியாமல் விளித்து விட்டு கண்களை மூடித் திறந்தான். முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் ''என்ன உதவி?'' என்றான் பிசிறில்லாத குரலில்.

அப்பாடா.. வேறு எதுவும் கேட்டு சங்கடப்படுத்தாமல் நேரிடையாக விஷயத்திற்கு வந்து விட்டானே.. என வாணி பெரும் நிம்மதியடைந்தவள் மனப்பாரம் முழுவதும் நீங்கியவளாய் படபடவென மாலினி விஷயத்தைக் கொட்ட ஆரம்பித்தாள். மாலினியின் போக்கு, மாலினி அந்த முரட்டு இளைஞனிடம் பழகும் பாங்கு. தனக்கு அதனால் எழும் சந்தேகங்கள் என அத்தனையையும் விளக்கினாள்.

எல்லாவற்றையும் முகம் மாறாமல் பொறுமையாய் கேட்ட உதயசந்திரன், ''சரி இதில் நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றான் புரியாதவன் போல்.

வாணி அதற்கும் விளக்கினாள். ''உண்மையை மாலினி பற்றிய மர்மங்களை கண்டு பிடிக்க வேண்டும். அதற்கு நீங்கள் உதவ வேண்டும்.''

வாணி சொன்னதற்கு பதில் சொல்லாமல் மறுபடியும் கண்களை மூடி யோசனைக்குப் போனான் உதயசந்திரன்.

என்ன இவன் இப்படி யோசிக்கிறான்... இவன் யோசிப்பதைப் பார்த்தால் பழைய விஷயங்களை ஞாபகம் வைத்

துக் கொண்டு மறுத்து விடுவானோ? எனதான் வாணி பயந்தாள்.

அந்த நிலையிலும் முறுக்கு மீசையும் பரந்த நெற்றியும் பளபள சிகையுமாய் கம்பீரமாய்த் தெரியும், இந்த முகத்தையா செருப்படிகள் விழும் என மிரட்டினோம் என்ற நினைப்பும் அவளுள் ஓடியது.

அவள் அப்படியே பார்த்துக் கொண்டிருக்க சட்டென கண்களைத் திறந்து நிமிர்ந்தான்; ''நீங்கள் சொல்ல வருவது புரிகிறது. அதாவது நான் அந்த டான்ஸ் ஸ்கூலுக்குச் சென்று எனக்குத் தெரிந்தவர்கள் மூலம் உங்கள் அண்ணி மாலினி பற்றிய விஷயங்களை விசாரிக்க வேண்டும். அவ்வளவுதானே?''

அவன் கேட்டதற்கு கண்கள் படபடக்க வேகமாய் தலையசைத்தாள். கூடவே இதுநாள் வரை நீ என ஒருமையில் அழைத்துக் கொண்டிருந்தவன் 'நீங்கள்' என மரியாதையில் அழைத்து அவளை அந்நியப்படுத்துவதையும் கவனித்தாள்.

மேற்கொண்டு அவள் யோசிக்க முடியாதபடி படபடவென வார்த்தைகளை வீசினான் உதயசந்திரன்.

''எனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுங்கள். நான் விசாரித்துச் சொல்கிறேன்...'' என சொன்னவன் அத்தோடு நிறுத்தாமல், ''சரி.. நீங்கள் போகலாம்..'' என்றும் முடித்தான் அவளை விரட்டுவது போல்.

''ரொம்பவும் நன்றி..'' என்றபடி அவளும் எழுந்து கொண்டாள். மேற்கொண்டு அவனிடம் எதுவும் சொல்லவா.. என்ன... சொல்ல.. என்றெல்லாம் நினைத்து ஒன்றும் தோன்றாதவளாய்த் திரும்பி விறுவிறுவென



நடந்தாள் வாணி. அவள் போவதையே சலனமில்லாமல் கண்கள் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

மறுநாள் எதுவும் நடைபெறவில்லை. இரண்டு நாள் கழித்து உதயசந்திரனிடம் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

அதே போல் மதிய உணவு இடைவேளையில் அவனைத் தேடிச் சென்றபோது, ''விசாரித்து விட்டேன். ஆனால் நான் கேள்விப்பட்ட எல்லா விஷயங்களும் அபாயகரமான அதிர்ச்சியாய் இருக்கிறது!'' என்றான் நிஜமான கவலை பொங்கும் முகத்துடன்.

அவன் சொன்னதைக் கேட்டு வாணி திகைக்கத்தான் செய்தாள்.

உதயசந்திரன் சலனமற்ற குரலில் படபடவென விளக்க ஆரம்பித்தான். அவன் சொல்லச் சொல்ல... முழுவதையும் கேட்ட வாணி அதிர்ச்சியில் உறையத்தான் செய்தாள்.

அந்த முரட்டு இளைஞனின் பெயர் கிஷோர். அவன் மாலினிக்கு நன்கு அறிமுகமானவன் மட்டுமல்ல. நெருக்கமான காதலனாம். மாலினியின் கல்யாணத்திற்கு முன்பே அவளுக்கு அவனுடன் பழக்கம் உண்டாம். சொல்லப் போனால் அவனைத்தான் கட்டிக் கொள்ள இருந்தாளாம் மாலினி. வீட்டுச் சூழ்நிலை பெரியவர்களின் நிர்ப்பந்தத்தால் வேறு வழியில்லாமல் அவள் அண்ணன் சுகேசனை கட்டிக் கொண்டாளாம்.

ஆனாலும் பழைய காதலனை மறக்க முடியாத கதையாய் அவர்களது நட்பு தொடர்கிறதாம். மாலினி வாணியை

அக்கறையாய் நடனம் பயில டான்ஸ் ஸ்கூலுக்கு சேர்த்து விட்டது கூட அந்தக் காதலனை தினம் பார்க்க... பழகும் சூழ்நிலையை உருவாக்கத்தானாம்... ஏனென்றால்.. அந்த டான்ஸ் ஸ்கூலை நடத்துவது அதன் உரிமையாளனாய் இருப்பது அந்த முரட்டு இளைஞன்.

எல்லாவற்றையும் கேட்ட வாணி கருவிழிகள் தெறிக்க அப்படியே சிலை போல்தான் கொஞ்ச நேரம் அசையாமல் வெறித்திருந்தாள். என்ன ஒரு கொடுமை! மாலினி அவளிடம் போட்டது எல்லாம் வேஷமா? அவள் பழைய காதலனைச் சந்தித்து பழக்கம் ஏற்படுத்தவா... அக்கறையாய் அவளை நடனம் பயில வைப்பது போல் டான்ஸ் ஸ்கூலில் சேர்த்து விட்டிருக்கிறாள்?

எல்லாவற்றையும் விட தன் அண்ணன் சுகேசனைக் கட்டிக் கொள்ளும் முன்பே மாலினி அந்த கிஷோரைக் காதலித்திருக்கிறாள். அவனைக் கட்டிக் கொள்ளும் ஆசையில் இருந்திருக்கிறாள் என்கிற விஷயம்தான் அவள் நெஞ்சையே நடுங்கச் செய்தது.

மாலினி பழைய குருடி போல் தான் இன்னொருவரின் மனைவி என்பதை மறந்து பழைய காதலனைக் கண்டதும் அவனுடன் மறுபடியும் தொடர்பு வைப்பது பெரும் விபரீதத்தில் போய் அல்லவா முடியும்? என வாணி திகிலாய் யோசிக்க அவளை மேலும் பயப்படுத்துவது போல், ''உங்கள் அண்ணியின் விஷயம் ரொம்பவும் கைமீறிப் போய் விட்டது. இனி ஒன்றும் செய்ய முடியாது போல் தான் தெரிகிறது...'' என்றான் உதயசந்திரன் வருத்தமான குரலில்.





## 12

வாணி ரொம்ப நேரம் உதயசந்திரன் முன் சிலை போல்தான் உட்கார்ந்திருந்தாள். அவளால் எதையும் சிந்திக்க முடியவில்லை. எந்த ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை. புத்தி பேதலித்தவள் போல்தான் செய்வதறியாது இருந்தாள்.

அவளது நிலையையும் அவளது அதிர்ச்சியையும் நன்கு உணர்ந்த உதயசந்திரன் அவளை ஆறுதல் படுத்துவது போல், ''வேண்டுமானால் ஒரு யோசனை சொல்லட்டுமா?'' என்றான்.

என்ன..? என்பது போல் வாணி நிமிர்ந்தவள் மலங்கல் பார்வையுடன் அவனை விழித்தாள்.

''முதலில் நடனம் பயிலுவதை நீங்கள் நிறுத்த வேண்டும். நீங்கள் டான்ஸ் ஸ்கூலுக்கு செல்வதினால் தானே மாலினி தினம் ஒட்டிக் கொண்டு அங்கு வருகிறாள். நீங்கள் போகா விட்டால்...?''

அவன் இழுத்துச் சொல்ல அதை ஆமோதிப்பவளாய் தலையசைத்தாள் வாணி.

''நீங்கள் சொல்வது சரிதான். நான் ஏற்கனவே நினைத்ததுதான். ஆனால் அண்ணி வீட்டில் பயங்கரப் பிடிவாதம் பிடிப்பாள். நீ நடன அரங்கேற்றம் செய்ய வேண்டும். விடாது படி.. படி.. என நச்சரிப்பாள்...''

"புரிகிறது. ஆனால் இதுதான் முதல் ஸ்டெப். இப்படி ஏதாவது செய்தால்தான் அவர்களது சந்திப்புகளை நிறுத்த முடியும்..."

உதயசந்திரன் சொன்னதற்கு மறுப்பாய் தலையை வெட்டினாள் வாணி.

"டான்ஸ் ஸ்கூலை நிறுத்தினாலும் அண்ணி நினைத்தால் அந்த கிஷோரைச் சந்திக்க பல வாய்ப்புகளை உருவாக்க முடியும்..."

"எப்படி?"

புரியாமல் கேட்டான் உதயசந்திரன்.

"தினம் மார்க்கெட் போகிறேன். லைப்ரரி போகிறேன்... ஷாப்பிங் கிளம்புகிறேன் என்று எங்காவது கிளம்பி ஒரு மணி நேரம் ஊரைச் சுற்றுவது அண்ணியின் வாடிக்கை தான். அதனால் இவ்விஷயத்தில் அப்படி வெளியில் செல்வதை தடுத்து நிறுத்த முடியாது..."

இம்முறை புருவம் உயர்த்தி உதடுகளைப் பிதுக்கினான் உதயசந்திரன்.

"அப்படியானால் வேறு வழியில்லை. விஷயத்தை பட்டென்று உடைத்துக் கேட்டு விட வேண்டியதுதான்..."

"ம்ம்... அப்படியும் கேட்டுப் பார்த்து விட்டேன்! எல்லாவற்றுக்கும் ஏதோ பொய்யான காரணங்களைச் சொல்லி மழுப்பத்தான் நினைக்கிறாள்..." என்றாள் வாணி.

உதயசந்திரன் மறுபடியும் கண்களை மூடி யோசனைக்குப் போனான்.

பின் பிரகாசமாய்த் திறந்தவன், "ஏன் இந்த விஷயத்தை நீங்கள் உங்கள் அண்ணன் அம்மாவிடம் கொண்டு சென்று தீர்வு காணலாமே?" என்றான்.



வாணி மறுத்தாள்.

"அதுவும் முடியாதுதான்! அம்மா பயந்த சுபாவம். சொன்னால் என்னவோ ஏதுவோ என வெலவெலத்து விடுவாள். அண்ணன் அதற்கு நேர் எதிர். படு கோபக்காரன். விஷயம் கேள்விப்பட்டால் கொஞ்சமும் யோசிக்காது மறு நிமிடமே அவள் கழுத்தைப் பிடித்து தரதரவென இழுத்துப் போய் வெளியில் தள்ளி விடுவான். பின் அவளது குடும்ப வாழ்க்கை கேள்விக் குறியாகி விடும். மாலினிக்குத் திருந்த ஒரு வாய்ப்புக் கொடுக்காமலே அவள் நம் வீட்டிற்கு ஒத்து வர மாட்டாள் என்ற முடிவிற்கு வந்து விடுவான்..."

அவள் விளக்கமாய் சொல்லி முடித்ததும் உதயசந்திரனுக்கு அவள் குடும்பச் சூழ்நிலை தெளிவாய் புரிந்தது.

ஆனாலும் அவனால் ஒரு முடிவிற்கு வர முடியவில்லை. "யோசித்து மீண்டும் சொல்கிறேன்..." என்றபடி எழுந்து விட்டான். அவளிடம் விடைபெற்றுச் சென்று விட்டான்.

அவன் போய் நெடு நேரம் ஆகியும் வாணி அதிர்ச்சி விலகாது, அப்படியே சிலை போல் உட்கார்ந்திருந்தாள். மாலினி தனது முன்னாள் காதலனுடன் சந்திப்புகளைத் தொடரத்தான் அவளை நடனம் படிக்கச் சொல்வதைப் போல் வெகு அக்கறை காட்டி டான்ஸ் ஸ்கூலில் சேர்த்து விட்டாளா? உதயசந்திரன் சொல்வது போல் உண்மையில் அப்படித்தான் நடந்திருக்கிறதா? அவளது திருட்டுத் தனத்திற்கு நாம் பகடைக்காயா?

அந்தக் கேள்விகளைத்தான் ரொம்ப நேரம் ஜீரணிக்க முடியாதவளாய் திரும்பத் திரும்ப யோசித்தாள். இறுதியில் தீர்மானமாய் ஒரு முடிவிற்கு வந்தாள்.

எல்லாவற்றையும் நேருக்கு நேர் மாலினியிடம் கேட்டு விளக்கம் கேட்டால் என்ன? என்ற யோசனை ஓடியது. அப்படி உடைத்துக் கேட்கும் போது அவளால் எவ்வளவு தூரம் மழுப்ப முடியும்... உண்மையை ஒத்துக் கொள்வதை தவிர வேறு வழியில்லாமல் போய் விடுமே? அப்போது மாலினியால் என்ன செய்ய முடியும்? தப்பிக்க முடியாதே.. என நினைத்தாள்.

தெளிவு பெற்றவளாய் அப்படியே செய்வோம் என முடிவுக்கு வந்தவளாய் எழுந்து கொண்டாள் வாணி. அன்று மதிய அலுவலக வேலைகளையே எவ்வித லயிப்பில்லாமல் செய்தவள் வேலை முடிந்ததும் வீட்டிற்குக் கிளம்பினாள்.

அன்றும் வீட்டிற்கு வந்தபோது மாலினி. சீவிச் சிங்காரித்து அவளை டான்ஸ் ஸ்கூலுக்கு அழைத்துச் செல்ல தயாராகிக் கொண்டு இருந்தாள். மாலினியின் வழக்கத்திற்கு மாறான அதீத முகட்டுச் சாயத்தையும் மேக்கப்பையும் உற்றுக் கவனித்த வாணி, எல்லாம் அந்த திருட்டுக் காதலனுக்காகவா? என அதிரத்தான் செய்தாள்.

நேற்று வரை அவள் டான்ஸ் ஸ்கூலில் கண் கூட பார்த்து விட்டாள். மாலினி தினம் அவளை நடனப் பகுதிக்கு அனுப்பி விட்டு ரிசப்ஷனில் அந்த கிஷோருடன் உட்கார்ந்து சிரிக்கச் சிரிக்க கொஞ்சிக் குலவிக் கொண்டு...

ஆனால் மாலினிதான் அப்படி எதுவும் நடைபெறாதது போல் எவ்விதக் குற்ற உணர்வும் இல்லாமல் நடந்து கொண்டாள். அவளிடம் வார்த்தைக்கு வார்த்தை அன்பு காட்டி பாசத்தால் உருகும்போது... முதன் முறையாய் வாணிக்கு அந்த சந்தேகமும் வந்தது.



மைத்துனி மேல் காட்டும் இந்த அதீத அக்கறை அபரிதமான அன்பு.. எல்லாம் மாலினி தன் திருட்டுத்தனம் தெரியாமல் இருக்க போடும் வேஷம்தானா? தன்னை அப்படி கண்டு பிடித்து விடக் கூடாது என்பதற்காக அவள் செய்யும் நடிப்பா?

நினைத்துப் பார்த்த வாணிக்கு அவள் மனதில் வீட்டைப் பற்றி கட்டி வைத்திருக்கும் அன்புக் கோட்டையின் அடித்தளமே ஆடுவது போல் இருந்தது.

எல்லா உணர்வுகளையும் அடக்கியவளாய் மாலினியுடன் டான்ஸ் ஸ்கூல் நோக்கி கிளம்பினாள் வாணி. இன்று எப்படியும் மாலினியிடம் அந்த கிஷோர் பற்றி நேரிடையாய் கேட்டு விட வேண்டும் என்ற உறுதியும் அவளுள் இருந்தது.

அன்றும் வழக்கம் போல் பயிற்சி இடைவேளையில் முன் பகுதி வந்து பார்த்த போது ரிசப்ஷனில் மாலினி அந்த கிஷோருடன் பேச்சும் சிரிப்புமான அந்த கூத்தை நடத்திக் கொண்டிருந்தாள். கூத்திற்கு சிகரமாய் அந்த கிஷோரின் கரங்கள் மாலினியின் தோளை அணைத்தபடி.

வாணி அதற்கு மேலும் பொறுக்காது இனியும் இதை விடக் கூடாது என்ற முடிவில் விறுவிறுவென ரிசப்ஷன் பகுதிக்குள் நுழைந்து அவர்கள் முன் போய் நின்றாள்.

சட்டென அவள் தன் முன் தோன்றி நிற்பதைப் பார்த்து மாலினி அதிர... கிஷோர் சட்டென பேச்சுகளை நிறுத்தி பூனையாய் நழுவிப் போனான்.

வாணி கண்களை அகல விரித்து நெருப்புப் பார்வை பார்த்தாலும் மாலினி அசராமல் பார்த்தாள். வழக்கமாய்

சிரிப்பது போல் ஒரு சிரிப்பு சிரித்து, ''என்ன வாணி அதற்குள் கிளாஸ் முடிந்து விட்டதா?'' என்றாள்.

என்னமாய் நடிக்கிறாள் இவள்! அவன் அந்த கிஷோர் இவள் தோளில் கை போட்டபடி நெருக்கமாய் பேசியதை நேருக்கு நேர் நாம் பார்த்த பிறகும் ஒன்றுமே நடவாதது போல் அல்லவா கேட்கிறாள்? பெரிய நெஞ்சழுத்தம் தான்!

''அண்ணி.. என்ன இது? இங்கு என்னதான் நடக்கிறது?''

வார்த்தைகளில் வேகத்தையும் கோபத்தையும் கூட்டியவள் தனது சுட்டு விரலால் நழுவி ஓடும் கிஷோரை சுற்றிக் காட்டி மாலினியிடம் கேட்க... அவளிடம் முதல் முறையாய் அந்த பயப் பார்வை ஓடியது.

''அது... அது.. ஒன்றுமில்லை வாணி. சும்மாவாக அவருடன் பேசி...'' என ஆரம்பித்த மாலினி வாணியின் முறைப்புப் பார்வை சுட்டெரிக்கவும் பேச்சை நிறுத்தினாள்.

''எல்லாவற்றையும் நான் பார்த்து விட்டேன். இன்று மட்டுமல்ல... பத்து நாட்களாய் நானும் கவனித்து கண்டு பிடித்து விட்டேன். இது சாதாரண பழக்கமாய் தெரியவில்லை. யார் அது? என்னிடம் எதையும் மறைக்காமல் சொல்லுங்கள்!'' என்றாள் கடுமையான குரலில்.

அவள் அதட்டியவாறு கேட்டதும் மாலினியின் முகமும் வெகுவாய் மாறியது. ஒரிரு நிமிடம் உதட்டைக் கடித்துக் கொண்டு என்ன சொல்வது என்பது போல் யோசித்தவள் ஐந்து நிமிடங்களில் தயக்கமெல்லாம்



விலகியது போல் நிமிர்ந்து கொண்டாள். நேருக்கு நேர் வாணியை எவ்வித சங்கோஜமுமில்லாமல் பார்த்தாள்.

''ம்ம்... சொல்லுங்கள்...'' என்றாள் வாணி கடுமையாய் அதே அதட்டும் தொனியில்.

''நான் பேசிக் கொண்டிருந்த அவர் வேறு யாருமல்ல. என்னுடைய முன்னாள் காதலர்தான்...'' என்றாள் மாலினி ஒருவித அலட்சிய குரலில் அவளை அதிர வைத்தவாறு.




மாலினி சொன்ன பதிலைக் கேட்டு வாணி அதிரத்தான் செய்தாள். ஆனால் அதற்கு மேல் மாலினி ஒன்றும் பேசாது எழுந்தவள், ''கிளாஸ் முடிந்து விட்டது அல்லவா? நாம் போகலாம். போகும் வழியில் நான் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன்...'' என்றவாறு நடக்க ஆரம்பித்து விட்டாள் அவள்.

யோசனையோடு பின் தொடர்ந்தாள் வாணி. என்ன பொய் சொல்ல.. எப்படிச் சமாளிக்க? என மாலினி திட்டமிடுகிறாளோ என்ற சந்தேகம்தான் அவளுள் ஓடியது.

அவள் எண்ணத்தை வலுப்படுத்துவது போல் பாதி தூரம் ஒன்றும் பேசாமல் இறுக்கமாகவே நடந்த மாலினி வழியில் இருக்கும் ஒரு ரெஸ்ட்டாரண்ட் பக்கம் நின்றாள். ''ஏதாவது ஜூஸ் சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்...'' என்றாள்.

வாணி தலையசைக்க இருவரும் நுழைந்தார்கள். ஓரமான இருக்கையொன்றை தேர்ந்தெடுத்து உட்கார்ந்ததும் மாலினி முகம் மாறி குரல் கம்ம பேச்சை ஆரம்பித்தாள்.

''வாணி, முதலில் என்னை மன்னித்து விடு. உன்னிடம் இவ்வளவு நாள் விஷயத்தைச் சொல்லாமல் இருந்தது தவறுதான். ஆனால் உன்னிடம் வேண்டுமென்றே சொல்லாமல் இருக்கவில்லை. உன்னிடம் இதை எப்படிச் சொல்வது என்ற தயக்கத்தில்தான் சொல்லவில்லை...''

வாணி கண்களை அகல விரித்து அவளையே உற்றுப் பார்த்தாள். மாலினி அதீதமாய் முகத்தை வெட்டிப் பேசிய பாவனையே நம்பிக்கையற்றதாய்த் தோன்றியது.

''ம்ம்... சொல்லுங்கள்...'' என்றாள் சுரத்தில்லாமல்.

''அது.. அவர் பெயர் கிஷோர். நான் கல்லூரி படிக்கும் காலங்களில் எங்கள் பழக்கம் ஆரம்பித்தது. நாங்கள்...''

''பழக்கம்.. என்றால்... எப்படி?'' வாணி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''அது.. தினம் நான் பஸ் ஸ்டாப்பில் நிற்கும் போது சிரித்தபடி வந்து நிற்பார். பஸ் ஸ்டாப் பக்கத்தில் 'பியூட்டி ஷாப்' ஒன்று வைத்து நடத்தி வந்தார். ஆரம்பத்தில் சட்டை செய்யாமல்தான் இருந்தேன். ஆனால் தொடர்ந்து அவர் என்னையே வைத்த கண் மாறாமல் பார்த்து என் பார்வைக்காக ஏங்கவும் எனக்குள்ளும் சலனம் ஏற்பட்டு விட்டது. ஒரு நாள் என்னையறியாமல் அவரை நோக்கி சிரித்து தொலைத்து விட்டேன். உடனே என் பக்கத்தில் வந்து பேச ஆரம்பித்து விட்டார் கிஷோர்.''



மாலினி சொல்லிவிட்டு ஒரு கணம் நிறுத்த வாணி நம்ப முடியாத பார்வையை பெரிதாக்கினாள்.

''அப்படி அவர் பேச ஆரம்பித்த பழக்கம்தான் நாளாக நாளாக காதலாய் மாறியது. நாங்கள் ஒரு வரைமுறையோடு பழகினோம். தினம் சந்தித்தோம். எங்கள் நட்பு வளர்ந்தது. ஆனால்...''

''ம்ம்... சொல்லுங்கள்...''

''எங்கள் காதலில் முக்கியமாய் ஒரு விஷயம் இடித்தது. அவர் வேறு ஜாதிப் பிரிவைச் சேர்ந்தவர். வீட்டில் சொன்னால் நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்ற பயம் வந்தது. அதிலும் என் தந்தை மிலிட்டரியில் இருந்து ஓய்வு பெற்றவர். மிகவும் கண்டிப்பானவர். அவரிடம் போய் காதல் அது இதுவென சொன்னால்... தோலை உரித்து விடுவார் என்பது எனக்கு பயமாய் உறைத்தது. அந்த பயத்திலேயே இரண்டு மூன்று நாள் தீவிரமாய் யோசித்து இந்தக் காதல் எல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது.. என்ற முடிவிற்கு வந்தேன். என் முடிவை கிஷோரிடமும் துணிந்து சொல்லி என் நிலைமையை விளக்கினேன். கிஷோர் முதலில் முரண்டு பிடித்தாலும் நான் நிலைமையை தெள்ளத் தெளிவாய் விளக்கிச் சொன்னதும் புரிந்து கொண்டார். கனத்த மனதுடன் கண்ணீர் மல்க எங்களது காதலுக்கு விடை கொடுத்தார்... அதற்குப் பின் நான் அந்த பஸ் ஸ்டாப் பக்கம் போவதை நிறுத்தினேன். கிஷோரை சந்திப்பதை தவிர்த்தேன். கிஷோரும் என்னைத் தேடி வரவில்லை. பின் நான் நிம்மதியாக கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு உன் அண்ணனுக்காக பெண் கேட்டு வந்ததும் சம்மதித்துக் கட்டிக் கொண்டேன்...''

மாலினி மறுபடியும் நிறுத்தி வாணி தான் சொல்வதை நம்புகிறாளா... எனத்தான் உற்றுப் பார்த்தாள். வாணியோ வேண்டுமென்றே எவ்வித உணர்ச்சியையும் காட்டாத பிரதிபலிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலினி தொடர்ந்தாள்.

''எல்லாம் அத்தோடு முடிந்து விட்டது என்று தான் நினைத்திருந்தேன். ஆனால்.. ஆனால்... டான்ஸ் ஸ்கூலுக்கு உன்னுடன் வந்தபோது எல்லாம் தலைகீழாய் மாறி விட்டது. ஏன் தெரியுமா?''

''சொல்லுங்கள்...''

''இந்த டான்ஸ் ஸ்கூலின் உரிமையாளரே அந்த கிஷோர்தான். அது கூடத் தெரியாமல் நான் உன்னை நடனம் பயில அங்கு போய் சேர்த்து தொலைத்திருக்கிறேன். அப்போதுதான் அந்த கிஷோர் என்னை மறுபடியும் பார்த்து தொலைத்து விட்டார்...''

''பின் என்ன நடந்தது?''

''என்னைப் பார்த்ததும் கிஷோர் ஆவலாய் பேச வந்தார். நான் அது சரியல்ல என்பது போல விலகிப் போனேன். ஆனால் நான் அப்படி விலகி ஓடுவதை அறிந்த கிஷோர் ஒரு கட்டத்தில் என்னை மிரட்ட ஆரம்பித்து விட்டார்...''

''மிரட்டலா?''

''ஆமாம்.. முன்பு போல் அவரிடம் நான் பேச வேண்டுமாம். சிரித்துப் பழக வேண்டுமாம். இல்லாவிட்டால்... இல்லாவிட்டால்... அவர்...''

மாலினி இழுக்க பொறுமையிழந்தவளாய் வாணி பரபரத்தாள்.



''சொல்லுங்கள்.. என்ன செய்வாராம்?''

''முன்பு நான் காதலித்துப் பழகிய விஷயத்தை எல்லாம்.. நம் வீட்டிற்கு வந்து உன் அண்ணனிடம் சொல்லிவிடப் போவதாக மிரட்டினார். அதனால் நான் ஒரேடியாய் பயந்து விட்டேன்... இரண்டு மூன்று நாள் யோசித்தேன். பின் வேறு வழியில்லாமல் அந்த முடிவெடுத்தேன்...''

''அதாவது... அந்த கிஷோரிடம் முன் போல் பேசுவது... சிரித்துப் பழகுவது என்று...?''

அதட்டல் போல் வாணி கேட்டாலும் தான் செய்வது ரொம்பச் சரிதான் என தொனிக்கும் வகையில் அழுத்தமாகவே தலையை ஆட்டினாள் மாலினி.

அது வாணிக்கே ஆத்திரத்தையே கிளப்பியது.

''கல்யாணமான பெண் இப்படி இன்னொரு ஆணோடு பேசுவது பழகுவது தப்பென்று உங்களுக்குத் தோணவில்லையா?''

''தப்புதான். ஆனால் அவர் மிரட்டுகிறாரே...'' என்றாள் இன்னமும் அழுத்தத்தோடு.

இன்னமும் மாலினி அந்த கிஷோரை அவன் இவன் என சிலாகிக்காமல் அவர் இவர் என மரியாதை கொடுப்பதை கவனித்த வாணிக்கு மாலினியின் மேலான சந்தேக நிழல் கூடத்தான் செய்தது.

''எல்லாம் சரி, இந்த விஷயத்தை உடனே என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா?''

அதற்கும் புருவம் உயர்த்து வியப்பு நொடி நொடித்தாள் மாலினி.

''எப்படிச் சொல்ல முடியும்? நீ.. சின்னப் பெண். நான் இந்த மிரட்டலை சொல்லப் போய் நீயும் பயந்துவிடக் கூடாது அல்லவா?''

''ஓஹோ! அப்படி ஒரு எண்ணமா?''

வாணியின் முறைப்பைக் கண்டு மறுபடியும் மலுங்கினாள் மாலினி.

''அது மட்டுமல்ல.. விஷயத்தை உன்னிடம் சொல்லவும் தயக்கம். உன்னிடம் எப்படி ஆரம்பித்து எப்படிச் சொல்ல என நான் தவித்துக் கொண்டிருந்தபோது நல்ல வேளையாய் விஷயத்தை நீயே கண்டு பிடித்து விட்டாய்... எனக்கும் சுளுவாகத்தான் போய் விட்டது...''

மாலினி எல்லாவற்றையும் பேசி கொட்டி விட்டது போல் பெருமூச்சு விட்டாள்.

வாணி நிமிர்ந்து நேருக்கு நேராய் அவள் கண்களையே உற்றுப் பார்த்தாள். அரக்கப் பரக்க அலைந்து கொண்டிருந்த அந்த கரு விழிகளில் கொஞ்சமும் நம்பகத் தன்மை இல்லாததாகவே அவளுக்குத் தோன்றியது.

இந்த மாலினி நன்றாகத்தான் பொய் சொல்கிறாள். இவளை என்ன செய்ய? எதை வைத்து இவளது உண்மையான மனநிலையை கண்டு பிடிக்க?

யோசித்த வாணி தோன்றியவளாய், ''பேசாமல் டான்ஸ் ஸ்கூல் போவதை நிறுத்தி விட்டால் எல்லாப் பிரச்சினையும் சரியாகி விடும்தானே?'' என்றாள்.

அதற்கும் மாலினி அவசரமாய் மறுத்து, ''அதுவும் முடியாதே..!'' என்றாள்.

''முடியாதா... ஏன்?''



''அப்படிச் செய்தால் கிஷோர்.. விட்டு விடுவாரா? என்னைத் தேடி வீட்டிற்கே வந்து விடுவாரே.. அப்படி வீட்டிற்கு வந்து சண்டை போட்டால் என்ன ஆகும்?''

''அவ்வளவு தூரம் வந்து விடுவாரா?''

''கண்டிப்பாக! ஏனெனில் அவர் என்னை மிரட்டுவதே அப்படிச் சொல்லித்தானே?''

திரும்பவும் போலியாய் பயக் குரலில் மாலினி பேச வாணிக்கு எரிச்சலே வந்தது.

''பேசாமல் போலீஸிடம் சென்று இப்படி வம்பு செய்வதை புகார் பண்ணி விடலாமா?'' என்றாள்.

அதற்கு மாலினி தலையசைத்து, ''அப்படிச் செய்யலாம்தான். ஆனால் விஷயம் உன் அண்ணனுக்குத் தெரிந்து விடுமே?'' என்றபோது வாணிக்கும் உண்மை புரிந்தது.

மாலினி சொல்வது ஒரு விஷயத்தில் உண்மைதான். எதுவானாலும் எந்த விஷயம் செய்தாலும் அண்ணன் கேசனுக்கு தெரியாமல்தான் செய்ய வேண்டும். அவனுக்கு மட்டும் மாலினியின் இந்த விஷயம் தெரிந்தது என்றால் உடனே ரகளைதான். ரண களம்தான்! வாரியல் எடுத்து அடிக்காத குறையாய் அவளை ஓடு.. என விரட்டித் துரத்தி விடுவான். பின் என்ன செய்ய?

வாணி அண்ணனை நினைத்து யோசிப்பதை நொடியில் புரிந்து கொண்ட மாலினி அதே பாணியில் தனது பேச்சையும் தொடர்ந்தாள்.

''பார்.. வாணி.. எனது பிரச்சினையும் அதுதான்...! இந்த கிஷோர் விஷயம் மட்டும் உன் அண்ணனுக்குத் தெரிந்தால் பின் அவ்வளவுதான்... என் வாழ்க்கையே போய்

விடும். அதனால்... நீ... நீ தான் யோசித்து ஒரு நல்ல முடிவெடுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.''

சொல்லியபடி விசித்து அழுவது போல் போலியாய் ஒரு பாவனை வேறு மாலினி செய்ய ''ஆஹா..! என்னமாய் நடிக்கிறாள்... இவள்...!'' என உள்ளூர அதிரத்தான் செய்தாள் வாணி.



## 14

மகாபாரதத்தில் போருக்கு முன் பாண்டவர்களின் செல்வத்தினையும் செல்வாக்கினையும் கண்டு துரியோதனன் மிகவும் பிரமித்துப் போயிருந்தான். அவனுக்கு பாண்டவர்களின் செல்வத்தை அபகரித்து அவர்களை நடுத் தெருவில் திக்கற்றவர்களாய் நிறுத்த வேண்டும் என்ற எண்ணமே மிகுதியாய் இருந்தது.

அதை நன்கு உணர்ந்திருந்த அவனது தாய் மாமனும் சூழ்ச்சிகளில் வல்லவனுமான சகுனி ஒரு யோசனையைச் சொன்னான். அதாவது, ''துரியோதனா, போரில்லாமல், உயிர்ச் சேதம் இல்லாமல் அவர்களிடமிருந்து அனைத்தையும் பெற்றுத் தர ஒரு வழி இருக்கிறது..'' என்றாள்.

''என்ன வழி..?'' என்றான் ஆவலாய் துரியோதனன்.

சகுனி தனது திட்டத்தை விளக்கினான். அதன்படி பாண்டவர்களின் மூத்தவனான தருமராசனுக்கு சூதாட்டத்தின் பெயரில் அதிக ஆசையுண்டு. ஆனால் அவனுக்கு பகடை ஆடுவதில் கையாள வேண்டிய சூட்சுமம் தெரியாது. அதனால் அவனை நீ சூதாட்டத்திற்கு அழை. நான் அவனை ஆசை காட்டி சூதாட்டத்தில் விளையாட வைத்து அவனை தோற்க வைக்கிறேன். நீ விரும்பிய அவனது அத்தனை செல்வங்களையும் உனக்கு பெற்றுத் தருகிறேன்...'' என விவரித்தான்.

துரியோதனனும் அதற்கு சம்மதித்து அதன்படியே செய்கிறான். சகுனி தான் சொன்னபடியே சூழ்ச்சி செய்து சூதாட்டத்தில் தருமனை அத்தனையையும் இழக்க வைக்கிறான். சகுனியைப் பற்றி, அவனது சூழ்ச்சிகளைப் பற்றி நன்கு அறிந்த தருமனும் தெரிந்தே பெரும் குழிக்குள் விழுவதைப்போல் அவன் சூழ்ச்சிக்கு பலியாகுகிறான்.

அதே போல்தான் நிஜத்தில் வாணியும் சூழ்நிலையும் இருந்தது. மாலினி என்னதான் நம்புவது போல் சொன்னாலும் அவள் எதையோ மறைக்கிறாள். சூழ்ச்சி செய்கிறாள் என்பது தெளிவாய் அவளுக்குப் புரிந்தது. ஆனால் கண்களைத் திறந்து கொண்டே குழிக்குள் விழுவது போல் அவளை நம்ப வேண்டிய சூழ்நிலை.

அதனால் அவள் சொல்வதை எல்லாம் நம்பி விட்டதைப் போல் தலையாட்டத்தான் செய்தாள். எல்லாவற்றுக்கும் மேல் மாலினி ஒரு படி மேலே போய், ''வாணி நீ எனக்காக ஒன்று செய்யேன். நீயே அந்த கிஷோரிடம் சென்று பேசிப் பாரேன். அவன் என்னை எதற்காக மிரட்டுகிறான். என்ன மனநிலையில் இருக்கிறான் என்பது உனக்குப் புரிந்து விடும்...'' என்றபோது அதற்கும் அவள் தலை ஆடத்தான் செய்தது.

வேறு வழியில்லையே.. மாலினியை மீட்க.. தனது அண்ணனின் குடும்ப வாழ்க்கை எவ்வித பாதிப்பும் இல்லாமல் செல்ல.. அவள் இதைச் செய்தாக வேண்டுமே! கிஷோர் என்ன... எந்தக் கொம்பனாக இருந்தாலும் அவனிடம் பேசி மாலினியை மிரட்டுவது பற்றியெல்லாம் விளாசி எச்சரித்து விடலாம்.

ஆனால்... ஆனால்.. மாலினி சொல்வது எந்த அளவுக்கு உண்மையாக இருக்கும். இவள் ரிசப்ஷனில் நெருக்கமாய் சிரித்துச் சிரித்து நடந்து கொண்டதைப் பார்த்தால் அது.. அவனது மிரட்டலுக்கு பணிந்த மாதிரி தெரியவில்லையே... இவள் உள்ளூர விருப்பத்துடன் நடந்து கொண்ட செயல் மாதிரித்தானே தெரிகிறது... மாலினி கண்களில் அவனுடன் பேசும்போது தெரிந்த துள்ளல் உற்சாகம் போலித்தனம் இல்லையே..? பிறகு எதற்கு நம்மிடம் பொய் சொல்கிறாள்? இந்த மாலினி சரியான நெஞ்சழுத்தக் காரியாய் இருப்பாளோ?

வெகு நேரம் அன்று இரவு தனிமையில் மொட்டை மாடிப் பக்கம் நின்று யோசித்த வாணி ஒரு முடிவிற்கு வந்தாள். எது எப்படியோ... உண்மையைக் கண்டு பிடிக்க மாலினி சொல்வது போல் அந்த கிஷோரை சந்தித்தாக வேண்டும். மாலினி பற்றி அவனிடம் பேசியாக வேண்டும்.

அதே முடிவை மாலினியிடம் சொல்லியவள் மறுநாள் டான்ஸ் ஸ்கூலில் நடன ஒத்திகை முடிந்த இடைவேளையில் அவனைச் சந்திக்க தயாரானாள்.

ஆனால் அவன் கிஷோர் மாலினியிடம் தெளிவாய் சொல்லி அனுப்பியது அவளை அதிரச் செய்தது.



''எதுவானாலும் சரி.. என்னிடம் பேச வேண்டுமானால் இங்கு வேண்டாம். மாலை கடற்கரை மணலில் வைத்துப் பேசலாம். அதனால் பீச்சிற்கு வரச் சொல்...!'' அதிகாரமாய் ஏகதாளத்துடன் அவள் சொல்லியனுப்பியது பெரும் எரிச்சலையும் மிகுந்த கோபத்தையும் அவளுள் உண்டாக்கியது.

''ஏன்.. இங்கு வைத்துப் பேசினால் என்ன?'' என்று கொதித்தவளிடம் மாலினி மழுங்கல் பார்வை பார்த்தவள்,

''அது.. அது.. வேறு யாருக்கும் இந்த விஷயம் தெரிய வேண்டாம்.. என்று நினைக்கிறார்...'' என்றபோது அவள் ஆத்திரம் அதிகரிக்கவே செய்தது.

ஆனாலும் மாலினிக்காக வேறு வழியில்லாதவளாய் எல்லாவற்றையும் பல்லைக் கடித்துக் கொண்டு ஒப்புக் கொண்டாள் வாணி.

ஆனால் மாலினி அடுத்து சொன்ன வார்த்தைகள்தான் அவளைப் பெரிதும் அதிரச் செய்தது. அப்படி கிஷோர் வரச் சொன்ன பீச் கடற்கரை மணலுக்கு அவள் மாலினி உடன் வரப் போவதில்லையாம். ''வாணி மட்டும் தனியே சென்று கிஷோரிடம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமாம். மாலினி வந்தால் அந்த கிஷோர் கண்டபடி பேசி மேலும் அவளை மிரட்டி விடுவானாம். அவளுக்கு அதனால் மிகுந்த பயமாக இருக்கிறதாம்...!'' மாலினி இப்படிச் சொன்னபோது கண்களை அகல விரித்து அவளை முறைத்துப் பார்த்தாள் வாணி.

செய்வதை எல்லாம் செய்து விட்டுப் பயப்படுவது போல் நம்மிடம் நடிப்பு வேறு.. இவளை என்ன செய்வது?

யோசித்தவள் வேறு வழி தோன்றாது அதற்கும் ஒப்புக் கொண்டாள். சரி என்னதான் சொல்கிறான் என்பதைப்

பார்த்து விடுவோம் என்ற தைரியத்துடன் அன்று மாலையே அவன் சொன்ன பீச் பகுதிக்குச் சென்றபோது கடற்கரை மணலில் தனது புதிய பைக் ஒன்றுடன் தயாராய் காத்திருந்தான் கிஷோர்.

வாணி அப்போதுதான் முதன் முறையாய் அவனை நன்கு உற்றுப் பார்த்தாள். முப்பதை தாண்டிய வயதில் நெடுநெடுவென வளர்ந்திருந்தான். உடம்பை வளர்த்த விதத்தில் கம்பீரம் இல்லாமல் கொழுப்பு நிறைந்த முரட்டுத்தனமே தெரிந்தது. டீ ஷர்ட்டும், ஜீன்ஸும், கழுத்தில் சாவி போன்ற தொங்கட்டமும் செம்பட்டைத் தலையும் இடுங்கிப் போன கண்களும் சினிமாப் படங்களில் வரும் திடகாத்திரமான வில்லனைப் பார்ப்பது போலவே அவளுக்கு உணர்த்தியது.

அவள் வருவதைப் பார்த்து பைக்கில் இருந்து இறங்கி அத்தனை பற்களையும் அவளை நோக்கிக் காட்டியது வாணிக்கு எரிச்சலையே ஏற்படுத்தியது.

பதிலுக்கு முகத்தில் இறுக்கம் கூட்டியவளாய் அவன் பக்கம் போனாள்.

அவள் பேச்சை ஆரம்பிக்கும் முன்பே, ''ஹலோ... நீங்கள் வாணி தானே? மாலினி சொன்னது சரி. ஆனால் ஒரு வகையில் தப்பு...'' என்றான் பெரிய பீடிகை பேச்சை ஆரம்பிப்பது போல்.

''மாலினி என்ன சொன்னாள்?'' என்றாள் வாணி அதே எரிச்சலுடன்.

''நீங்கள் வெறும் அழகு என்று மட்டும் சொன்னாள். அழகு தேவதை, அழகு ராணி என்றல்லவா அவள் சொல்லியிருக்க வேண்டும்? இப்படி ஒரு அழகை என்



வாழ்நாளில் இப்போதுதான் முதல் முறையாய் பார்க்கிறேன்...'' என கிஷோர் ஏற்றி இறக்கிச் சொன்னபோது அவளுக்கு வந்த ஆத்திரத்தில் கைகள் பரபரத்தது.

அடக்கிக் கொண்டவள் அதே முறைப்புப் பார்வையுடன் அவனைப் பார்த்தாள். ''விஷயத்திற்கு வருகிறீர்களா? மாலினியைப் பற்றி சொல்கிறீர்களா?'' என்றாள்.

''ம்ம்... பேசுவோம்...'' என்றபடி தலையைச் சிலுப்பியபடி கால்களைப் போட்டு ஸ்டைல் நடை நடக்க ஆரம்பித்தான் கிஷோர்.

என்ன நினைத்திருக்கிறான் இவன்? இவனுடன் சாவகாசமாய் காற்று வாங்கி கதையளக்கவா இங்கு வந்திருக்கிறோம்?

வாணி கோபமாய் நின்று முறைப்பதை கொஞ்சமும் சட்டை செய்யாமல் கிஷோர் நடக்க ஆரம்பித்திருந்தான்.

வேறு வழியில்லாமல் வாணி பல்லைக் கடித்தபடி பின் தொடர்ந்தாள்.

கிஷோர் கதை சொல்வது போல் ஆரம்பித்தான்.

''மாலினி ரொம்பவும் நல்ல பெண். அறிவு நிறைந்த புத்திசாலி. அவளை கல்லூரி நாட்களில் இருந்தே நான் அறிவேன். அப்போதுதான் எங்களுக்குள் அந்த இனிமையான காதல் மலர்ந்தது. நானும் மாலினியும் மனதார காதலிக்க ஆரம்பித்தோம்...''

கிஷோர் சொல்லிக் கொண்டே போக... பொறுமை இழந்தவளாய் வாணி கைகளை உயர்த்தினாள். ''ஹலோ.. மிஸ்டர் முதலில்.. நிறுத்துங்கள்...'' என்றாள்.

அவன் அதற்கு பெரிய ஆச்சரியம் காட்டி புருவங்களை உயர்த்தினான்.

''என்ன.. மிஸ்டரா..? சரிதான்.. என் பெயர் உங்களுக்குத் தெரியாதா? என் பெயர் கிஷோர்... அதாவது.. கி..ஷோ...ர்ர்..'' என அழுத்தந்திருத்தமாய் உச்சரித்துக் காட்ட வாணி மறுபடியும் பற்களைக் கடித்தாள்.

இவனிடம் எதற்கு வெட்டியான பேச்சு? நேரிடையாய் விஷயத்திற்கு வருவோம் என நினைத்தவள், ''ஹலோ மிஸ்டர் கிஷோர், மாலினி இந்த காதல் விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். இப்போது அது பிரச்சினை இல்லை. கல்யாணம் ஆகி இன்னொருவரின் மனைவி ஆகிவிட்ட அவளை நீங்கள் மிரட்டுவதாகக் கூறுவதுதான் பிரச்சினை. அதற்கு உங்களுடைய பதில் என்ன? அதைச் சொல்லுங்கள்...'' என்றாள் கறாரக் குரலில்.

கிஷோர் அவளின் கடுமையான வார்த்தைகளைக் கேட்டும் கொஞ்சமும் அசராமல் அதே அசட்டுச் சிரிப்பு சிரித்தான். தலையை பலமாய் ஆட்டி, ''ஓ.கே. ஓ.கே. அப்படியானால் நானும் விஷயத்திற்கு வந்து விடுகிறேன். ஆனால் மாலினியை மிரட்டுவதாக யார் சொன்னது?''

''வேறு யார் மாலினிதான் சொன்னாள். தினம் அவள் உங்களுடன் சிரிக்கச் சிரிக்கப் பேச வேண்டுமாம், இல்லாவிட்டால் அவள் முன்பு காதலித்த விஷயத்தை வெளியில் சொல்லி விடுவதாகச் சொன்னது...?''

அவள் முடிப்பதற்குள், ''அது உண்மைதான்!'' என்றான் கிஷோர் அழுத்தக் குரலில்.

''அப்படியானால் இதற்குப் பெயர் மிரட்டல் இல்லாமல் வேறு என்னவாம்?''

வாணி துடித்துக் கேட்டதற்கு கிஷோர் பெரிய ஹாஸ்யத்தைக் கண்டது போல் கைகளைத் தட்டி அசிங்கமாய்ச் சிரித்தான்.



''அது.. அப்படிக் கிடையாது.. நிச்சயமாக கிடையாது..!'' என்றான்.

வாணி அவனையே மேலும் எரித்து விடுவது போல முறைத்தாள்.

''நான் மாலினியை முன்பு போல் என்னிடம் காதல் செய்யச் சொல்லவில்லை. சாதாரண நண்பன் போல் சிரித்துப் பேசி பழகச் சொன்னேன். அதை அவள் தவறாக எடுத்துக் கொண்டு பெரிய விஷயம் போல் உங்களிடம் புகாராகவும் சொல்லி விட்டாள்...''

சொல்லியபடி சிரிப்பை அடக்க முடியாதவன் போல் மேலும் கடகடவென சிரிக்க ஆரம்பித்தான் கிஷோர்.

வாணி கைகளைப் பிசைந்தபடி அவனையே உறுத்துப் பார்த்தாள்.

இவன் என்ன இப்படி உளறுகிறான்? என ஒரு கணம் நினைத்தவள் மறுகணமே, ''மாலினிக்கு உங்களுடன் பேசக்கூட விருப்பமில்லையென்றால் விட்டுவிட வேண்டியது தானே? வலியப் போய் பேச வேண்டும் என வற்புறுத்துவதும் தவறுதானே?'' என்றாள் அதே கோபக் குரலில்.

ஆனால் அதற்கும் கிஷோர் போலியாய் பவ்யம் காட்டினான். ''அப்படியெல்லாம் இல்லை...'' என்றான்.

''இல்லை... என்றால்...?''

''மாலினிக்கு இஷ்டம் இல்லையென்றால் அவள் என்னைப் பார்க்க வேண்டாம். என்னுடன் பேச வேண்டாம். நானும் அவளை எவ்விதத் தொந்தரவு செய்யப் போவதில்லை...''

"நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?"

"நிஜமாகத்தான் சொல்கிறேன்..." என்றான் கிஷோர் குரலை உயர்த்தியபடி.

"அப்படியானால் இனி மாலினி வழியில் தயவு செய்து குறுக்கிடாதீர்கள்..."

"கண்டிப்பாக குறுக்கிட மாட்டேன்..."

அவனது உறுதியான குரல் காதில் விழுந்ததும், 'அப் பாடா... பிரச்சினை தீர்ந்தது...' என்று பெருமூச்சு விட்டாள் வாணி.

சற்றே தற்செயலாய் நிமிர்ந்தவள் அப்படி அவள் விம்மித் தாழும் அழகை தனது கழுகுக் கண்களால் உற்றுப் பார்த்தபடி இருந்த கிஷோரின் நிலையைக் கண்டு துணுக்குற்றுத்தான் போனாள்.

அவசரமாய் துப்பட்டாவை சரி செய்தபடி, இனி இவனுடன் என்ன பேச்சு? என்பது போல், "வருகிறேன்..." என்ற ஒற்றை வார்த்தையுடன் அகல ஆரம்பித்தாள்.

ஆனால் அவள் இரண்டு எட்டு நடந்ததும் அவள் பின் வந்து கிஷோர் பேசிய அந்தச் சொற்கள் அவளை பொட்டிலடித்த மாதிரி நிற்க வைத்தது.

"ஆனாலும் மாலினியை மறப்பது கஷ்டமான விஷ யம்தான். முயற்சிக்கிறேன்."

- தீப்பொறி போல் சொல்லிவிட்டு விறுவிறுவென அகன்றான் அவன்.

கிஷோர் சொன்னது அதிர்ச்சியாய் இருந்தாலும் அதை விட பெரிய அதிர்ச்சியை அவள் கண்கள் சந்தித்தது.



எதிர்புற மணல் ஓரமாய் நடந்தபடி வந்து கொண் டிருந்தது... அது.. உதயசந்திரன் தான்!

அவனுடன் கைகளைக் கோர்த்தபடி நெருக்கமாய் அந்த இளம் பெண் வேறு!




வாணி உதயசந்திரனை அங்கு கண்டு திகைத்துதான் போனாள். அவனை அங்கு அந்தக் கோலத்தில் அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவன் உதயசந்திரனின் கையோடு கை கோர்த்துக் கொண்டு தோளோடு தோள் உரசியபடி... அந்த சுடிதார் பெண்... நிச்சயம் தங்கை இல்லை. யாரது? வேறு யாராக இருக்கும்?

கிஷோர் சொல்லி விட்டுச் சென்ற அதிர்ச்சியை விட இது தாங்க முடியாததாய் அவளுக்குத் தெரிய அப்படியே சிலையானவள் போல் நின்று விட்டாள்.

தன் வழியில் அடைத்தாற் போல் இவள் நிற்பதை அப்போதுதான் உதயசந்திரனும் பார்த்தான். புருவம் உயர அவனது கண்களும் விரிந்தன.

அதே ஆச்சரியத்துடன் அவள் பக்கம் வந்து கேள்வி யால் உலுக்கினான்.

"என்ன.. வாணி... நீயா? நீ இங்கு எப்படி?"

அவன் கேட்டது கூட உரைக்காமல் இன்னமும் அவனது கைகளை விடாது கோர்த்தபடி நின்ற அந்த சுடிதாரையே உற்றுப் பார்த்தாள் அவள்.

சற்றே மாநிறமானாலும் வசீகர முகத்துடன் கல்லூரிப் பெண் போல தோற்றமளித்த அவள் யாரையும் சட்டை செய்யாது உதயசந்திரனையே வைத்த கண்ணாய் பார்த்துக் கொண்டு அவனைப் பார்த்து மயக்கச் சிரிப்பு சிரித்துக் கொண்டு இருந்தது வாணியை திடுக்கிடவே வைத்தது.

ஆனாலும், "என்ன விஷயம்? சொல் வாணி..." என மறுபடியும் உதயசந்திரன் பரபரக்க உணர்வுக்கு வந்தாள்.

மாலினி சொன்னதையும் அதன்படி கிஷோரை தான் அங்கு பார்க்க வந்ததையும் விளக்கினாள்.

உதயசந்திரன்,

"அவன் சொன்னால்.. என நீயும் வந்தாயா? ஏன் டான்ஸ் ஸ்கூலில் வைத்தே பேசலாமே...?"

அதற்கு அவன் மறுத்ததை விவரித்தாள்.

"சரி.. கடைசியாய் என்னதான் சொல்கிறான்?" என்றதும், "மாலினியை மறக்க அவகாசம் தேவை. அதற்கு ஓரிரு மாதங்கள் ஆகும்.." என கிஷோர் சொன்னதை அப்படியே சொன்னாள்.

சந்திரன் கைகளை பரபரவென தேய்த்தபடி யோசனைக்குப் போனவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"இதை நீ நம்புகிறாயா?" என்றான்.

வாணி மறுப்பாய் தலையை வெட்டினாள். "நம்ப முடியவில்லை! ஆனால் இதை விட்டால் இந்தப் பிரச்சினைக்கு வேறு வழியும் இல்லையே. அதனால்..."



"அதனால்..?"

"கிஷோர் சொல்வது உண்மையோ பொய்யோ அவன் சொன்னது போல் ஓரிரு மாதங்கள் பொறுத்துதான் பார்க்க வேண்டும்..."

அதற்கு கேலிப் புன்னகையுடன் மறுத்தான் உதயசந்திரன்.

"நான் அந்த கிஷோரை நம்பப் போவதில்லை." என்றான்.

"வேறு.. என்ன செய்ய..?"

"வேறு வழியும் இல்லைதான்... ஆனால்..."

"ஆனால்...?"

"உன் அண்ணி மாலினியும் இந்த முரட்டு இளைஞன் கிஷோரும் சேர்ந்து எதுவோ பிளான் செய்கிறார்கள் என்றே எனக்குத் தோணுகிறது..."

"எதை வைத்து இப்படிச் சொல்கிறீர்கள்?"

"முதல் காரணம் உன் அண்ணி அந்த கிஷோருடன் பேசுவதை அவனுடன் பழகுவதைப் பார்த்தால் பயப்படுவது போலவோ மிரட்டலுக்காக பணிவது போலவோ தெரியவில்லை."

"எனக்கும் அதே போல்தான் தெரிகிறது. ஆனால் மாலினி உண்மை போல் அவனுக்காக பயப்படுவது போல் ரொம்ப நடிக்கிறாள்... நிச்சயம் இது மிரட்டலினால் நடப்பது போல் தெரியவில்லை. முன்பு வைத்த காதலினால் இப்படிப் பழகி கூத்தடிப்பது போலவே தெரிகிறது..."

"அதே தான்! நானும் அப்படியேதான் நினைக்கிறேன்..." வாணி சொன்னதற்கு பலமாய் தலையசைத்த உதயசந்திரன் இன்னொரு முக்கியமான சந்தேகத்தையும் எழுப்பினான்.

எது எப்படி இருந்தாலும் மாலினி ஒரு விஷயத்தில் நன்றாக பொய் சொல்லி உன்னை ஏமாற்றியிருக்கிறாள்...'' என்றான்.

''எந்த விஷயம்?'' என்றாள் வாணி ஆவலாய்.

''அவள் உன்னை நடனம் பயில வைத்து நடன அரங் கேற்றம் செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆசையை உண்டாக்கி... அந்த கிஷோருடன் மீண்டும் பழக்கம் வைத்துக் கொள்ளவே சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக் கிறாள்...''

''அது.. உண்மைதான்...'' என வாணி தலையை சோக மாய் அசைத்தாள்.

கூடவே அவன் இன்னும் இரண்டு வார்த்தைகள் ஆறுதலாய் பேச மாட்டானா என்பது போல் ஏக்கமும் பிறந்தது.

ஆனால் அவனோ திரும்பவும் யோசனைக்குப் போன வன், ''சரி.. இது பற்றி பின் அலுவலகத்தில் பேசிக் கொள் வோம்'' என்றபடி அகலப் போனான்.

வாணிக்கு அவன் பக்கத்து சுடிதாரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமே! இல்லாவிட்டால் தலையே வெடித்து விடுமே!

''இது... இது யார்.. நீங்கள் சொல்லவே இல்லையே?'' என அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

உதயசந்திரன் பெரும் சிரிப்பிற்குப் போனவன்,

''ஓ.. மறந்தே போய் விட்டேன். இது.. என் அத்தை பெண். கல்லூரியில் படிக்கிறாள். பெயர் மஞ்சரி!'' என்று அறிமுகப்படுத்த வாணி ஆவலாய் 'ஹலோ...' சொல்லி புன்னகைத்தாள்.



பதிலுக்கு அந்த மஞ்சரி அசட்டையாய் தலையாட்டி சிரித்தாள். அப்போதுகூட உதயசந்திரனின் கரங்களைப் பிடித்த பிடியை அவள் விடவில்லை.

பின் இருவரும் விடைபெற்று அகன்று விட வாணி பஸ் ஸ்டாப் நோக்கி மெல்ல நடை போட்டாள். திரும்பிப் பார்த்தபோது தூரமாய் நின்ற அவனது கார்ப் பக்கம் சென்று உதயசந்திரனும் மஞ்சரியும் ஏறுவது தெரிந்தது.

தன்னையும் அவன் அழைத்திருக்கலாமே... அழைத்துச் சென்று வீட்டில் ட்ராப் செய்தால் நன்றாகத்தானே இருக்கும் என நினைத்தாள். அப்படி நினைக்கும்போதே தான் செருப்படிகள் எனக் கூறி அவனை நோகடித்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

பின் எப்படி தன்னை அழைப்பான்? என சமாதானம் சொல்லியவளாய் நடந்தாள்.

ஆனால் பஸ் ஸ்டாப்பில் நின்ற போதும் சரி, பஸ்ஸில் ஏறி வீடு சென்ற போதும் சரி அவள் மனம் முழுவதையும் உதயசந்திரனும் அந்தப் பெண் மஞ்சரி பற்றிய நினைப் புமே ஓடியது.

அத்தைப் பெண் என்று சொல்லி விட்டான். அப்படிப் பார்த்தால் முறைப் பெண் தானே? முறைப் பெண் என் றால் கட்டிக் கொள்ளப் போகிறவள் என்று கூட அர்த்தம் இருக்கிறதே? அவள் அந்த மஞ்சரி கூட பசை வைத்து ஒட்டியது போல் கரங்களோடு கரம் கோர்த்துக் கொண்டு கடைசி வரை நெருக்கம் காட்டிக் கொண்டிருந்தாளே...?

அப்படியானால்...?

அவளுக்கு அப்படியொரு எண்ணம் இருக்குமோ? உதயசந்திரனை கட்டிக் கொள்ள வேண்டும் என்று தான்

மனதில் நினைப்பு வைத்திருப்பாளா? அதிலும் உதய சந்திரன் சரியான கம்பீர பர்ஸனாலிட்டி. ஆளை மயக்கும் வசீகரன்தான். அவனைப் பிடிக்காமல் அவளுக்கு இருக்குமோ?

ம்ம்.. சரி.. அவளை விடுவோம். உதயசந்திரன்... அவன்.. அவன் என்ன நினைப்பான்? அவள் மஞ்சரி தன்னை விரும்புகிறாள் என்றதும் பதிலுக்கு அவனும் விரும்பி விடுவானா?

அது.. எப்படி?

அவன்.. வலிய வந்து தன் பின்னால் அலைந்து தன்னை விரும்புவதாகச் சொன்னவன் தானே?

அதற்குள் தன் மேல் வைத்த காதல் எல்லாம் காணாமல் போய் விட்டதா..? நம்மை... நம் மீது அப்படி ஒரு எண்ணம் வைத்ததை மறந்திருப்பானா?

நிச்சயம் மறந்திருக்கத்தான் செய்வான்.

செருப்பை உயர்த்திக் காட்டி அவனை மறக்கும்படி செய்ததே அவள்தானே?

அதன் பின் அவளை மறந்து விட்டதற்கு அடையாளமாகத்தானே... அவனது வேலைப் பிரிவையே அலுவலகத்தில் மாற்றிக் கொண்டான். இனி அவள் முகத்தில் முழிக்கவே கூடாது என்பதற்காகத்தானே அவள் இருக்கும் திசைப்பக்கம் வருவதையே தவிர்த்து விட்டான்?

இப்போது மாலினி பிரச்சினைக்காக அவள் தானே வலியச் செய்து பல்லிளித்து உதவி கேட்டாள்!

சரி... பாவம்... பழகின தோஷத்திற்காக உதவுவோம்.. என அவனும் அக்கறையாய் கேட்டு உதவிகள் செய்கிறான்.



அவ்வளவுதான். அவ்வளவுதானே..?

தன்னைத்தான் கேள்விகள் கேட்டு நினைத்துப் பார்த்தவளுக்கு வெறுமையாய் தோன்றியது. மாலினி பிரச்சினையை விட உதயசந்திரனுடன் அவனது அத்தை பெண் மஞ்சரியைப் பார்த்ததே அதிகம் அவளுக்கு குடைச்சலைக் கொடுத்தது. மனசை இம்சித்தது.

அவன் உதயசந்திரன் அவள் அத்தை பெண்ணுடன் தானே சுற்றுகிறான்... அவளுடன் பழகினால் என்ன? இல்லை... அவளைத்தான் விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டால் என்ன? என அவளால் நினைத்து விட்டேற்றியாய் நினைப்புகளை ஒதுக்க முடியவில்லை.

அது.. எப்படி... அவள் மஞ்சரி விரும்பினால் அதற்காக பதிலுக்கு உதயசந்திரனும் உடன் விரும்பி விடுவானா? என்ற கேள்வியே அவளைக் குடைந்தது. தன்னை விரும்பியவனாயிற்றே... அதற்குள் மனதை மாற்றிக் கொள்வானா? என்றெல்லாம் குழம்பத்தான் செய்தாள் வாணி.

வீட்டிற்குள் நுழைந்ததும் அவள் நினைப்பை முழுவதும் மாற்றுபவள் போல் மாலினி ஓடி வந்து பரபரத்தாள்.

"என்ன வாணி கிஷோரைப் பார்த்தாயா? பேசினாயா.. என்னதான் சொன்னார்?" என்றாள் குரல் துடிக்க.

அவளது அதீத ஆர்வத்தையும் கண்களில் ஓடிய எதிர் பார்ப்பையும் கண்ட வாணி திகைத்தாலும், அதை விட தன்னை மிரட்டும் ஒருவனை இனியும் அவர் இவர் என மரியாதையாய் விளித்துக் கொண்டிருப்பது எரிச்சலையே கிளப்பியது.

''முதலில் அந்த கிஷோரை அவன் இவன் என கூப்பிடுங்கள். எதற்கு அவனைப் போன்ற ஆட்களுக்கு மரியாதை கொடுக்கிறீர்கள்?'' என்றாள் கோபமாய்.

ஆனால் மாலினியோ அதற்கு கொஞ்சமும் அசராமல், ''இல்லை வாணி. சிறு வயதில் இருந்தே எல்லோரையும் மரியாதை கொடுத்தே அழைத்துப் பழகி விட்டதால்... என்னால் மாற்றிக் கொள்ள முடியவில்லை...'' என்றாள் குரலில் அப்பாவித்தனத்தைக் காட்டியபடி.

நிஜமாகவே இவள் உலகம் தெரியாத வெகுளியாய் இருப்பாளோ? என ஒரு கணம் நினைத்துக் குழம்பத்தான் செய்தாள் வாணி.




ஆங்கில எழுத்தாளர் 'தாமஸ் ஹார்டி'யின் காதல் நவீனங்கள் உலகப் புகழ் பெற்றவை. அதிலும் அவர் எழுதிய 'Far From the Maddening Cloud' நாவல் வாணியை மிகவும் கவர்ந்தது.

அழகான சீமாட்டியும் இளவரசி போன்ற கதாநாயகி பேத்ஷீபாவை ஏழைக் கதாநாயகன் நேருக்கு நேர் சந்திக்கிறான். கண்டதும் கம்பர் சொன்னது போல் கண்கள் கருவிழிகள் ஒன்றோடு ஒன்று குலவி உடனடியாகக் காதல் பிறக்கிறது. அந்தக் காதலின் உணர்வை, இதமான மனத் துடிப்பை இருவரும் தாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு நொடியும் உணருவார்கள். ஆனால் அந்தக் காதலை ஒருபோதும் வெளிக்காட்டாமல் அப்படியொன்று இல்லாதது போலவே நடந்து கொள்வார்கள்.



அதாவது உள்ளுக்குள் எக்கச்சக்க காதலை வைத்துக் கொண்டு வெளியில், 'அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை.' என்பது போல் நடந்து கொள்வார்கள். அப்படி தனது கதாபாத்திரங்களின் காதல் உணர்வுகளை அழகாக படைத்திருப்பார் தாமஸ் ஹார்டி.

அது போலத்தான் வாணியின் நிலைமையும் இருந்தது. உதயசந்திரன் பின்னாலே சுற்றியபோதும், சதா பேசி காதல் தொந்தரவு செய்த போதும் அதில் நாட்டமில்லாமல் செருப்பை உயர்த்திக் காட்டியவள், அவனை இன்னொருத்தியுடன் பீச்சில் பார்த்ததும் நிலை கொள்ளாமல் தான் தவித்தாள்.

அதிலும் அந்தப் பெண் அவனது முறைப் பெண் என்பது தெரிந்ததும் அவள் தவிப்பு பன் மடங்காயிற்று. உதயசந்திரன் அவளுடன் சுற்றினால் என்ன... இல்லை அவளையே கல்யாணம் செய்து கொண்டால் என்ன? என நினைத்து அவளால் நினைப்புகளை சட்டென உதறிப் போன முடியவில்லை.

எதையோ பறி கொடுத்தது போலவே மனசு தவித்தது. வீண் பிடிவாதத்தால் இழந்து விடுவோமோ.. என்று கூட பயத்தைக் காட்டியது.

எதனால் இப்படி... எதற்காக இப்படியெல்லாம் சிந்திக்கிறேன்? என அவள் தன்னைத் தானே கேட்டுப் பார்த்தாள்.

அவளால் அதற்கும் சட்டென விடை காண முடியவில்லை. பெரும் மௌனம்தான் எழுந்து அவளை மேலும் வாட்டியது.

இரவு முழுவதும் தூங்காதவளாய் உதயசந்திரனைப் பற்றியே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்தாள்.

அதே நினைப்புடன் இருந்தவளுக்கு மறுநாள் நடந்த விஷயம் மேலும் குழப்பத்தை அதிகரித்தது. அன்று அலுவலக இடைவேளையில் அவளைத் தேடி அவள் பிரிவிற்கே வந்து விட்டான் உதயசந்திரன்.

மதிய உணவை முடித்து விட்டு இன்னும் அரை மணி நேரம் இருக்கிறதே... என தவித்தவள் அவனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள். ''வா... பேசுவோம்...'' என்றபடி உதயசந்திரன் அலுவலகத்தை ஒட்டிய செடிகள் நிறைந்த தோட்டப் பகுதிக்கு அழைத்துச் சென்றான்.

அவன் அழைத்த விதமும் சரி... விறுவிறுவென முன்னால் நடந்து சென்ற விதமும் எவ்விதத் தயக்கமும் இல்லாமல் சீராக இருந்தது. யார் பார்த்தால் என்ன... என்னிடம் எந்த எண்ணமும் தவறாக இல்லை என்ற கம்பீரம் இருந்தது.

ஆனால்... வாணிக்கு..? அவளால்தான் அவனுடன் முன்பு போல் இயல்பாய் நடந்து கொள்ள முடியவில்லை. அவளைப் பார்த்தாலே ஒரு விதத் தடுமாற்றம், பேச ஆரம்பித்தால்... அதைவிட ஒரு வித நடுக்கம்... என்ன.. என்ன ஆயிற்று? இப்போது கூட நடந்து செல்லும் பாதையைப் பார்க்காமல் காணாததைக் கண்டது போல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நடக்கிறோமே.. என்ன... புத்திதான் பேதலித்து விட்டதா?

தன்னைத்தானே கேட்டுக் கொண்டு விடை தெரியாமல் பின் தொடர்ந்தவள் அதே மன நிலையிலே தோட்டத்துப் பக்கம் அவன் காட்டிய மர இருக்கையொன்றில் அமர்ந்தாள்.



''பின் என்னாயிற்று?'' என்று அவன் கேட்டதும் உடன் பதில் சொல்ல முடியாது திருதிருவென விழிக்கத்தான் செய்தாள்.

ஆனால் உதயசந்திரன் அவள் தவிப்பை உணராமல் அவனே எடுத்துக் கொடுத்தான்.

''அதுதான்... உன் அண்ணி மாலினி விஷயம்... கிஷோரை சந்தித்துப் பேசியதைச் சொன்னதும்... என்னாயிற்று?'' என்றான்.

தன் விஷயத்தில் இவ்வளவு அக்கறை காட்டுகிறானே.. என நெகிழ்வானவள் படபடவென தயக்கம் விலகிப் பேச ஆரம்பித்தாள்.

மாலினி நிஜமாகவே கிஷோருக்குப் பயப்படுவது போல் பேசுவது இருப்பது உண்மையிலே அவள் சொல்கிறாளா... சரியான வெகுளியாய் இருப்பாளா.. என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது என்பதனையும் அவனுக்கு விளக்கினாள்.

ஆனால் அவள் சொல்வது எல்லாவற்றையும் சிரித்தபடி கேட்ட உதயசந்திரன் சிறிது சிந்தித்து விட்டு மறுப்பாய் தலையசைத்தான்.

''நிச்சயமாய் உன் அண்ணி மாலினி வெகுளி இல்லை...'' என்றான்.

''எதை வைத்து சொல்கிறீர்கள்?'' என வாணி கேட்டதும் நிதானமாய் விளக்க ஆரம்பித்தான்.

''நான் நேற்று திரும்பவும் உனக்காக அந்த டான்ஸ் ஸ்கூலுக்குச் சென்று விசாரித்தேன்.'' என்று அவன் ஆரம்பித்த போது அந்த 'உனக்காக' வார்த்தையில் அவன் அழுத்தம் கொடுத்தது போலவே அவளுக்குத் தோன்றியது.

''அங்கு விசாரித்ததில் எனக்கு இன்னுமொரு முக்கியமான தகவல் கிடைத்தது...'' என்றதும்,

''முக்கியமான தகவலா.. என்ன அது?'' என்றாள் ஆவல் பொங்கியவளாய்.

''அந்த இளைஞன் கிஷோர் படு ஷோக்குப் பேர்வழியாம். நிறைய பெண்களை இப்படி தன் வலைக்குள் போட்டு கூத்தடிப்பதுதான் அவனது தொழிலாம். சில நேரங்களில் பணம் கேட்டு அவர்களிடம் பிளாக் மெயில் செய்வது கூட உண்டாம். அப்படி ஓரிரு சமயங்களில் விஷயம் போலீஸ் வரை போய் புகார் கூட பதிவாகி உள்ளதாம்...''

உதயசந்திரன் விவரிக்க அரண்டு போனவளாய்த்தான் ஆகி விட்டாள் வாணி.

''அவ்வளவு பயங்கரமானவனா அவன்?'' என்றாள் வாய் பிளக்க.

''பயங்கரமானவன் இல்லை. ஒண்ணாம் நம்பர் பொறுக்கி அவன்! விசாரித்ததில் அப்படித்தான் தெரிகிறது!'' என முடித்தான் உதயசந்திரன்.

''அப்படியானால் அவன் பிடியில் இருந்து மாலினியை விடுவிப்பது சாத்தியமில்லையா..?''

''ஏன்.. இல்லை..? நிச்சயமாக அது முடியும். ஆனால் அது மாலினி கையில்தான் உள்ளது...''

''மாலினியின் கையிலா..?''

''அதாவது... அவளது நம்பகத்தன்மை.. அவள் சொல்வது உண்மைதானா என்பதைப் பொறுத்தது...''



வாணி புரியாமல் விளக்க உதயசந்திரனே புரியும்படி விளக்கினான்.

''அதாவது உன் அண்ணிக்கு அந்த கிஷோர் மீது இப்போது எவ்வித மயக்கமும் ஈடுபாடும் இல்லையெனில் எளிதாக பிரச்சினையைச் சமாளித்து விடலாம். கிஷோரின் பிடிகளில் இருந்து மாலினியை மீட்டும் விடலாம்...''

''அண்ணி அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. கிஷோர் மீது பெரும் பயம்தான் இருக்கிறது என்றுதான் சொல்கிறாள்...''

''அப்படி அவள் சொல்வதை உன்னால் கூட முழுதுமாய் நம்ப முடியவில்லைதானே?''

வாணி மௌனமானவள் தலையை பெரிதாய் அசைத்தாள்.

''நான் எதற்கு இப்படிச் சொல்கிறேன் என்றால் எனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரி நண்பர் ஒருவர் மூலம் கிஷோரை விரட்டி ஒதுங்கச் செய்து விடலாம்...''

''அது சரி... ஆனால் போலீஸ் என்று போனால் வீட்டில் அண்ணனுக்குத் தெரிய வாய்ப்பாகி விடுமே...''

''இல்லை... வெளியில் தெரிய வாய்ப்பில்லாமல் அவர் கச்சிதமாய் கிஷோரை மட்டும் கூப்பிட்டு மிரட்டி விரட்டி விடுவார். ஆனால் மாலினிக்கு அவன் மீது ஈடுபாடு இன்னமும் இருந்தால் இப்படிச் செய்வது எவ்விதத்திலும் பலனளிக்காது...''

''நீங்கள் சொல்வது புரிகிறது...''

வாணி இம்முறையும் தலையை வேகமாய் ஆட்ட உதயசந்திரன் நேருக்கு நேராய் அவளை உற்றுப் பார்த்தான்.

"முதலில் நீ அதைக் கண்டு பிடிக்க வேண்டும். உன்னால் முடியுமா?" என்றான்.

"எப்படி?" என்றாள் அவள்.

"அது.. ரொம்பவும் சுளுதான்... சுலபம்தான். மாலினியிடம் போய் கிஷோர் விலகி விட்டான். இனி உன் பாதையில் குறுக்கிட மாட்டான் என பொய்யாய் புளுகினால் போதும். அவள் அதை நம்புவதை வைத்தே கணித்து விடலாம்..."

"நம்புவதை வைத்து என்றால்...?"

"நீ சொல்லும் பொய்யை அவள் உடனே நம்பி விட்டால்... அவளுக்கு கிஷோருடன் தற்போது வேறு எந்தத் தொடர்பும் இல்லையென்று அர்த்தம் கொள்ளலாம்... அப்படி இருக்காது கிஷோர் ஒரு போதும் என்னை லேசில் விட மாட்டார் என்றெல்லாம் வாதம் செய்தால் அவளுக்கு கிஷோர் மீது ஈர்ப்பு மட்டுமல்ல, கிஷோரும் அவளும் சேர்ந்தே இப்படியொரு மிரட்டல் நாடகம் நடத்துகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்..."

உதயசந்திரன் விளக்கியதும் அவளுக்குப் புரிந்தது. அப்படியே மாலினியிடம் பேசி கேட்டுப் பார்ப்பதாகச் சொன்னாள். அத்தோடு உதயசந்திரனும் அவளிடம் விடைபெற்றுச் சென்று விட்டான்.

அன்று மாலை வீட்டிற்குள் நுழைந்தபோது வாணிக்கு வேறொரு அதிர்ச்சியான ஆச்சரியம் காத்திருந்தது.

என்றுமில்லாததாய் சிவப்பேறிய கண்களுடன் கோபமாய் அவள் வரவுக்காக காத்திருந்தான் அண்ணன் சுகேசன்.






வாணி வழக்கமான புன்னகையுடன் நுழைந்ததும் பதிலுக்குக்கூட புன்னகைக்காமல், "உன்னிடம் பேச வேண்டும். முதலில் வா..." என்றபடி விறுவிறுவென மாடிப்படியே நோக்கிச் சென்றான்.

ஒன்றும் புரியாதவளாய் ஹாண்ட் பேக்கை வைத்து விட்டுப் பின் தொடர்ந்தாள் வாணி. மேடையின் சிறிய ரூமில் கோபமாய் நின்று அவளையே முறைப்புடன் பார்த்தவனை அவள் அதிசயமாய்த்தான் பார்த்தாள்.

"என்ன அண்ணா... என்ன விஷயம்?"

பதில் பேசாமல் சுகேசன் அதுவரை தன் கையில் மறைவாய் பிடித்திருந்த அந்தக் கவரை நீட்டினான்.

"முதலில் இதைப் பார்..." என்றான்.

வாணி புரியாமல் அந்தக் கவரை வாங்கிப் பிரித்தாள். உள்ளிருந்து படபடவென நாலைந்து புகைப்படங்கள் வெளிவந்தன.

புகைப்படங்களைப் பார்த்த வாணி அப்படியே சப்த நாடி ஒடுங்கியவள் போல் அதிர்ந்தாள்.

அவை...

கடற்கரை பீச்சில் அவள் கிஷோருடன் பேசச் சென்ற போது அவளையறியாமல் யாரோ எடுத்த போட்டோக்கள்!

போட்டோக்களில் அவள் கிஷோருடன் நிற்பது போல்.. நடப்பது போல்... அவள் சிரித்து நிற்பதுபோல்... என சமயம் பார்த்து போட்டோக்கள் எடுக்கப்பட்டிருந்தது அவளை மிகவும் அதிர வைத்தது.

''என்ன.. இது.. யார்.. எடுத்தது.. இது.. இது.. எ..ப்..ப..டி?''

அவள் திக்கித் திணறி கேட்க, ''அதையே தான் நானும் கேட்கிறேன்...'' என்றான் சுகேசன் கோபக் குரலில்.

அவளுக்கு சட்டென ஏற்பட்ட அதிர்ச்சியை விட சுகேசனிடம் என்ன சொல்வது? என்ற குழப்பமே ஏற்பட்டது.

அது... கிஷோர்... அண்ணியின் முன்னால் காதலன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

வேறு என்ன சொல்ல?

''யார்... வாணி... இது?''

மறுபடியும் குரலில் கடுமை காட்டி சுகேசன் கேட்ட போது அவளுக்கு பொய் தானாக வந்தது.

''அது... அது... ஒரு நண்பர்தான் அண்ணா. என்னுடன் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார்... அது.. தான்...''

தட்டுத் தடுமாறி முடித்தாள்.

சுகேசனின் சுருங்கிய நெற்றி விரிந்த பாடில்லை. ''ஆனால் போட்டோவைப் பார்த்தால் இருவரும் கடற்கரையில் இருப்பது போல் அல்லவா இருக்கிறது...?'' என்றான்.

அதற்கும் சட்டென, ''ஆமாம்... ஆமாம்...'' என தலையாட்டியவள், ''அதாவது அலுவலக டெண்டர் விஷயமாக ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தோம். அந்த டெண்டர் நபரின் அலுவலகம் பீச் ஓரமாக இருந்தது. அலுவலகத்தில் அவர் வெளியே சென்றிருப்பதாய் அரை மணி நேரத்தில் வந்து விடுவதாய் தெரிவிக்கவே சும்மா இருக்கப் பிடிக்காமல் பக்கத்து பீச் மணலில் நடந்து கொண்டிருந்தோம். அப்போது யாரோ ஒரு விஷமி இப்படி போட்டோ எடுத்து அனுப்பியிருக்கிறான்...'' என முடிக்கவும் சுகேசன் தலையாட்டினான்.



அவள் நம்புவது போல் சொன்னதாலோ என்னவோ சுகேசனும் நம்பி விட்டது போல் தான் தெரிந்தது.

''ஆனாலும் எதற்கு இப்படி போட்டோ எடுத்து அனுப்ப வேண்டும். நம் முகவரி அவனுக்கு எப்படித் தெரிந்தது?'' என்ற கேள்வியை திகைப்புடன் எழுப்பினான்.

அதற்கு வாணியால் பதில் சொல்ல முடியவில்லை. திருதிருவென விழிக்கத்தான் முடிந்தது. பின் அவனே சாந்தம் கொள்பவனாய், ''சரி விடம்மா. நான் என்னவோ எதுவோ.. காதல் சமாச்சாரம் என்று பயந்து விட்டேன். அப்படி ஒன்றும் இல்லை தானே..?'' என திரும்பவும் தெளிவாய் நேரிடையாய் தெரிந்து கொள்ள வெளிப்படையாகவே கேட்டுவிட வாணியின் தலை முன்னுக்கும் வேகமாய் ஆடியது.

''சே.. சே! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை அண்ணா..!'' என அவசரமாய்ச் சொன்னாள். அப்படிச் சொல்லும்போதே மனதில் உதயசந்திரனின் பிம்பம் பெரிதாய் தோன்றி அவளை நோக்கிச் சிரித்து விட்டுச் சென்றது.

சுகேசன் அவளது பதிலால் முழு திருப்தியடைந்து விட்டான் என்பதை அவனது முகமே காட்டியது. பக்கத்தில்

வந்து புன்னகையுடன் அவள் தோள்களைத் தட்டியவன், "என் தங்கையைப் பற்றி எனக்குத் தெரியாதா?" என சிரிப்பை பெரிதாக்கியபடி அங்கிருந்து அகன்றான்.

அவன் சென்றதும் வாணி மின்னல் வெட்டியது போல் யோசித்தவள் அதிர்ந்தாள்.

அவளையும் கிஷோரையும் இப்படி பீச்சில் போட்டோ எடுத்தது. அதை வேண்டுமென்றே வீட்டுக்கு லெட்டராய் அனுப்பி வைத்தது யார்..?

இதுவும் கிஷோரின் வேலைதானா?

எதற்காக இப்படி போட்டோ எடுத்து அதை தன் முகவரிக்கே அனுப்ப வேண்டும்? ஆமாம்... அப்படி யாரோ தன்னை போட்டோ எடுக்கும்போது கூட எப்படி உணராமல் நாம் இருந்திருக்கிறோம்? எனவும் நினைத்தாள்.

பின்புற சமையற்கட்டுப் பக்கம் நின்ற மாலினியைத் தேடிச் சென்று காட்டியபோது அவளும் பற்களைக் கடித்தாள். "சரிதான். இது கிஷோரின் வேலை தான்!" என்றாள்.

"என்ன கிஷோரின் வேலையா... எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்?" என வாணி கேட்டபோது மாலினி சொன்ன பதில் அவளை அதிர வைத்தது.

"வேறு... எதற்கு..? உன்னையும் பிளாக் மெயில் செய்யத்தான்.. மிரட்டத்தான்..!"

"புரியவில்லை... என்னை மிரட்டவா...?"

"ஆமாம்.. அதாவது.. அவ ன உன் காதலன் போல், அவனுடன் நீ பீச்சில் சுற்றியது போல் சொல்லி மிரட்ட..."



"இது... என்ன அநியாயம்! இப்படியெல்லாம் கூட அவன் செய்வானா?"

"இப்படிச் செய்வதுதான் அவனது தொழிலே என்று சொல்கிறார்கள். இப்போது அந்த கிஷோர் எவ்வளவு பயங்கரமானவன் என்று உனக்குப் புரிகிறதா? நான் எதற்காக அவனுக்கு இவ்வளவு பயப்படுகிறேன் என்பதும் விளங்குகிறதா?"

வாணி பலமாய் தலையாட்டினாள்.

"புரிகிறது. ஆனால் இப்படிச் செய்வதால் அவனுக்கு என்ன கிடைத்து விடப் போகிறது?"

"குடும்பத்தில்... இப்படி பிரச்சினையைக் குழப்பத்தை ஏற்படுத்துவதுதான்..."

"நீங்கள் சொல்வது புரியவில்லை..."

"அதாவது வாணி, நீ உன் அண்ணனிடம் விளக்கம் கொடுத்ததும் அவர் நம்பி தெளிந்து விட்டார். அப்படி நம்பாமல் போனால் பிரச்சினை தானே. வீணான குழப்பம் தானே?"

வாணி புரிந்தவளாய் தலையசைத்தாள்.

"சரி.. இதற்கு என்னதான் செய்வது?" என்றாள்.

மாலினி பதிலுக்கு தன் நீளமான முகத்தை வெட்டி வெட்டி யோசித்தவள், "வழி இருக்கிறது. ஒரே வழி அது தான்!" என் ாள்.

"என்ன வழி?"

"அந்த கிஷோரிடம் சென்று பேசுவது. இன்று டான்ஸ் ஸ்கூலில் அவனிடம் நான் சென்று பேசுகிறேன். கேள்வி கேட்டு அவனை உண்டு இல்லையென பண்ணி

விடுகிறேன்...'' என்றாள் மாலினி குரலில் பெரும் கோபத்தைக் காட்டியபடி.

வாணியும் கண்கள் விரிய சினமானவள் பற்களைக் கடித்தாள். ''நானும் வருகிறேன். அந்த ராஸ்கல் எவ்வளவு தைரியமிருந்தால் இப்படிச் செய்வான்?'' என்றாள்.

அதற்கு அவசரமாய் மறுத்தாள் மாலினி. ''வேண்டாம்... நீ வந்தால் அவன் மேலும் எதாவது குழப்பப் பார்ப்பான். அதனால் நானே பேசி சரி செய்து விடுகிறேன்...'' என்றாள்.

வாணியும் சரியென அத்தோடு விட்டு விட்டாள். மறுநாள் இவ்விஷயத்தை உதயசந்திரனிடம் உடனே சொல்லிவிட வேண்டும் என அவனைத் தேடிப் போன போது மாத இறுதி என்பதால் அவன் அலுவலகப் பணிகளில் பிஸியாக இருந்தான். அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என திரும்பி வந்து விட்டாள்.

அன்று மாலை வழக்கம் போல் டான்ஸ் ஸ்கூலுக்கு கிளம்பினாள். மாலினி வெள்ளை அடித்தாற் போல் ஒரு வண்டி மேக்கப்புடன் வந்து நின்றபோது அவளுக்கு எரிச்சலே கிளம்பியது.

இவள் இப்படிச் சீவிச் சிங்காரித்து விட்டு வருவது... தேவையா..? எதற்காக இந்த மினுக்கு... தேவையில்லாத செயற்கை அலங்காரம்? என்ற அசூயை தோன்றவே கிளம்பினாள். அப்படி டான்ஸ் ஸ்கூல் கிளம்பும்போது முன் இருந்த ஆர்வம், உற்சாகம் போய் வெறுப்பே மிஞ்சியது.

இப்படி டான்ஸ் ஸ்கூலுக்கு நடனம் பயிலுகிறேன் என மாலினியை கூட்டிக் கொண்டு போக ஆரம்பித்ததில் இருந்துதானே வினையும் ஆரம்பித்தது.



அவர்கள் மட்டும் டான்ஸ் ஸ்கூல் செல்லாமல் இருந்தால் அந்தக் கிஷோர் மாலினியை பாத்திருக்க மாட்டானே! இப்படித் தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு அல்லல் பட வேண்டியிருக்கிறதே!

யோசித்துப் பார்த்தவள் இன்னொரு விஷயத்தையும் திடுக்கிடலோடு உணர்ந்தாள். அதாவது அண்ணி மாலினி முன்பு போல் இல்லாமல் அவள் சுபாவத்தையே மாற்றியிருந்தாள்.

முன்பு.. மைத்துனி.. என அன்பு மைத்துனி என ஒவ்வொரு நொடியும் அன்பையும் பாசத்தையும் கொட்டி உருகு உருகென உருகியவள் இப்போதெல்லாம் வாயைத் திறக்காத இறுக்கத்துடனே நடமாடுகிறாள். எதனால்.. இப்படி?

சொல்லப் போனால்... கிஷோரின் பழக்கத்தை உணர்ந்து மாலினியிடம் நேருக்கு நேர் அவர்கள் தொடர்பு பற்றி கேட்டதில் இருந்துதான் இந்த அதிரடி மாற்றம்!

அப்படியானால் பெரும் பாசம் வைத்திருப்பது போல் அன்பைப் பொழிந்தது எல்லாம் மாலினி போட்ட வேஷம் தானா?




உதயசந்திரன் தெளிவாக உச்சரித்து தான் சொன்னான். வார்த்தைகள் அவள் காதில் விழாமல் இல்லை. ஆனால்

விழுந்ததும் காதே செவிடாய்ப் போனது போல்தான் அவளுக்கு ஆயிற்று.

"நீ... அன்று.. கடற்கரையில் என்னுடன் பார்த்தாயே... என் அத்தை பெண் மஞ்சரி... அவளுக்கும் எனக்கும் கல்யாண நிச்சயதார்த்தம் அடுத்த வாரம் நடைபெற இருக்கிறது. நீ கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்..."

அவளுக்கு அந்தப் பழமொழிதான் ஞாபகத்திற்கு வந்தது.

ஒருவன் வீட்டில் ஊரெல்லாம் ஒரே பிரச்சினை என்று கோயிலில் போய் தஞ்சமடைந்தால் அங்கோ சாமியே எழுந்து தலை விரித்து ஆடியதாம். அது போல் தான் அவளது நிலையும் இருந்தது.

மாலினி வீசிய நெருப்புத் துண்டுகளுக்குப் பயந்து உதயசந்திரனிடம் போய் நின்றால் அவன் பெரும் எரிமலை சீற்றத்தை அல்லவா அவள் தலையில் கொட்டி விட்டான்! மாலினி அதிர்ச்சி மேல் அதிர்ச்சிகளைக் கூறி அவளை தடுமாற வைத்து விட்டாள் என்று நினைத்தால் இவனோ அஸ்திவாரத்தையே ஆட்டிப் பார்க்கிறான்!

என்ன இது சோதனை!

அந்த.. அத்தைப் பெண் மஞ்சரிக்கும் இவனுக்கும் கல்யாணமாம். நிச்சயதார்த்தமாம். இப்போது என்ன வந்தது? எதற்காக இந்த அவசரம்?

சட்டென தனது மனதில் தோன்றியதையே வார்த்தைகளால் கேட்டாள் அவள்.

உதயசந்திரன் கடகடவெனச் சிரித்தான்.

"என்ன அவசரமா? என்ன வாணி சொல்கிறாய்? காலா காலத்தில்... நானும் கல்யாணம் என்ற ஒன்றை கட்டிக் கொண்டு வாழ்க்கையில் செட்டிலாக வேண்டியது தானே?"



அதற்கு பதில் சொல்லாமல் வாணி அழுந்த உதட்டைக் கடிக்க உதயசந்திரன் அவளையே பார்த்தவாறு பேசியவன்,

"மேலும் இந்த மஞ்சரி வேறு தொணதொணவென நச்சரித்துக் கொண்டிருந்தாள்..." என எடுத்தும் கொடுத்தான்.

"அவள் நச்சரித்தால் என்றால் உடனே சம்மதித்து விடுவதா?" என்றாள் வாணி அதே துடுக்குடன்.

ஆனால் உதயசந்திரன் கைகளை விரித்துக் காட்டினான்.

"வேறு என்ன செய்வது? அவள் என்னை மனமார நேசிக்கிறாளாம். அவ்வளவு தூரம் விரும்புகிறாளாம்..."

அவன் சொன்னதும் வாணிக்கு வந்ததே கோபம்.

"அவள் விரும்புவது இருக்கட்டும். அவள் விரும்பினால் நீங்களும் விரும்பி விடுவீர்களா? அவளை நேசித்து விடுவீர்களா?" தான் என்ன கேட்கிறோம் என்பதைக் கூட உணராமல் தான் அவள் கேட்டாள்.

ஆனால் அதற்கும் பொறுப்பாய்த்தான் பதில் சொன்னான் உதயசந்திரன்.

"என்ன செய்வது? ஆவலாய் ஓடோடி வந்து நம்மை விரும்பும் ஒருவரை அலட்சியப்படுத்தக் கூடாது அல்லவா? அவர் மனதை நாம் நோகடிக்கக் கூடாது அல்லவா?"

உதயசந்திரன் இப்படிச் சொல்லி முன்பு அவள் அவனை அலட்சியப்படுத்தியதை மறைமுகமாக குத்தி

உணர்த்தியது அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும் அவளுக்கு உதயசந்திரன் மனதில் மஞ்சரி பற்றிய நினைப்பு எந்த அளவில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதைத் தெரிந்தாக வேண்டும். இல்லையேல் அவள் தலையே வெடித்தாலும் வெடித்து விடும்.

அதனாலே, ''சரி.. நீங்கள் அப்படி நோகடிக்க வேண்டாம். உங்களுக்கென்று ஒரு மனது இருக்கிறது அல்லவா... அதில் என்ன நினைக்கிறீர்கள்? மஞ்சரி விரும்பினால்... பதிலுக்கு விரும்பிவிட வேண்டியதுதான் என நினைக்கிறீர்களா?'' என்றாள்.

அவள் ரொம்பவும் யோசித்துத் தடாலடியாய் கேட்ட கேள்விக்கு வெகு சாதாரணமாய் உடன் பதில் சொன்னான் உதயசந்திரன்.

''வேறு என்ன செய்வது?'' என்றான்.

அவளுக்கு மறுபடியும் தன்னை மீறிய ஆத்திரமே பீறிட்டது.

''என்ன.. என்ன செய்வதா..? மூளை என்ற ஒன்று நமக்கு இருக்கிறது அல்லவா? அதை வைத்து சிந்திக்க வேண்டியதுதானே?''

அவள் தகுதி மீறி மிகத் துடுக்காய் கேட்டாலும் அதற்கும் பொறுப்புடன்தான் பதில் சொன்னான் அவன்.

''சிந்தித்துப் பார்த்தேன். ஆனால்.. ஆனால்... ஒன்றும் புரியவில்லை...''

''ஒன்றும் புரியவில்லையா?''

''ஆமாம்... என்ன செய்ய... எப்படி முடிவெடுக்க என ஒன்றும் புரியவில்லை...''



அவன் சொன்னதைக் கேட்டு அவளின் கோபம் கூடத்தான் செய்தது.

''அதான் முடிவெடுத்து விட்டீர்களே... கல்யாண நிச்சயதார்த்தத்திற்கு நாள் கூட குறித்து விட்டீர்களே.. பின் என்ன?''

அதற்கும் விட்டேற்றியாகவே உதயசந்திரன் பதில் சொன்னான்.

''நான் முடிவெடுக்கவில்லை. வீட்டில் எல்லோரும் எடுத்தார்கள். அதற்கு தலையை மட்டும் நான் ஆட்டினேன்...''

''அப்படியானால்... அதில் உங்களுக்கு விருப்பமில்லையா?''

அவள் கேட்டதற்கு உடன் பதில் சொல்லாமல் அவளையே உற்றுப் பார்த்தவாறு நீளமான மூச்சிழுத்தான் அவன்.

''நமக்கு விருப்பமிருக்கிறதோ... இல்லையோ சில முடிவுகளை நாம் ஏற்றுத்தானே ஆக வேண்டும்?'' என்ற போது அவளுள் துடிப்பு கூடி வார்த்தைகளாய் வெளிப்பட்டது.

''ஆனால் இது... உங்களது வாழ்க்கைப் பிரச்சினை சந்திரன்... நீங்கள் உங்கள் முழு மனதோடு முடிவெடுக்காவிட்டால்.. பின்னால் வருந்த நேரிடும்...''

அவள் சொன்னதற்கு மறுக்காமல் ஆமோதிப்பவன் போல் தலையை சோகமாக்கியவன் போல் லேசாய் அசைத்தான் அவன்.

''ஆமாம்.. பின்னால் வருத்தப்பட வேண்டியிருக்கும்...'' என்றான் அதே தொனியில்.

அவள் இம்முறை அவன் பதிலைக் கண்டு திடுக்கிட்டுத்தான் அவனைப் பார்த்தாள். என்ன நினைக்கிறான்... என்னதான் சொல்ல வருகிறான். இவன் என குழம்ப அவளை அடுத்த கேள்வி கேட்டு மேலும் திகைக்க வைத்தான் அவன்.

''அதை விடு வாணி. உன் அபிப்பிராயத்தைச் சொல்லு. மஞ்சரி பற்றி என்ன நினைக்கிறாய்? அவளைக் கட்டிக் கொள்ளலாமா?'' என்றான்.

வாணி ஒரு கணம் பேச்சு வராமல் வாயடைத்துதான் போனாள். கடைசியில் அவளிடமே அந்தக் கேள்வியைக் கேட்டு விட்டான். என்ன சொல்வாள் அவள்.

அதனாலே அதே அவசரத்துடன், ''எனக்குத் தெரியாது...'' என்றாள்.

''என்ன... தெரியாதா...? என்ன சொல்கிறாய் வாணி?''

அதற்கும் சமாளிப்பவளாய், ''எனக்கு உங்கள் மஞ்சரி பற்றி எதுவும் தெரியாது என்பதால் என்னால் உங்களுக்கு எந்த அபிப்பிராயமும் சொல்ல முடியாது...'' என்றாள்.

ஆனால் உதயசந்திரன் விட்டபாடில்லை.

''குணத்தைப் பொறுத்த வரையில் மஞ்சரி மிகவும் நல்ல பெண் தான். அவளிடம் எந்தக் குறையையும் காண முடியாது. நல்ல சூட்டிகையான அறிவாளியும் கூட...''

அவன் இப்படி மஞ்சரியை புகழ்ந்து சொன்னது அவளுள் மறுபடியும் அந்த ஆத்திரத்தைக் கிளப்பியது.

''அப்படியானால்... அந்த தங்கத்தை அந்த அறிவாளியை... கட்டிக் கொள்ள வேண்டியது தானே?'' என்றாள் சினம் பொங்க -



அவளது கோபத்தை பொருட்படுத்தாதவனாய் அசராமல் அவளைப் பார்த்தவன், ''ஆம். அதான் அவளை கட்டிக் கொள்ளப் போகிறேன். அதற்காகத்தான் நிச்சயதார்த்தமும் நடக்கப் போகிறது..'' என்றான் அமைதியாக.

அவளுக்கு பொட்டிலடித்த மாதிரிதான் இருந்தது. கடைசியில் தன் வாயாலே கட்டிக் கொள்ளப் போகிறேன் என்று சொல்லி விட்டான். இனி என்ன செய்வது? வாயடைத்துதான் போய் விட்டாள் வாணி.

அவள் பேச்சு வராதவள் போல் அப்படியே உறைந்து விட உதயசந்திரன் அதை கொஞ்சமும் உணராது,

''என் விஷயத்தை விடு. உன்னைப் பற்றி உன் பிரச்சினையைப் பற்றிச் சொல்லு? உன் அண்ணி மாலினி கடைசியில் என்னதான் சொல்கிறாள்?'' என்றான்.

வாணிக்கோ அவன் கேட்டதற்கு எந்த பதிலும் சொல்ல முடியவில்லை. ஏன் வாயைத் திறந்தால் வார்த்தைகள் வராத அளவுக்கு வாயே அடைத்துப் போனது.

ஆனால் உதயசந்திரனோ உலுக்குவது போல் மறுபடியும் அதே கேள்விகளைக் கேட்டான்.

வேறு வழியில்லாமல், ''ஒன்றுமில்லை...'' என்றாள் அவள் அவசரமாக.

''என்ன.. ஒன்றுமில்லையா? மாலினி ஒன்றும் சொல்லவில்லையா?''

''ஒன்றும் சொல்லவில்லைதான்!'' என்றபடி வாணி பேசியவள் அதற்கு மேலும் அங்கு இருக்கப் பிடிக்காதவள் போல் இருக்கையை விட்டு எழுந்தாள். விறுவிறுவென திரும்பி வாசல் நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் ஒரு வித இறுக்கமான கோபத்துடன் விருட்டென எழுந்து போவதை ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

## 19



வாணி அன்றைய தினம் உதயசந்திரனிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடித்தான் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்தாள் என்று சொல்ல வேண்டும். வீட்டில் அவள் எதிர்பார்க்காத அதிர்ச்சியொன்று பூதாகாரமாய் கிளம்பி அவளை நிலை தடுமாற வைத்தது.

வழக்கம் போல் மாற்றுச் சேலை அணிந்து டான்ஸ் ஸ்கூலுக்குக் கிளம்ப நினைக்கையில் அவள் ரூமினுள் நுழைந்த அண்ணன் சுகேசன், ''நீ இனி டான்ஸ் கிளாஸ் போகத் தேவையில்லை. பயின்றது போதும்...'' என்றான் இறுக்கமான முகத்துடன்.

மைவிழிகள் படபடக்க அதிர்ந்து பார்த்தவள், ''என்ன அண்ணா சொல்கிறீர்கள்?'' என்றாள். நம்ப முடியாதவளாய்.

''எனக்கு உண்மை தெரிந்து விட்டது...'' என்றான் சுகேசன் ரத்தினச் சுருக்கமாக.

''உண்மையா... அது என்ன உண்மை?''

''நீ.. என்னிடம் முன்பு சொல்லியது எல்லாம் பொய் என்று?''



''பொய்யா...? ஐயோ...! அண்ணா! உண்மை, பொய் என்று ஏதேதோ சொல்கிறீர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை...''

அவள் கேட்டதற்கு அதே இறுக்கத்தோடு நன்றாகக் கண்களை விரித்து அவளைப் பார்த்தான் சுகேசன்.

''கிஷோர்... யார்... என்பது... அவனுக்கும் உனக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது...''

ஐயோ. அண்ணன் கண்டு பிடித்து விட்டாரோ.. என உதட்டை அழுந்தக் கடித்தாலும் முழுவதும் தெரிந்து கொள்ள விரும்புபவளாய், ''கிஷோர்... யார்?'' என்றாள் குரலில் எவ்வித உணர்ச்சியுமில்லாமல்,

''கிஷோர்... உன் அலுவலகத்தில் வேலை பார்ப்பவன் அல்ல... நீ.. பயிலச் செல்லும் டான்ஸ் ஸ்கூலை நடத்துபவன் மேலும் முக்கியமாக...''

சுகேசன் நிறுத்திவிட்டு அவளையே உற்றுப் பார்க்க அவளும் எவ்வித சலனமுமில்லாதவளாய்த்தான் பார்த்தாள்.

''அவன் உன் காதலன். நீ அவனை காதலிக்கிறாய் என்று...'' என்று முடித்தான் சுகேசன்.

வாணி இம்முறை எவ்வித அதிர்ச்சியையும் காட்டவில்லை.

''யார் சொன்னது?'' என்றாள்.

''உன் அண்ணி...''

சுகேசன் அமைதியாக உச்சரித்தபோது அதிர்ந்துதான் போய் விட்டாள் வாணி.

பாவி, மிரட்டிக் கொண்டிருந்தவள் பொறுக்க முடியாமல் அதற்குள் சொல்லிவிட்டாளா!

''என்ன அண்ணியா?''

''அவள்தான்... எல்லாவற்றையும் போட்டு உடைத்து விட்டாள்...''

''எல்லாவற்றையும் என்றால்?''

''நீ கிஷோரை மிகவும் விரும்பிக் காதலிப்பதாகவும் அதை என்னிடம் சொல்ல பயந்து நடுங்குவதாகவும்...''

சொல்லிவிட்டு சுகேசன் அவள் பக்கத்தில் வந்து குனிந்து அவள் கண்களை நன்கு உற்றுப் பார்த்தான். அதுவரை இறுக்கமாய் இருந்த அவனது முகம் சட்டென மாறியது.

குறுகுறுப்பும் நகைப்புமாய் அவளைப் பார்த்தான் அவன்.

''அப்படி என்னிடம் சொல்ல என்னம்மா தயக்கம் உனக்கு?''

அவள் புரியாமல் விழிக்கவும் அவனே பேச்சைத் தொடர்ந்தான்.

''நான்... என்ன... காதலுக்கு எதிரியா? இல்லை என் ஆசைத் தங்கையின் விருப்பத்திற்கு மாறாக நடப்பேனா?''

அவன் சொல்லச் சொல்ல அப்போதுதான் அவளுக்கு விஷயம் வேறு திசையில் வேறு நோக்கில் செல்கிறது என்று.

அடாடா.. என்ன இது..? அண்ணன் கிஷோரை தான் காதலிப்பதாகவே முடிவு பண்ணி விட்டாரா? இருக்கிற குழப்பம் போதாதென்று இது வேறா?



அண்ணன் எப்படி நம்பாமல் இருப்பான்? எல்லாம் இந்த அண்ணியின் ஏற்பாடு அல்லவா? அவள் சொன்னால் நம்பத்தானே செய்வான்?

சரியான நெஞ்சழுத்தக்காரிதான்... இந்த மாலினி! அவளை மிரட்டி விட்டு... ஒரு வார கால அவகாசத்தையும் கொடுத்து விட்டு நெருக்கடி செய்வது போல் விஷயத்தை உடைத்து வேறு போட்டாளே!

ஐயோ..! இப்போது என்ன செய்வது? எப்படி எதைச் சொல்லி இந்த அண்ணனிடம் இருந்து தப்பிப்பது..?

பேசாமல் உண்மையைச் சொல்லிவிடலாம்தான். மாலினியின் காதலன்தான் இந்த கிஷோர். எல்லாம் மாலினி போடும் நாடகம்தான் என உண்மையை உடைத்து விடலாம்...

ஆனால்...

அதன் பின் பெரிய பூகம்பம் அல்லவா ஏற்பட்டு விடும். மாலினியின் தலைமுடியைப் பிடித்துத் தரதர வென இழுத்து வெளியில் கொண்டு போய் விட்டு கதவைச் சாத்தி விடுவான் சுகேசன்.

சரி.. அப்படி விட்டு விட்டால்... மாலினி சும்மா விடுவாளா..?

அவள் சொல்லியபடி ஊரைக் கூட்டி அண்ணனை உண்டு இல்லையென பண்ணி விடுவாள்.

பின் மானம் போவதுதான் மிச்சம்!

அண்ணனும் அவள் போடும் போடில் பேசத் திராணியின்றி நொந்து நூலாகி விடுவான்.

அதனால் இப்படி விஷயத்தை உடைக்க வழியில்லை. உண்மையான குற்றவாளியான மாலினியைக் காட்டிக் கொடுக்க முடியாது.

அந்த தைரியத்தில்தானே... அப்படி உண்மையைச் சொல்ல முடியாது என்று தெரிந்து தானே.. இப்படி வஞ் சகத்தனமாய் அண்ணனிடம் கொளுத்திப் போட்டிருக் கிறாள்.

இப்போது என்ன செய்வது? அண்ணனிடம் எதைச் சொல்லித் தப்பிப்பது?

ஒன்றும் புரியாதவளாய் அவள் விழித்துக் கொண்டிருக்க.. அவள் தோள்களைப் பற்றி ஆதரவாய் தட்டினான் சுகேசன்.

''என்ன யோசிக்கிறாய்? இன்னும் உன் பயம் போக வில்லையா? சும்மா தைரியமாகச் சொல்...'' என்றான்.

ஏதோ.. அவள் தனது காதலைச் சொல்ல தயங்குவது போல் சுகேசன் பரபரக்க அவளுக்கு எரிச்சலை வந்தது. ஆனாலும் வேறு வழியில்லை. கவனமாய் பேச வேண் டும். மாலினி சொன்னது உண்மையில்லை என்று லேசாய் சொன்னால் கூட சுகேசன் மாலினியை துளைத்து துவைத்து விடுவான். அதே நேரம் எப்படி ஒப்புக் கொள்வது? கிஷோரை காதலிப்பதாக ஒப்புக் கொண்டாலும் அது பெரும் ஆபத்தில் போய் முடியுமே?

யோசித்தவள் தட்டுத் தடுமாறி, ''அது.. அது.. ஒன்றும் இல்லை... அண்ணா... உங்களிடம் எப்படிச் சொல்வது எப்படி விளக்குவது... என புரியாமல்... யோசித்துக் கொண்டிருக்கிறேன்...'' என்றாள்.

ஒருவாறு அவள் சமாளித்து முடிக்கவும் கடகடவென சிரித்தான் சுகேசன்.



''நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். விளக்கவும் வேண் டாம். எல்லாம் எனக்குப் புரிந்து விட்டது...'' என்றபடி திரும்பவும் பெருஞ்சிரிப்புக்குப் போனான் அவன்.

அட... இதற்கு என்ன செய்வது? அவள் லேசாக சொன்னதற்கு பெரும் காதல் காவியத்தைக் கண்டது போல் ரோடே போட்டு விட்டான். இந்த அண்ணனை என்ன செய்வது?

''எல்லாம்.. அந்தப் பொல்லாத காதல்..!'' என்று அவன் திரும்பவும் சொல்லியபடி சிரிக்கவும், ஐயோ! உளறாதே அண்ணா என அவளுக்கு தலையிலடிக்கலாம் போல் இருந்தது.

அவன் அடுத்து சொன்ன வார்த்தைகள் அவள் தலையில் நச்சென நிஜமாகவே குட்டியது.

''ஒரு நல்ல நாள் பார்த்து அந்தக் கிஷோரை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வா.. நான் அவரிடம் பேசுகிறேன்...'' என்றான் சுகேசன் முத்தாய்ப்பு வைப்பது போல்.

அவள் அதற்கும் திகைக்கவும் அவள் நிலை உணராது, ''நன்றாகத்தான் முழிக்கிறாய்! இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல சாதுவான நீயும் காதலித்து விட்டாயே.. நல்ல பெண்ணம்மா... நீ...!'' என்று சொல் லியபடி நிஜமாகவே அவள் தலையில் செல்லக் குட்டு ஒன்று வைத்து விட்டு அகன்றான் சுகேசன்.

அவன் சென்றதும் வாணி தலையைச் சிலுப்பிக் கொண்டுதா எ எழுந்து கொண்டாள்.

என்ன ஒரு அவமானம்! அவள் கிஷோரைக் காதலிப்ப தாய் இந்த மாலினி அண்ணனை நம்பச் செய்து விட் டாளே! அண்ணனுக்குத் தெரிந்தால் அம்மாவுக்கும் இந்நேரம் தெரிந்திருக்கும்.

என்ன ஒரு சூழ்ச்சி இது..! அவளுக்கு விருப்பமில்லாமலே... அவள் கிஷோர் மீது காதல் கொண்டது போல் ஒரு விஷமத்தனமான வலையை துணிந்து பின்னுகிறாளே?

இவளை.. என்ன செய்வது?

ஆத்திரமாய் நினைத்து அவளைத் தேடிப் போவதற்குள் மாலினியே அவளைத் தேடியபடி ரூமினுள் நுழைந்தாள்.

எதுவுமே தெரியாதவள் போல் முகத்தை வைத்துக் கொண்டு, "என்ன டான்ஸ் ஸ்கூல் கிளம்பலாமா? அண்ணன் உன்னை கூட்டிப் போகச் சொன்னார்..." என்றாள்.

வாணி பக்கத்தில் போய் அவளை முறைத்தாள்.

"அண்ணி, உங்கள் விளையாட்டுக்கு அளவே இல்லையா?" என்றாள்.

"எதைச் சொல்கிறாய்? என்ன விளையாட்டு?" என்றாள் மாலினி மறுபடியும் புரியாதவள் போல்.

"சும்மாவாக நடிக்காதீர்கள். அண்ணன் வந்து எல்லாவற்றையும் கேட்டு விட்டுப் போய் விட்டார். நான் யோசித்துச் சொல்வதற்குள்.. உங்களுக்கு என்ன அவசரம்..? எதற்காக அப்படி கிஷோரை காதலிப்பதாகச் சொன்னீர்கள்?"

படபடவென பொரிந்து கேட்டு மூச்சு வாங்கிய வாணியை அசராத நிதானத்துடன் பார்த்தாள் மாலினி.

அவள் முகத்தில் விஷமச் சிரிப்பு கூடியது.

"நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லையே. நடக்க வேண்டியதைத்தான் சொல்கிறேன்..."



"நடக்க வேண்டியதா?"

மாலினி முகம் இம்முறை இறுக்கத்திற்குப் போனது.

"ஒன்று... எனது திட்டத்திற்கு சம்மதித்து கிஷோரைக் கட்டிக் கொள்... அல்லது... சொல்லாமல் கொள்ளாமல் இங்கிருந்து ஓடி விடு..! நீ சீக்கிரமாக முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை உனக்கு உணர்த்தத்தான்... உன் அண்ணனிடம் இப்படியொரு பொய்யைப் பரப்பினேன். அதனால் அவகாசமில்லை. சீக்கிரமாக முடிவெடு!"

வாணி அதிர்ந்தே போய் விட்டாள்.

மாலினியிடம் இருந்து அப்படி ஒரு வார்த்தை வரும் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள் சொன்ன விதமும் அவள் முகம் போன போக்கும் மாலினியா இப்படிச் சொல்கிறாள் என வாணியை திகைக்க வைத்தது.

"என்ன.. என்ன.. சொல்கிறீர்கள்?" என்றாள் கோபமாய்.

மாலினி அசரவில்லை. கைகளைக் கட்டியபடி நிதானமாகவே பேசினாள்.

"பேசாமல்.. அந்தக் கிஷோரை.. காதலி. அவனையே கட்டிக் கொள். பிரச்சினை தீர்ந்து விடும்.." என்றாள் சாதாரணமாக.

"உங்கள் புத்தி நன்றாக இருக்கிறதா? இல்லை கெட்டு விட்டதா.. என்ன உளறுகிறீர்கள்?"

"நான் உளறவில்லை. நடப்பதை நடக்க வேண்டியதைச் சொல்கிறேன். இது ஒன்றுதான் பிரச்சினையிலிருந்து தப்பிக்க உள்ள வழி..."

"அதற்காக அவனது மிரட்டலுக்குப் பணிவதா? அவன் சொல்வதை எல்லாம் கேட்பதா?"

"வேறு வழி இல்லையே..! அவன் மட்டும் விஷயத்தைச் சொல்லி விட்டால் பெரும் பூகம்பம் அல்லவா உண்டாகி விடும். அதன் பின் என் வாழ்க்கை என்னவாகும் என கொஞ்சம் யோசித்துப் பார்..."

"என்னவாகும்..?" என்றாள் வாணி புரியாதவள் போல்.

"வேறு என்ன..? உண்மை தெரிந்ததும் உன் அண்ணன் கோபமாகி விடுவார். என்னை அடித்துத் துரத்தி விடுவார். அப்புறம் என் வாழ்க்கை அதோ கதிதான்!"

மாலினி சொல்லியபடி உதடுகளைச் சுழித்து கைகளை நெட்டி முறித்துக் காட்டினாள்.

"அப்படியெல்லாம் நடக்காது..." என்றாள் வாணி குரலில் உறுதி காட்டி.

மாலினியும் குரலை உயர்த்தினாள்.

"அப்படியெல்லாம் நடக்க வேண்டாமெனில் நீ நான் சொல்கிறபடி கேட்க வேண்டும். நான் போடுகிற திட்டப்படி நடக்க வேண்டும்..."

"அதற்காக.. மிரட்டலுக்கு பணிந்து விட வேண்டுமா... அந்த ராஸ்கல் சொன்னபடி கேட்க வேண்டுமா..?"

"ஆ..மா..ம்ம்..." என்றாள் அழுத்தந்திருத்தமாய் மாலினி.

"என்ன.. இது முட்டாள்தனம்? இந்த கலியுகத்தில் யாராவது இப்படி பயப்படுவார்களா?"

"உன் அண்ணியின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்றால் நீ பயப்பட்டுத்தான் ஆக வேண்டும்..."



"அதற்காக ஒரு ரவுடியை கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா...? என்ன ஒரு பைத்தியக்காரத்தனம்!" பற்களைக் கடித்தாள் வாணி.

"அவர்.. கிஷோர்.. ஒன்றும் நீ நினைப்பது போல் ரவுடி இல்லை. கௌரவமானவர்தான்... பெரும் பணக்காரர் தான்!"

"ஓஹோ... இப்படி... குரூரமாய் பெண்களிடம் தன் வீரத்தைக் காட்டி மிரட்டுகிறவன் உங்கள் அகராதியில் கௌரவமானவனா?"

"நான் அப்படிச் சொல்லவில்லை வாணி. நீ கிஷோரின் ஒரு பக்கத்தைப் பார்த்து மட்டும் பேசுகிறாய். அவரின் இன்னொரு பக்கத்தைப் பார்.. உனக்குப் புரியும்..."

"என்ன புரியும்? நல்லவர்.. பெரும் பரோபகாரி என்றா?"

"நிச்சயமாய் சொல்கிறேன். நீ நினைப்பதை விட கிஷோர் நல்லவர்தான்..."

திரும்பவும் மாலினி அதையே சொல்ல வாணியின் எரிச்சல் கூடியது. அதனாலே அதே கோபத்துடன் கேட்டாள்.

"எல்லாம் முன்பு காதலித்த அனுபவம் பேசுகிறதோ?" என்றாள்.

அதற்கும் கொஞ்சமும் சங்கோஜப்படாமல் "ஆமாம்..." என்றாள் மாலினி அழுத்தந்திருத்தமாக. கூடவே, "இதோ பார் வாணி, நீ இப்போது கிஷோரைப் பற்றி எண்ணுவதை விட என்னைப் பற்றி நினை..!" என்றாள்.

"என்ன நினைக்க வேண்டும்? அதையும் நீயே சொல்லி விடு!" என்றாள் வாணி முறைப்புடன்.

"என் வாழ்க்கை... நான் உன் அண்ணனுடன் குடும்பம் நடத்துவது முக்கியம்தானே?"

"முக்கியம்தான்..."

"அப்படியானால் அதற்காக நீ ஏன் சில தியாகங்கள் செய்யக் கூடாது?"

"தியாகமா. என்ன சொல்கிறீர்கள்?"

"உனக்குப் புரியவில்லையா? சரி.. புரியும்படியே சொல்கிறேன். அந்த கிஷோர் நல்லவனோ.. கெட்டவனோ.. அது பற்றிய ஆராய்ச்சியை விட்டு விடுவோம்... அவன் இப்போது மிரட்டுகிறான். அவர் சொன்னபடி கேட்காவிட்டால் என் வாழ்க்கையை சீர்குலைத்து விடுவதாய். அப்படி என் வாழ்க்கை சீர் குலைந்தால் உன் அண்ணனது வாழ்க்கையும் பாழாகி விடும். இதையெல்லாம் நடக்காமல் இருக்க.. உன்னால்தான் முடியும். நீ தியாகம் செய்தால்தான் முடியும்..."

"அதாவது... கிஷோரை காதலிக்க வேண்டும். அது தானே நான் செய்ய வேண்டிய தியாகம்..?"

"சே.. சே..! அப்படியில்லை. உன்னை யார் காதலிக்க எல்லாம் சொன்னது? பேசாமல் கிஷோரை கட்டிக் கொள். அந்த கிஷோரும் அதைத்தான் விரும்புகிறார். மேலும் கிஷோர் பணக்காரர். அதனால் அப்படி ஒருவரை கட்டிக் கொண்டால் உன் வாழ்க்கையும் நன்றாக ஆகி விடும் தானே!"

வாணி மாலினி முழுவதும் சொல்லி முடித்ததும் அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள்.

"என்ன வாணி சிரிக்கிறாய்?"



"அண்ணி... நீங்கள் சொல்வது தியாகம் இல்லை.. பலிகடா.. நீங்கள் செய்த தப்புக்காக என்னை பலி கொடுக்கப் பார்க்கிறீர்கள்..!"

"இருக்கட்டுமே..! அப்படிப் பார்த்தாலும் இதில் உன் அண்ணனது வாழ்க்கையும் சம்பந்தப்பட்டிருக்கிறதே? எனக்காக இல்லாவிட்டாலும் உன் அண்ணனுக்காக நீ இதை ஏன் செய்யக் கூடாது?"

"அதாவது கண்ணைத் திறந்து வைத்துக் கொண்டே குழியில் விழ வேண்டும் அப்படித்தானே?"

"அப்படி நீ நினைத்தால் அதற்கு நான் என்ன செய்வது?" என அதற்கும் பதிலடி கொடுத்தாள் மாலினி.

இவளிடம் பேசிப் பிரயோஜனமில்லை என விருட்டென் அங்கிருந்து அகன்றாள் வாணி.




மாலினி விடவில்லை மறுநாளும் அவளைத் தேடி வந்தாள். மொட்டை மாடிக்கு தனியே அழைத்துச் சென்று, "கிஷோரின் மிரட்டலுக்கு பதில் சொல்!" என்றாள்.

அவள் நன்றாக விழிக்கவும், "மிரட்டுவது அவர் மட்டுமல்ல. நானும்தான்!" மாலினியின் குரல் தெளிவாய் திடமாய் காதுகளில் ஒலித்ததும் செவிப்பறையே அதிர்ச்சியில் சுழன்று விடுவது போல்தான் வாணிக்கு இருந்தது.

''என்ன... என்ன... சொல்கிறீர்கள்?'' என்றாள் நம்ப முடியாத அதிர்ச்சியோடு.

''ம்ஹூம்! இன்னும் என்ன.. என்ன.. என்று இழுக்கிறாய்..? குட்டக் குட்ட குனிந்தாயிற்று... இனி வேறு வழியில்லை.. நிமிர்ந்து விட வேண்டியது தான்...!'' என்றாள் மாலினி.

''என்ன.. நிமிர்ந்து விட வேண்டியதுதானா?''

மாலினியின் முகம் என்றுமில்லாததாய் மாறி இறுக்கத்திற்குப் போனது. அப்படியொரு கோபமும் ஆங்காரமும் தொனித்த முகத்தை மாலினியிடம் வாணி இதுவரை பார்த்ததில்லை.

அவளை மேலும் அதிர்ச்சியூட்டும் விதமாய் கைகளால் அதிகாரத்துடன் சொடுக்கிட்டாள் மாலினி.

''இதோ பார்...'' என்று குரலில் கடுமையைக் காட்டிய மாலினி, ''ஏதோ சின்னப் பெண் என்று பார்த்தால் நீ பாட்டுக்கு பேசிக் கொண்டே போகிறாயே..? இப்போது நான் நினைத்தால்... உன்னை என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்...'' என்றபோது நம் அண்ணி மாலினியா இப்படியெல்லாம் பேசுவது என்ற அதிர்ச்சியில் விக்கித்துதான் நின்றாள் அவள்.

மாலினியோ அதே கோபத்துடன் தொடர்ந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் நினைத்தால் உன் அண்ணனிடமும் அம்மாவிடமும் நீ அந்த கிஷோரைக் காதலிப்பதாய்ச் சொல்லி பழி போட்டு... அவர்களை நம்பவும் வைக்க முடியும்...''

''என்ன.. என்ன.. சொல்கிறீர்கள்?''



அவள் அதிர அவளை மேலும் உறைய வைத்தாள் மாலினி.

''உண்மையைத்தான் சொல்கிறேன். போட்டோ ஆதாரம் பார்த்தாயா? அது போல் வேறு சில ஆதாரங்களையும் செயற்கையாக தயார் செய்து அவர்களை நம்ப வைக்க முடியும்.''

''அப்படியானால்... அந்த போட்டோ ஆதாரம் கூட...''

''அதில் இன்னமும் உனக்கு சந்தேகமா? அது என் கைவண்ணம்தான்! காமிரா வைத்து நான் தான் உன்னையும் கிஷோரையும் ரகசியமாக போட்டோ எடுத்தேன். பின் கிஷோர் மூலமாக உன் அண்ணனுக்கு அனுப்பி வைத்தேன். பிரச்சினை பெரிதாக வெடிக்கும் என்று பார்த்தால்.. நீ ஏதேதோ உன் அண்ணனிடம் சொல்லி நம்ப வைத்து விட்டாய். எங்களது பிளானில் இருந்து தப்பித்து விட்டாய்...''

''அ..ண்...ணி...''

வாணி நம்ப முடியாத அதிர்ச்சியோடு அப்படியே அலறத்தான் செய்தாள்.

''சும்மா.. கத்தாதே...'' என அதற்கும் அசால்டாக கூறி மேலும் வெறுப்பேற்றினாள் மாலினி.

''அண்ணி... அண்ணி.. நீங்கள்.. நீங்களா.. இப்படி... பேசுகிறீர்கள்.. உங்களை.. உங்களை.. எவ்வளவு நம்பினேன்... உடன் பிறந்த சொந்த சகோதரி போல்.. ஏன்... அதைவிட ஒரு படி மேல் அல்லவா உங்களை நேசித்தேன்? உங்கள் மீது பாசம் வைத்தேன்... நீங்களா... இப்படி?''

வாய் பிளக்க அதிசயமாய் கேட்டவளை அதே அதிசயமாகத்தான் பார்த்தாள் மாலினி.

''பின்... நான் மட்டும் இங்கு சும்மாவா? அண்ணி போலவா நடந்து கொண்டேன்? அன்புச் சகோதரி போல் அல்லவா உன் மீது அன்பு காட்டினேன். டன்.. டன்னாக பாசத்தைக் கொட்டினேன்... உன்னைத் தங்கத் தாம் பாளத்தில் வைத்துத் தாங்காத குறையாக அல்லவா.. தலை யில் வைத்து ஆடினேன்... என்ன... நீ தான். அவசரப்பட்டு விட்டாய். இந்த கிஷோர் விஷயத்தில் மட்டும் நீ... இப்படி தாம்.. தீம் என குதிக்காமல் கண்டு கொள்ளாமல் இருந் திருந்தால்... நானும் மாறியிருக்க மாட்டேன். முன்பு போலவே உன்னிடம் அன்பைப் பொழிந்து கொஞ்சிக் கொண்டிருப்பேன்...''

மாலினி சொல்லச் சொல்ல டிரான்ஸ்பார்மர் ஒன்று வெடித்து ஆயிரம் ஒல்ட் அதிர்வலைகள் உடம்பினுள் பாய்வது போன்றுதான் வாணிக்கு இருந்தது.

''என்ன... அப்படியானால்... நீங்கள்.. இதுநாள் வரை... அன்பாய் நடந்து கொண்டது பாசத்தை பொழிந்தது... எல்லாம்.. நடிப்பா? வேஷமா?''

நடுங்கும் குரலில்தான் கேட்டாள் வாணி. உண்மை யில் மாலினி கொடுத்த அதிர்ச்சியில் அவள் உடம்பே நடுங்கத்தான் செய்தது. முத்துப் பற்களால் உதட்டை அழுந்தக் கடித்து எழுந்த நடுக்கத்தை நிறுத்தினாள்.

நிமிர்ந்து மாலினியைப் பார்த்தபோது எவ்வித சங் கோஜமுமில்லாமல் அவளையே முறைத்துக் கொண்டிருந் தாள் அவள்.

''நடிப்புதான்! வேஷம்தான்...! இது கூடவா உனக்குப் புரியவில்லை? எந்த அண்ணியாவது இப்படி மைத்துனிக்



காக உருகி பாசத்தைக் கொட்டுவாளா? அப்படிக் கொட்டி னால் அதில் காரணம் இல்லாமல் இருக்குமா? இந்த சின்ன விஷயம் கூடவா உன் மர மண்டைக்குப் புரிய வில்லை?''

என்ன... அவள்... மரமண்டையா...? கண்ணே... மானே.. என கொஞ்சிக் குலவிய உதடுகளா இப்படி இரக்கமில் லாமல் இந்த வார்த்தைகளை தன்னை நோக்கி உச்சரிக் கிறது?

மாலினியின் மாற்றத்தை கொஞ்சமும் ஜீரணிக்க முடியாமல்தான் வாணி திடுக்கிட்டு அவளையே வெறித் தாள்.

ஆனால் அவளை அதிர வைப்பது போல் அடுத்த விஷயத்திற்கு தாவினாள் மாலினி.

''இதோ பார்... இப்போது முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன். நன்றாகக் கேட்டுக் கொள். நானும் கிஷோ ரும் காதலர்கள்தான். எங்களது காதல் கைகூடுவதற்குள் என் வீட்டில் கட்டாயப்படுத்தி உன் அண்ணனுக்கு கட்டி வைத்து விட்டார்கள். ஆனால் இப்படி உன் அண்ணனை கட்டிக் கொண்டதற்காக நான் கிஷோரை மறந்துவிட முடியாது. அவர் மீது கொண்ட காதலை விட்டுவிட முடி யாது.. அதனால்...''

''அதனால்...?''

''அதனால்... நீ.. பாட்டுக்கு உன் வேலையைப் பார். நான் கிஷோருடன் பழகுவேன்.. கூத்தடிப்பேன்... அத னால் உனக்கு என்ன வந்தது? நீ.. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு என் விஷயத்தில் தலையிடாமல் நடந்து கொள். எந்தப் பிரச்சினையும் வராது...''

மாலினி பெரிய நியாயம் சொல்வது போல் சொல்லி முடிக்க வாணிக்கு மூச்சை அடைப்பது போல் இருந்தது.

என்ன சொல்கிறாள் அவள்?

கள்ளத் தனமாய் கிஷோருடன் பேசுவாள் பழகுவாள்... அதை நாம் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் முன்பு போல் நடமாட வேண்டும் என்றா...?

திடுக்கிட்டுப் பார்க்க.. "அப்படியேதான்..!" என உறுதி செய்தாள் மாலினி.

"அப்படியானால்... அண்ணன்... அவரது நிலைமை?" திரும்பவும் குரல் நடுக்கத்துடன் வாணி கேட்க பெரிதாய் அதிர்வுடன் சிரித்தாள் மாலினி.

"என்ன.. அண்ணனின் நிலைமையா? அந்த சிடு மூஞ்சிக்கு என்ன வந்தது? அது பாட்டுக்கு அது இருந்து விட்டுப் போகிறது..."

அண்ணனை அலட்சியமாய் ஏதோ அஃறிணைப் பொருள் போல் மாலினி பேசியது கண்டு வாணி துடிக்கத்தான் செய்தாள்.

அந்தத் துடிப்பிலேயே கோபமும் வெகுண்டது.

"சரி... அண்ணனிடம் இந்த விஷயத்தை சொல்லி விட்டால்...?"

குரலில் கடுமையைக் காட்டி வாணி கேட்டதும் மறுபடியும் சிரித்தாள் மாலினி.

"தாராளமாகச் சொல்லு..." என்றாள்.

"தாராளமாகச் சொல்லவா..? உங்களுக்கு அதனால் பயமில்லையா?"



மாலினி உதட்டை நன்றாக சுழித்தாள்.

"எனக்கென்ன பயம்? பயப்பட வேண்டியது நீங்கள் தான்!"

"நாங்களா... என்ன சொல்கிறீர்கள்?"

"அசிங்கப்படப் போகிறவர்கள்... அவமானப்பட வேண்டியவர்கள் தானே பயப்பட வேண்டும்?"

வாணி திரும்பவும் புரியாமல் விழிக்கவே முன் வந்து விளக்கினாள் மாலினி.

"நீ உன் அண்ணனிடம் விஷயத்தைச் சொன்னால் நானும் விஷயத்தை பகிரங்கப்படுத்தி விடுவேன். ஆமாம் கிஷோருடன் காதல்தான். கள்ளத்தனமான தொடர்பு தான். காரணம் நான் கட்டிய கணவர் சரியில்லை. சரியான சிடுமூஞ்சி மட்டுமல்ல. ஆண் தன்மையே இல்லாதவர் என பரப்புவேன்... ஊரறிய வெளிச்சம் போட்டு அசிங்கப்படுத்துவேன்..."

வாணிக்கு மறுபடியும் மூச்சடைத்தது.

"அண்ணி... என்ன.. என்ன சொல்கிறீர்கள்? என் அண்ணன்... என்ன ஆண் தன்மை இல்லாத..."

அவள் வார்த்தைகளை முடிப்பதற்குள் மாலினி திரும்பவும் குறுக்கிட்டாள்.

"அப்படி நான் சொல்லப்போவது பொய்தான். ஆனால்.. நான் அப்படி ஒரு பொய்யை உன் அண்ணன் மீது சொன்னால்தானே... எல்லோரும் நம்புவார்கள்... என் மீது இரக்கப்படுவார்கள்?"

வாணி திகைக்க அவளே ஆங்காரமாய்த் தொடர்ந்தாள்.

''நான்.. அப்படிப் பரப்பினால்.. அது உங்களது குடும்பத்திற்கும் அசிங்கம்தான். ஊரே மொத்தமாய் சேர்ந்து கை கொட்டிச் சிரிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாய் விஷயம் செய்தித் தாள்களில் எல்லாம் வந்து விட்டால்... உன் அண்ணன் வெளியில் தலை காட்ட முடியாது. உன் அண்ணன் மட்டும் என்ன... நீயும் கூடத்தான் வெளியில் தலை காட்ட முடியாது. ஆனால்... ஆனால்... நான் என்ன செய்வேன் தெரியுமா? அந்த கிஷோரை கைப்பிடித்துக் கொண்டு இந்த ஊரை விட்டே ஓடிவிடுவேன். ஒரேடியாய் கம்பி நீட்டி உங்களை அவமானத்தில் துடிக்க வைத்து விடுவேன்...''

பெரும் சூளுரைப்பது போல் அவ்வளவையும் கொட்டித் தீர்த்தவாறு மூச்சு வாங்கப் பார்த்தாள் மாலினி.

வாணியோ பேச்சு வராதவளாய் சப்த நாடி ஒடுங்கமிரண்டுப் போய் அவளையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

மாலினி அத்தோடு விட்டபாடில்லை. அவளை மேலும் மிரளும்படி அடுத்த அஸ்திரத்தை வீசினாள்.

''பார்... வாணி, விஷயம் இவ்வளவு தூரம் வந்து விட்டது. இனி நான் பின் வாங்க முடியாது. அதனால் நான் சொல்கிறபடி கேட்க வேண்டிய கட்டாயம் உனக்கு இருக்கிறது...''

''நீ சொல்கிறபடி என்றால்...?''

''அதாவது... நீ... கிஷோரை ஏன் கட்டிக் கொள்ளக் கூடாது. அவருக்கு உன் மேல் ஆசை இருக்கிறது. நீங்கள் இருவரும் கட்டிக் கொண்டால் எல்லா பிரச்சினையும் தீர்ந்து விடுமே...?''



''எது.. அந்த கிஷோரை நான் கட்டிக் கொண்டு மாப்பிள்ளையாய் நம் வீட்டில் வைத்து விட்டால் உங்களுக்கு அது மிகவும் வசதியாக இருக்கும். அப்படி ஒரு நினைப்போ?''

இப்படிச் சொன்னதற்கு மாலினி சட்டென மறுப்பாள் என நினைத்தவளுக்கு பெரும் ஏமாற்றமே மிஞ்சியது.

''அதே தான். மிகச் சரியாகச் சொன்னாய்...'' என்றாள் மாலினி.

''ச்சீ... என்ன பேச்சு இது...? இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாய் இல்லை?''

காறி உமிழாத குறையாய் பேசிவிட்டு அருவறுப்பாய் மாலினியைப் பார்க்க அவளோ எவ்வித சங்கோஜமுமில்லாமல் சிரித்தாள்.

''ம்ஹூம்! இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது? அவரை விரும்பிய நான் உன் அண்ணனை கல்யாணம் செய்தது போல்... என்னை விரும்பிய அவர் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். அதனாலாவது... இருவரும் கடைசி வரை ஒரே வீட்டில் நண்பர்கள் போல் இருக்கலாம் அல்லவா...?''

மேற்கொண்டு மாலினி சொல்வதை கேட்கப் பிடிக்காமல் காதுகளைப் பொத்திக் கொண்டாள் வாணி.

ஆனால் அவள் முன் வந்து மறுபடியும் சொடுக்கிட்டாள் மாலினி.

''நான் இன்னமும் என் பேச்சை முடிக்கவில்லை. நான் கூற வந்த முக்கியமான விஷயத்தைச் சொல்லவில்லை. அது என்ன தெரியுமா?''

''அதையும் சொல்லி விடுங்கள்...''

''ஒன்று என் திட்டத்திற்கு சம்மதித்து கிஷோரை கல்யாணம் செய்து கொள். அல்லது...''

''அல்லது...?''

''நீ என் அன்பு மைத்துனியாக இருப்பதால் உனக்கு ஒரு சாய்ஸ். அருமையான வாய்ப்பு ஒன்று தருகிறேன்'' விஷமமாய் சிரித்தாள் மாலினி.

''அருமையான வாய்ப்பா?''

''ஆமாம்.. இந்த வீட்டை விட்டு சொல்லாமல் கொள்ளாமல் எங்காவது ஓடிவிடு. யாருக்கும் எவ்வித பிரச்சனையிராது. நானும் எவ்வித உறுத்தலுமின்றி கிஷோருடன் பழகலாம்.. என்ன சொல்கிறாய்?''

## 21



மாலினி மொட்டை மாடியில் நின்று இவ்வளவையும் பேசிவிட்டு விடுவிடுவென இறங்கிச் சென்று விட்டாள்.

வாணிக்கு அதிர்ச்சியில் காதுகளே அடைத்தாற் போல் தான் இருந்தது. அப்படியே கற்சிலை போல் ஆடாமல் அசையாமல் ஒன்றும் ஓடாதவளாய் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தாள்.

நல்லவேளை இந்நேரம் பார்த்து அண்ணன் வீட்டில் இல்லை. அம்மாவும் முன்னால் கட்டிலில் படுத்து நன்கு தூங்குகிறாள்.



நிம்மதிப் பெருமூச்சு விட்டவளாய் மெல்ல மாடியில் இருந்து இறங்கி வந்தாள் வாணி.

மாலினி அதற்குள் சமையற் கட்டில் நுழைந்து பெரும் சமையல் செய்பவள் போல் பாத்திரங்களைப் போட்டு உருட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் வாணி கீழிறங்கி வந்து தன்னையே ஜன்னல் வழியாய் உறுத்துப் பார்ப்பதைக் கண்டு விடுவிடுவென வெளிவந்து, ''ஆங்... சொல்ல மறந்து விட்டேன். உனக்கு சிந்திக்க முடிவெடுக்க சரியாய் ஒரு வாரம் டயம் தருகிறேன்..'' என்று கெடுவும் வைத்தாள்.

வாணி அவளிடம் பேசவோ அவள் முகத்தைப் பார்க்கவோ விரும்பாதவளாய் திரும்பி விருட்டென மாடிப்படி நோக்கிச் சென்றாள். படியேறி தன் ஒற்றை ரூமினுள் நுழைந்து தனது பழைய மரக்கட்டிலில் நிம்மதியாக சாய்ந்து கொண்டாள்.

எவ்வளவு அமைதியாய் இனிமையாய் இருந்த வீடு..? எவ்வளவு சந்தோஷமாய், குதூகலமாய் இருந்த அவளது வாழ்க்கை?

எல்லாம் குருவிக் கூட்டில் கல்லெறிவது போல் ஒரு சிறு விஷயத்தில் சுக்கு நூறாய் நொறுங்கி விட்டதே..!

அதிலும் மாலினி.

இப்படி ஒரு பெண் இருப்பாளா?

விஷம்.. என்று சொல்வார்கள். ஆனால் உடம்பு முழுவதும் நாகம் போல் விஷமிருக்குமா? இந்த மாலினிக்கு இருக்கிறதே! அவ்வளவு விஷமத்தனத்தை மனதில் வைத்துக் கொண்டு வெகுளி போல் அப்பாவி வேஷம் போட்டு எப்படி நாடகமாடி இருக்கிறாள்?

அவள் முன்பு அன்பு காட்டியது பாசத்துடன் கொஞ்சியது எல்லாம் வாணியின் ஞாபகத்திற்கு வந்து அதிர்ச்சியால் அவளை பயமுறுத்தவே செய்தது.

என்ன ஒரு நெஞ்சழுத்தத்துடன் அப்படியெல்லாம் நடித்திருக்கிறாள்!

அவளுக்கு ஆரம்பம் முதல் யோசித்துப் பார்க்கையில் எல்லா விஷயங்களும் தெளிவாய்ப் புரிந்தது.

மாலினியின் காதலன் அந்தக் கிஷோர் வீட்டில் கட்டாயப்படுத்திய சூழ்நிலைக்காக வேறு வழியில்லாமல் அண்ணன் சுகேசனுக்கு கழுத்தை நீட்டியிருக்கிறாள். அண்ணனைக் கல்யாணம் செய்த போதும் அவளால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. காதலன் கிஷோரின் நினைப்பு சந்திப்பு அவளுள் தொடர்ந்திருக்கிறது.

வெளியில் கடைத்தெரு போகிறேன். நூலகம் போகிறேன்... என அடிக்கடி மாலினி வெளியே கிளம்பிப் போனது எல்லாம் அந்த மாலினியை திருட்டுத் தனமாய் சந்திக்கத் தானா?

அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படி மாலினி அந்த கிஷோரை சந்தித்து அவர்கள் பேசி... அந்த கிஷோர் கொடுத்த ஐடியாவின்படி உருவானதுதான் அவள் வாணியை பரதம் படிக்கும் சாக்கில் அவனது டான்ஸ் ஸ்கூலில் சேர்க்கும் திட்டம். தினம் தினம் இதன் மூலம் கிஷோரைப் பார்க்கலாம் பேசலாம்.. என்ற ஆசையில் தான் மாலினியும் வீட்டில் தனக்காக ஆடி அண்ணனையும் சம்மதிக்க வைத்து டான்ஸ் ஸ்கூலுக்கு அவளை அழைத்துச் சென்றிருக்கிறாள்.

அது புரியாமல்... மாலினி.. நம் மீது எவ்வளவு அன்பு காட்டுகிறாள். நம்மை நடனம் பயில வைத்து நடன அரங்கேற்றம் நாம் செய்வதில் ஆர்வம் காட்டுவது போல் எல்லாம் நடித்திருக்கிறாள். அவளது உள்ளூர எண்ணம் புரியாமல் நாமும் குமுட்டை போல் அவள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் சென்றிருக்கிறோம். மாலினியின் நடிப்பை கபட நாடகத்தை புரியாமல் அப்பாவியாய் அவள் நம்பியிருக்கிறோம்.. சே!

வெறுப்பாய் நினைத்தவளுக்கு எல்லாவற்றையும் விட மாலினி தன் மீது காட்டிய அந்த அளவு கடந்த அன்பு பாசம் எல்லாம் பொய்யானது போலியானது என்பதை உணரும்போதுதான் இதயப் பகுதி உடைந்து போவது போல் இருந்தது.

அவள் நினைத்து, நினைத்து அடிக்கடி மகிழ்ந்த அன்பான அவளது வீடு, வீட்டின் அன்பான சாம்ராஜ்யம்.. போலியாய் சீட்டுக்கட்டுகளால் எழுப்பப்பட்ட மாளிகையா? தன் மீது மாலினி வைத்த அன்பே போலியானது என்றால் அதே மாலினி அண்ணன் மீதும் அன்னை மீதும் உருக உருக காட்டிய அன்பும் போலிதானே?

அவளது கள்ளத்தனமான பழக்கத்தை மறைத்துக் கொள்ள அவள் போட்ட வேஷம்தானே?

நினைக்க நினைக்க அவளுக்கு மாலினியின் மீது அளவு கடந்த வெறுப்பும் எரிச்சலுமே எரிமலை போல் ஏற்பட்டது.

ஆனாலும் இவளுக்கு ரொம்பத்தான் திமிர்! என்ன ஒரு அலட்டல் என்ன ஒரு பேச்சு! கொதித்துப் போன வாணிக்கு உதடுகள் பதிலடி கொடுக்க துடிக்கத்தான் செய்தது.

ஆனால்.. என்ன சொல்ல? தடாலடியாய் எதையும் அவளைப் போல் எடுத்தெறிந்து பேசி விட முடியாது.

யோசித்துதான் பார்க்க வேண்டும். பேச வேண்டும். கொஞ்சம் அவசரப்பட்டாலும் மாலினி மேலும் குழப்பி பிரச்சினையை சிக்கலாக்கி விடுவாள்.

அதே யோசனையுடன் முன் ஹாலுக்கு வந்தபோது நார்க் கட்டிலில் சோர்வாய் முடங்கிக் கிடந்த தாயார் கற்பகம் எழுந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது. புன்னகையுடன் போய் தாய்க்கான பணிவிடைகளைச் செய்து நேரத்திற்கு அருந்த வேண்டிய மாத்திரை மருந்துகளை எடுத்துக் கொடுத்தாள்.

தாய் கற்பகம் தனது நடுங்கும் கரங்களால் அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டவள் மறு கையால் அவளது தலையைக் கோதி வாஞ்சையுடன் நீவி விட்டாள். "என்ன கண்ணு...?" என்று பாசத்துடன் அன்னை அழைத்தபோது அவளுக்கு நெகிழ்வாய்த்தான் இருந்தது.

அன்னையுடன் முன்பு போல் தான் பேசும் சந்தர்ப்பங்களை குறைத்து விட்டதைக் கூட அப்போதுதான் வாணி உணர்ந்தாள். எல்லாம் இந்த மாலினியால் வந்த வினை. பொய்யான அன்பையும் பாசத்தையும் காட்டி அவளை ஒரு மயக்க நிலையில் தான் கட்டிப் போட்டிருந்தாள் மாலினி. அவளும் வால் போல் அண்ணி.. அண்ணி.. என அவள் பின்னால்தான் சதா சுற்றி வந்தாள். அந்த பரபரப்பில் நிறைய முறை அன்னையுடன் பேசுவதை மறந்து மாலினியின் போலி அன்பிலேயே லயித்திருக்கிறாள். மயங்கியிருக்கிறாள்.

அதையெல்லாம் ஒரு கணம் வியப்பாய் வருத்தமாய் நினைத்தவள் ஆதரவாய் அன்னையின் தோள்களைக் கட்டிக் கொண்டு அவள் மீது சாய்ந்தாள். பொதுவாகவே



கற்பகம் அதிகம் பேசும் வழக்கம் கிடையாது. அத்திப் பூத்தாற்போல் ஓரிரு வார்த்தைகள் பேசுவாள்.

அப்படி ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசினாலும் அதிலும் மிகுந்த அர்த்தம் இருக்கும். அன்பு தடவிய பாசம் இருக்கும். இப்போதும் தன் தோளில் சாய்ந்த வாணியை ஆதரவாய் வருடியவள், "உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும்" கண்மணி. அதுதான் என் கவலையும் கூட!" என்றாள்.

அம்மாவின் வார்த்தைகளை வைத்து அண்ணன் இந்த கிஷோர் விஷயத்தை இன்னும் சொல்லவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள். அம்மா சொன்ன நல்ல வாழ்க்கை என்பதை அவளது உதடுகள் உச்சரித்தபோது அவளுக்கு உதயசந்திரனின் ஞாபகம்தான் வந்தது.




உதயசந்திரனின் நினைப்பு வந்ததும் அவளுக்கு தனது பிரச்சினை மாலினி விஷயம் என சகலமும் மறந்து போயிற்று என்றே சொல்லலாம். அன்று முழுவதும் உதய சந்திரனின் நினைவுகளுடனே நடமாடினாள்.

இரவு படுக்கையில் படுத்த போதும் தூக்கம் வராமல் உதயசந்திரனே வந்தான். திடீரென.. என்ன.. உதயசந்திரனுக்கு அவனது அத்தை பெண்ணுடன் நிச்சயதார்த்தம் என்றால்.. தன் மூளையும் உடம்பும் ஏன் இப்படி பரபரக்கிறது என திகைத்தாள்.

நேற்று உதயசந்திரனிடம் பேசும்போது அவன் சொன்ன வார்த்தைகள் எல்லாம் அவள் ஞாபகத்திற்கு வந்தது. 'மஞ்சரி என்னை மிகவும் விரும்புகிறாள். எனக்கு அவள் மீது லயிப்பு இல்லாவிட்டாலும்.. நம்மை விரும்பும் ஒரு பெண்ணை கட்டிக் கொள்வது நல்லதுதானே... என நினைக்கிறேன்.'

அப்படியானால் மஞ்சரிதான் அவனை விரும்புகிறாள், உதயசந்திரன் அவளை விரும்பவில்லைதான்.

ம்ஹூம்! அவன் எப்படி விரும்புவான்?

அவன்தான்... அவளை துரத்தித் துரத்தி காதலித்தவனாயிற்றே!

அப்படிக் காதலித்தவன்... எல்லாவற்றையும் மறந்து விடுவானா?

மறந்து விடத்தானே செய்வான்...

செருப்படிகள் விழும் என செருப்பைத் தூக்கி அல்லவா காட்டினாள்...

அன்று அவள் அப்படிச் செய்ததும்... அவனது அந்த கம்பீரமான முகம் போன போக்கு... என்னையா என்னிடமா... இப்படிக் காட்டுகிறாய்? என அவன் பார்த்த வெறித்த பார்வை...

இன்றும் அப்படியே மனக் கண்ணில் அந்தக் காட்சி இருக்கிறதே...

அவளாலே மறக்க முடியவில்லையே...

பின்... எப்படி உதயசந்திரனால் மறக்க முடியும்? அன்று அவன் எவ்வளவு வருந்திருப்பான்? தன்னை இப்படி நோகடித்திட்டாளே என எவ்வளவு கோபப்பட்டிருப்பான்?



அந்த வருத்தத்தில் கோபத்தில் அவளை ஒரேடியாய் மறந்திருப்பானோ? இவள் இனி நமக்கு சரிப்பட்டு வர மாட்டாள் என்று மனக் கனவுகளை எல்லாம் கலைத்து ஒங்கி விட்டிருப்பானோ?

ஆனால் ஒரு விஷயம் முரண்படுகிறதே.. நாம் அவனை அவ்வளவு நோகடித்தும்.. நாம் மாலினி பிரச்சினைக்காக உதவி கேட்டுப் போனதும் எவ்வித கோப தாபம் இல்லாமல் இன்முகமாய் உதவ வந்தது எதனால்?

அப்படியானால் உதயசந்திரன் அந்த 'செருப்பு' விஷயத்தை பெரிதாய் நினைக்கவில்லை என்றுதானே அர்த்தம்?

அதற்காக நாம் சொன்னதற்காக டான்ஸ் ஸ்கூல் சென்றெல்லாம் விசாரித்து வந்தான். நமக்காக யோசித்து மாலினியிடம் என்ன பேச வேண்டும் என்றெல்லாம் ஐடியா சொல்லிக் கொடுத்தானே? அதெல்லாம் எதனால்..?

அவனுக்கு நம் மீது அன்பு கூட வேண்டாம் ஒருவித இரக்கம் இருப்பதால்தானே?

இப்படியே யோசித்துக் கொண்டிருந்த வாணி சட்டென ஒரு கட்டத்தில் சிந்தனையை நிறுத்தினாள்.

இப்படி அவனைப் பற்றி அவன் மனநிலையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறோமே... நாம் நம் மனது என்ன நினைக்கிறது?

தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்.

ஏன்.. இப்படியே உதயசந்திரனைப் பற்றியே நினைக்கிறோம்?

அவன் தன் அத்தை பெண் மஞ்சரியை மணந்து கொண்டால்.. என்ன..? என்று சும்மா இருக்க முடியாமல் மனம் பரபரக்கிறதே! அப்படியானால்.. உண்மையில் மனம் உதயசந்திரனை விரும்புகிறதா? அவளையறியாமல் அவனை காதலிக்க ஆரம்பித்து விட்டாளா?

அன்று அவன் தேடி வந்து வலிய கேட்டபோது வராத காதல் இப்போது எப்படி வந்தது?

யோசித்துப் பார்த்த வாணிக்கு சட்டென 'சூழ்நிலை' என்ற உணர்வுதான் ஞாபகமாய் வந்தது.

அன்று அவள் இருந்தது அன்புச் சூழ்நிலை! அன்பும் பாசமும் கொட்டிய மாலினியின் போலித் தனத்தில் ஏமாந்து மதி மயங்கி கிடந்தாளே! இன்று..? எல்லாம் மாறி மாலினி போட்டது வேஷம் என தெரிந்தாயிற்று. இதில் மாலினியின் அபாயகரமான மிரட்டல் வேறு...

இதில் இருந்து தப்பிக்க... அவளைக் காப்பாற்ற ஆபத்பாந்தவன் போல் உதயசந்திரன் ஒருவன்தான் இருக்கிறான். அவனை விட்டால்... வேறு யார்? அவளைக் காப்பாற்ற முடியும்? அவளுக்காக உதவ முடியும்?

மறுநாள் அதே யோசனையுடன் அலுவலகத்தில் உதயசந்திரனைத் தேடிப் போனாள். உதயசந்திரன் வழக்கம்போல் ஆவலாகி, ''என்னாயிற்று உன் அண்ணி மாலினி விஷயம்?'' என்று கேட்டபோது அவளையறியாமல் அந்தப் பொய்தான் வார்த்தைகளாய் வெளிவந்தது.

''ஒன்றுமில்லை. அப்படியே இருக்கிறது. எவ்விதப் பிரச்சினையுமில்லாமல் ஓடுகிறது...'' என தன் அத்தனை பற்களையும் காட்டிச் சொன்னாள்.



வாணிக்குத் தெரியாமல் இல்லை. வீட்டிலோ பெரும் பூகம்பம் போல் பிரச்சனை தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ஆடுகிறதுதான். அதிலும் இந்த மாலினி ஒரு வார கெடு வைத்து முடிவெடுக்க சொல்லியிருக்கிறாள். இது பற்றி உதயசந்திரனிடம் பேசலாம்தான்.

ஆனால் அப்படிப் பேசினால் அவனும் சதா இந்தப் பிரச்சினை பற்றியே யோசித்து அதைப் பற்றியே விலாவாரியாய் பேசுவான். வேறு எந்தப் பேச்சும் பேச மாட்டான். வாணிக்கு இப்போது முக்கியமாய் மாலினி பிரச்சினையை விட உதயசந்திரன் பற்றி அவள் அத்தை பெண் மஞ்சரிக்கும் அவனுக்கும் நடக்க இருக்கும் நிச்சயதார்த்தம். அதில் அவனுக்கு சம்மதம் இருக்கிறதா என்று தெரிந்தாக வேண்டும். இல்லையேல் அவள் தலையே வெடித்தாலும் வெடித்து விடும்.

அதனாலே மதிய உணவு இடைவேளையில் மறுபடியும் அவனுடன் பேச சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அது பற்றியே ஆரம்பித்தாள். ''என்னாயிற்று உங்களது கல்யாண நிச்சயதார்த்தம்?'' என்றாள் ஆவலாய்.

அவன் எதுவோ சொல்வான் என்று பார்த்தால், ''ம்ம்.. அதன் வேலைகள் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது...'' என்று சொன்னது அவளுள் ஏமாற்றத்தையே உண்டு பண்ணியது.

அதைவிட உதயசந்திரன் அத்தோடு நிறுத்தாமல் மஞ்சரி பற்றி விரிவாய் பேச ஆரம்பித்து விட்டான்.

மஞ்சரியுடன் இளமைப் பருவங்களில் சிண்டு முடிய விளையாடியது, மலைப் பகுதிகளுக்கு பிக்னிக் சென்றது, அவள் கல்லூரியில் சேர்ந்து விளையாட்டுகளில் ஆர்வம்

காட்டியது என ஒவ்வொன்றாய் வாணி கேட்டது போல் விளக்க ஆரம்பித்து விட்டான்.

வாணிக்கு ஒரே எரிச்சல்தான். அவனிடம் என்ன சொல்ல... எப்படி நிறுத்த... என நினைத்தவளுக்கு யோசனையும் பளீரிட்டது.

முதலில் இந்த மஞ்சரி பற்றிய பேச்சை நிறுத்தி தன்னைப் பற்றி அவனை பேச வைக்க வேண்டும் என நினைத்தாள்.

மின்னலாய் அதற்கும் ஐடியா அவளுள் தோன்றியது.

அதையே சாக்காய் வைத்துக் கொண்டு, ''சந்திரன், முதலில் ஒரு விஷயத்திற்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்...'' என்று ஆரம்பித்தாள்.

அவள் சட்டென பேச்சு மாறி எதுவோ பேசுவது கண்டு புருவம் உயர விழித்துப் பார்த்தான் அவன்.

''மன்னிக்க வேண்டுமா.. எதற்கு?'' என்றான்.

வாணியின் குரல் கம்மியது.

''முன்பு உங்களை நான் அவமானப் படுத்தியதற்கு...'' என்றாள்.

அவன் சலனமில்லாமல் அவளையே உற்றுப் பார்க்கவும் தெளிவு படுத்தினாள் அவள்.

''அன்றொரு நாள் இதே போல் மதிய உணவு இடைவேளையில் உங்களிடம் செருப்பை எல்லாம் உயர்த்திக் காட்டி... முட்டாள் தனமாக பேசி... அதற்காக... அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்...'' என்றாள் மேலும் குரல் கம்மியவளாய்.

ஆனால் அவள் தயங்கித் தயங்கிச் சொன்னதற்கு உதயசந்திரன் எவ்வித சங்கோஜமுமில்லாமல் பெரிதாய் சிரிக்க



ஆரம்பித்தது அவளுள் பெரும் ஆச்சரியத்தையே உண்டு பண்ணியது.

புரியாதவளாய் மை விழிகளால் அவனையே உற்றுப் பார்க்க அவன் மேலும் சிரித்து விட்டு,

''ஓ.. அது.. எப்போதோ... நடந்து முடிந்த விஷயம், அது பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை...'' என்றான் சாதாரணமாக.

''கவலை கொள்ளத் தேவையில்லையா.. என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் அவள் பதறியவளாய்.

அதற்கும் பதில் சொல்லாமல் சிரித்தான் அவன்.

''என்ன... நான் அப்படிச் சொன்னது உங்களது மனதை காயப்படுத்தியிருக்குமே...?'' என்றாள் எடுத்துக் கொடுப்பது போல்.

அவன் சிரிப்பை நிறுத்தி விட்டு மறுபடியும் அவளை உற்றுப் பார்த்தான்.

''நீ சொல்வது போல் நீ சொன்ன வார்த்தைகள் என் மனதை, என் இதயத்தை வெகுவாய் காயப்படுத்தியது உண்மைதான். ஆனால்...''

அவன் நிறுத்த அவள் மேலும் ஆவலாகி, ''ஆனால்...? சொல்லுங்கள்...'' என்றாள்.

''அப்படி நீ காயப்படுத்திய இதயம் இப்போது என்னிடம் இல்லையே. காயத்திற்கு மருந்திட மஞ்சரியிடம் அல்லவா சென்றிருக்கிறது...''

பெரும் சிலேடையாய் பேசுவது போல் பேசி அத்தனை பற்களும் தெரியும்படி அடக்க முடியாத சிரிப்பொன்றை சிரிக்க ஆரம்பித்தான் உதயசந்திரன்.

* * *

உதயசந்திரன் இப்ப இதயம் என்னிடம் இல்லை... அது மஞ்சரியிடம் அல்லவா இருக்கிறது என்று சொன்னதும் அவளுக்கு வெறுமையாய்த்தான் போயிற்று.

அவனுக்கு அந்த 'செருப்படி' விஷயத்தை ஆரம்பித்து மன்னிப்பு கேட்டதெல்லாம் அந்த அவனது முந்தைய காதல் சமாச்சாரத்தை ஞாபகப்படுத்த... அது பற்றிய பேச்சை ஆரம்பிக்கத்தான். அப்படி ஆரம்பித்து அந்தக் காதல் பேச்சை நிகழ்காலத்திற்குக் கொண்டு வந்து அவன் இப்போதைய கருத்தை அறியலாம் என்று தான் வைத்திருந்தாள்.

ஆனால் அவனோ அது பற்றி பேசாமல் சட்டென வேறு எங்கோ போய் அவளை மேலும் நோகடிப்பது போல் பேசி விட்டான்.

இனி.. என்ன செய்ய.. என யோசித்தவள் ஒரு கணம் இமைக்க மறந்தவளாய் அவனையே உற்றுப் பார்த்தாள்.

அந்த வசீகர முகமும், கூர்மையான கண்களும் ஆஜானுபாகுவான உருவமும்... இவனை எப்படி எதற்காக முன்பு நிராகரித்தோம்..? என்ற கேள்வியையே பூதாகாரமாய் எழுப்பியது.

ஒரு வேளை மஞ்சரியின் போலியான அன்பு மயக்கத்தில் அப்படி நினைத்திருக்கலாம். ஆனால் நிஜத்தில் எந்தப் பெண்ணையும் கவரக்கூடிய அழகான பர்ஸனாலிட்டிதான் உதயசந்திரனுக்கு! இவனிடம் மஞ்சரி மயங்கியதில் கட்டிக் கொள்ள ஆசைப்படுவதில் எவ்விதத் தவறும் இல்லை.

முட்டாள் அவள்தான்.



வலிய வந்து பேசினான். காதல் ரோமியோ போல் அவள் பின்னாலே சுற்றினான். அப்போதெல்லாம் வராத இந்த பொல்லாத காதல் இப்போது... இப்படி அவன் இன்னொருவளுக்கு சொந்தமாகப் போகிறான் என்றதும் தலை தூக்குகிறதே!

என்ன செய்ய..?

தலையைச் சிலுப்பி எத்தனையோ முறையாய் சிந்தித்துப் பார்த்தாலும் வாணிக்கு அந்த எண்ணமே உணர்வே மேலெழும்பியது.

''ஹலோ.. வாணி.. என்னாயிற்று?'' என்று உதயசந்திரன் உலுக்காத குறையாய் குரல் கொடுத்ததும்தான் உணர்வுக்கு வந்தாள்.

''ஒன்றும்... ஒன்றுமில்லை...'' என்றாள் அவசரமாக.

ஆனால் உதயசந்திரன் எதையோ கண்டு பிடித்தவன் போல்'' எனக்குத் தெரியும்..'' என்றான் பீடிகையுடன்.

'அட.. நம் முகத்தை வைத்து அதற்குள் இவன் கண்டு பிடித்து விட்டானா?' என பலத்த ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள்.

''என்ன தெரியும்?'' என்றாள்.

''எல்லாம் உன் அண்ணி விஷயம். அதுதான் உன்னை மிகவும் குழப்புகிறது. அப்படித்தானே?''

இப்படி அவன் கேட்டதும் சப்பெனத்தான் போயிற்று. என்ன இவன்.. பழைய விஷயங்களைப் பேசியும்... சூசகமாய் உணர்த்திப் பார்த்தாலும் ஒன்றும் இவனுக்குப் புரியவில்லையே! எப்படிப் புரிய வைப்பது?

தவித்தவள் அதைக் கொஞ்சமும் வெளிக் காட்டாமல், ''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றாள் அவசரமாக.

''பின்... வேறு எந்த விஷயம்?''

எடுத்துக் கொடுப்பது போல் அவன் கேட்டதும் அவள் உதடுகள் துடித்து பரபரக்கத்தான் செய்தது. 'பேசாமல் சொல்லி விடலாமா? எல்லாம் அந்தக் காதல் விஷயம் தான்? இன்னமும் என் மேல் உங்களுக்குக் காதல் இருக் கிறதா... இல்லையா..? என வெளிப்படையாக கேட்டு விடலாமா?

தன் துடிப்பை ஒரு கணம் உதடுகளை அழுந்தக் கடித்து நிறுத்தியவள் நேருக்கு நேராய் அவன் கண்களை தனது விழிகளை விரித்துப் பார்த்தாள். அப்படிப் பார்க்கும் போதே கன்னக் கதுப்புகள் சூடேறி மேலும் சிவப்பதை அவளால் உணர முடிந்தது.

வேறு வழியில்லை...

துணிந்து கேட்டுவிட வேண்டியது தான்..!

இப்படி... ஒவ்வொரு நொடியும் தவித்து குமைந்து கொண்டிருப்பதற்கு வெளிப்படையாக வெட்கத்தை விட்டு கேட்டு விடலாமே..!

யோசித்து துணிந்தவள், ''அது.. அது.. ஒரு முக்கிய மான விஷயம்... உங்களிடம் சொல்ல வேண்டும். சொல்ல லாமா?'' என்றாள் திக்கித் திணறியவாறு.

உதயசந்திரன் மறுபடியும் புருவம் உயர புன்னகைத் தான்.

''முக்கியமான விஷயமா? என்ன.. என்ன அது..?'' என்றான்.

வாணி தன் வெட்கத்தை எல்லாம் மூட்டை கட்டி விட்டுக் கேட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.



ஆனால் அதற்கு உதயசந்திரன் சொல்லிய பதில் அவளை ஒரேடியாய் திகைப்பில் ஆழ்த்தி விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.




உதயசந்திரன் அப்படி ஒரு பதில் சொல்வான் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை. ஆனால் அவனது பதில் அப்படித்தான் இருந்தது.

''அதே கேள்வியைத்தான் நானும் வேறு விதமாகக் கேட்கிறேன். நான் முன்பு உன்னிடம் காதலைச் சொல் லியபோது வராத காதல் இப்போது திடீரென முளைத்து விடுமா..?'' என்றான்.

அவள் பதில் சொல்லாமல் மௌனமாய் திகைக்கத் தான் செய்தாள்.

அதற்கும் விளக்கம் கொடுத்தான் அவன்.

''உன்னால் பதில் சொல்ல முடியவில்லை. இல்லையா? அதே தான் என் நிலையும்..!'' என்றான் கூடவே,

''சில கேள்விகளுக்கு இப்படித்தான் விடை தேடுவது.. உறுதியான பதில் காண்பது முடியாத விஷயம். அதனால்... அப்பிரச்சினைகளையே அப்படியே அதற்கு மேல் யோசிக்காமல் விட்டுவிட வேண்டும்...'' என்றான் தத் துவம் சொல்வது போல்.

அதற்கு மேல் இது பற்றி இவனிடம் ஒன்றும் பேசித் தெரிந்து கொள்ள முடியாது என்பதை வாணி புரிந்து கொண்டாள்.

''சரி... கிளம்புகிறேன்...'' என்று அத்தோடு எழுந்தும் கொண்டாள். ஆனாலும் மாலினி வீட்டில் மிரட்டி பேயாய் ஆடிக் கொண்டிருப்பதைப் பற்றி தனக்கு ஒரு வார கால கெடு வைத்திருப்பதைப் பற்றியெல்லாம் உதயசந்திரனிடம் சொல்ல வேண்டும் என நினைத்தும் சொல்ல மறந்தவள் போல் அகன்றாள்.

அன்று மாலை வீட்டில் இப்படியே உட்கார்ந்திருந்தால் சோர்வும் கவலையும் தன்னைச் சூழ்வதை உணர்ந்தவள் ஷாப்பிங் கிளம்பினாள். வழக்கமாய் இது போல் மாலினியுடன் ஷாப்பிங் கிளம்பி பேன்ஸி கடைகளில், பார்ஃப்யூம்கள், விதவிதமான தொங்கட்டான்கள், ஸ்லைடுகள் என சிறு சிறு பொருட்கள் வாங்கி வருவது அவளது வழக்கம்.

இப்போது மாலினிதான் பெரும் எதிரி போல் ஆகி விட்டதால் தனித்தே கிளம்பினாள். மார்க்கெட் பகுதிகளில் நிறைய கடைகள் உள்ளதால் பஸ் ஸ்டாப்பில் பஸ் ஏறி மார்க்கெட்டில் இறங்கினாள்.

ஹாண்ட் பேக்குடன் சாலையோர நடைபாதையில் அவள் விறுவிறுவென நடந்தபோது யாரோ தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது கண்டு திகைத்து திரும்பிப் பார்த்தாள்.

ஒரு சுடிதார் பெண் சிரிப்புடன் அவளை நோக்கி ஓடி வர... எங்கோ அவளைப் பார்த்த மாதிரி வாணிக்கு இருந்தது.



அவள் யோசிக்கையிலே பக்கத்தில் வந்து, ''என்னைத் தெரியவில்லையா? நான் தான் மஞ்சரி..!'' என்றாள் அவள்.

''மஞ்...ச..ரி..யா..?'' வாணி உச்சரித்து திகைக்கவே அதற்கும் விளக்கம் கொடுத்தாள் அவள்.

''உதயசந்திரனின் அத்தை... பெண்... அவரை கட்டிக் கொள்ள இருப்பவள்...''

பளிரீடும் புன்னகையோடு சொன்ன அவளை வினோதமாய்த்தான் பார்த்தாள் வாணி. உதயசந்திரனின் பெயரை உச்சரிக்கும் போது அவள் முகத்தில் ஓடிய அந்த உவகை, குதூகலம் வாணியை அதிரத்தான் செய்தது.

அதைக் கொஞ்சமும் உணராதவளாய் மஞ்சரி அவள் கரங்களை ரொம்பவும் தெரிந்தவள் போல் உரிமையுடன் பிடித்துக் கொண்டாள்.

''அடாடா... எப்படி இருக்கிறீர்கள்? அன்று பீச்சில் உங்களைப் பார்த்தது... அதற்குப் பின் இப்போதுதானே பார்க்கிறேன்... எங்கு வந்தீர்கள் ஷாப்பிங் செய்யவா?'' என்றாள் வெகு இயல்பாய் தொடர்ந்து பேசிக் கொண்டு.

வாணி பதிலுக்கு தலையாட்டியவள் அவளையே வியந்து பார்த்தாள்.

''வாருங்கள்... பக்கத்து ரெஸ்ட்டாரண்டில் எதாவது சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம். உங்களிடம் நிறைய பேச வேண்டியிருக்கிறது...'' என்றபடி அவள் பதிலுக்கு காத்திராமல் அவளை தரதரவென இழுக்காத குறையாய் கூட்டிக் கொண்டு எதிர் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றில் நுழைந்தாள் மஞ்சரி.

அவளின் செய்கை அவளை திகைக்கச் செய்தது என்றால் அவள் சொன்ன, ''உங்களிடம் நிறையப் பேச வேண்டும்...'' என்ற வார்த்தைகள் வாணியை அதிரச் செய்தது.

பேச வேண்டுமா...? என்ன பேசப் போகிறாள் இவள்?

அவள் திகைக்கும்போதே ரெஸ்ட்டாரெண்டுக்கு இழுத்துச் சென்று இருக்கையொன்றில் அமர்த்தி எதிரே உட்கார்ந்து சாண்ட் விச்சும் காபியும் கொண்டு வரும்படி ஆர்டரும் செய்து விட்டாள்.

பின் உற்சாகமாய் நிமிர்ந்து ''உதயசந்திரன் பற்றி உங்களிடம் கேட்க வேண்டும் சொல்லுங்கள்...'' என்றாள்.

''என்ன... சொல்லவா?'' என்றாள் வாணி புரியாதவளாய் திணறியபடி.

''ஆம்... அவர் உங்களைக் காதலித்தாராம்... அல்லவா...? அதுவும்.. எப்படி.... உங்கள் பின்னாலே... விரட்டித் துரத்தி அல்லவா காதலித்தாராம்... அது பற்றிச் சொல்லுங்கள்...'' என்றாள் ஆவல் மிகுதியுடன்.

அடக்.. கண்றாவியே...! இந்த விஷயத்தை எல்லாம் கூட இவளிடம் சொல்லித் தொலைத்து விட்டானா..? என்ன மனிதன் இவன்! என உதயசந்திரனை மனதுள் திட்டியவள், இதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்கிறாளே... இவளை என்ன செய்வது? என்று எரிச்சலான வியப்புடனே அவளைப் பார்த்தாள்.

ஆனால் மஞ்சரி லேசில் விடுவதாயில்லை.

''என்ன யோசிக்கிறீர்கள்..? இதெல்லாம் எப்படி எனக்குத் தெரியும் என்றா..? எல்லாவற்றையும் உதயசந்திரன் மாமாவே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்...'' என்றாள் தலையை வேகமான அசைப்பு செய்தவாறு.

''பின்... என்ன.. அவரே சொல்லி விட்டார்.. அல்லவா? அதுதான் நடந்த விஷயம்!'' என நழுவ நினைத்தவளாய் விஷயத்தை முடிக்கப் போனாள் வாணி.

''ஐயோ..! அது.. அப்படி அல்ல...'' என மஞ்சரி உற்சாகமாய் கூவியவள், ''மாமா... சொன்னார் என்றால்... எல்லாவற்றையும் அல்ல. மேலோட்டமாய்.. தான் ஒரு தலையாய் உங்களை காதலித்ததைத்தான் சொன்னார்.. முழு விவரங்களையும் சொல்லவில்லை. அதான் உங்களிடம் கேட்க வேண்டும் என வைத்திருந்தேன்...'' எனவும் வாணி என்ன சொல்ல எனதான் தவித்தாள்.

அதற்கும், ''நீங்கள் சொல்ல எவ்விதத் தயக்கமும் கொள்ள வேண்டாம். மாமாவைத் தான் நான் கட்டிக் கொள்ளப் போகிறேன். அதனால் அவரைப் பற்றி முழுமையாக, தெரிந்து கொள்வது நல்லது தானே?'' என ஏறக்குறைய பிடிவாதமே பிடித்தாள் மஞ்சரி.

இப்படிக் கேட்கிறாள்... இவளிடம் என்ன சொல்வது? என மேலும் குழம்பிய வாணி அதே தவிப்புடன், ''அது... அது... வேறு ஒன்றுமில்லை... உதயசந்திரன் இரண்டு மூன்று நாள் என்னையே பின் தொடர்ந்தார். ஒரு நாள் தன் காதலைச் சொன்னார். நான் அப்படி காதல் கொள்ளும் சூழ்நிலையில் இப்போது இல்லை. என விளக்கினேன். அவரும் புரிந்து கொண்டார். அவ்வளவுதான்...'' என அத்தோடு அந்த பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும் என்பது போல் நிறுத்தினாள் வாணி.

ஆனால் மஞ்சரியாவது விடுவதாவது...? மறுபடியும் பரபரத்தாள்.

''என்ன மூன்று நாள் உங்கள் பின்னாலே சுற்றி வந்தாரா...?''

''ஆ.. மா...ம்...''

''லவ் லெட்டர் போல் கடிதம் எதாவது கொடுத்தாரா?''

''சே.. சே... அப்படியெல்லாம் இல்லை...''

''உங்கள் அழகை அப்படி இப்படியென வர்ணித்துப் புகழ்ந்தாரா?''

இப்படிக் கேட்கும் பெண்ணிற்கு என்ன பதில் சொல்வது என்பது போல் அவளையே உற்றுப் பார்த்தாள் வாணி.

''ஐயோ.. தயங்காதீர்கள். சும்மா தைரியமாகச் சொல் லுங்கள்...'' என்றாள் மறுபடியும்.

''இல்லை... அப்படி ஒன்றும் வர்ணிக்கவில்லை'' என்றாள்.

''சரி.. காதலை.. எப்படிச் சொன்னார்?''

''எப்படிச் சொன்னார் என்றால்..?''

''வெளிப்படையாக விரும்புகிறேன் என்றாரா அல்லது எதும் செய்கை மூலம் உணர்த்தி உங்களுக்குப் புரிய வைத் தாரா?''

இம்முறை மஞ்சரி இப்படிக் கேட்டதும் வாணிக்கு எரிச்சலே வந்து விட்டது.

''ஆமாம்... வெகு வெளிப்படையாக நான் உன்னை விரும்புகிறேன். உன்னுடைய பதில் என்ன என்று கேட்டு விட்டார் போதுமா?''

வாணி கோபமாய் சொன்னதைக் கூட உணராமல் பலமாய் கைகளைத் தட்டினாள் மஞ்சரி.



''கரெக்ட்! நீங்கள் சொல்வது ரொம்பவும் சரி எனக்கும் இப்படித்தான் சொன்னார்...'' என்றாள்.

இம்முறை வாணி திடுக்கிட்டாள்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் புரியாதவளாய்.

''அதாவது... என்னிடமும் காதலைச் சொல்ல இப்படித் தான் நேரிடையாகப் பேசி வார்த்தைகள் மூலம் உதய சந்திரன் வெளிப்படுத்தினார்...'' நம்ப முடியாத ஆச்சரியத் தில் வாணியின் மை விழிகள் மேலும் விரிந்தது.

''அப்படியானால் உதயசந்திரன் உங்களையும் காத லித்தாரா?''

''ஆமாம்.. காதலித்தார்...'' என்றாள் மஞ்சரி அழுத்தமாய்.

''நீங்கள் அவருக்கு அத்தை பெண்... முறைப் பெண் தானே?''

''முறைப் பெண்தான்! அதற்காக காதலிக்கக் கூடாது என எதாவது சட்டம் இருக்கிறதா? நீங்கள் வேண்டாம் என அவரது காதலை நிராகரித்ததும்... என்னைப் பார்க்க வந்தபோது என் மீது அவருக்கு அந்த காதல் வந்து விட்டதாம். சில நாட்களிலே அதை என்னிடத்தில் வெளிப் படுத்தி என் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டார். நானும் அன்றிலிருந்து அவரை காதலிக்க ஆரம்பித்து விட்டேன்...''

கண்கள் மின்ன உற்சாகமும் குதூகலமுமாய் பேசிய அவளை வைத்த கண் மாறாமல் பார்த்து உள்ளுக்குள் அதிர்ந்து கொண்டிருந்தாள் வாணி.

# 24



வீட்டில் நுழைந்தவளுக்கு அன்று பெரும் ஆச்சரியமே காத்திருந்தது. அண்ணன் சுகேசன் இன்முகமாய் வர வேற்று... ஒருவிதமாய் சிரித்தபோதே ஏதோ விஷயமிருக் கிறது என்று புரிந்து போயிற்று.

என்ன விஷயம் அண்ணா...? என அவள் கேட்பதற் குள் படபடவென மடை திறந்தாற் போல் கொட்டினான் அவன்.

''வாணி இன்று மாப்பிள்ளையைப் பார்த்தாயிற்று. பேசியாயிற்று. என்ன ஒரு கம்பீரம். உனது செலக்ஷன்... வெரிகுட்... மிகச் சரியான ஜோடியைத் தேர்ந்தெடுத் திருக்கிறாய்.. கன்கிராட்ஸ்!'' என்று சொல்லவும் புரியாமல் மலங்க மலங்கத்தான் விழித்தாள் அவள்.

அவள் திகைப்பதைப் பார்த்து அவனே விளக்கினான்.

''என்ன விழிக்கிறாய்? இன்று அவர்.. உன்.. கிஷோர்... இங்கு வந்தார்...''

பெரும் ஷாக் அடித்தது போல் இருந்தது வாணிக்கு.

என்ன கிஷோர் இங்கு வந்தானா...? அதுவும் சுகேசன் உச்சரித்த 'உன் கிஷோர்...' என்பது அவளை மிகவும் எரிச்சலடையச் செய்திருந்தது.

''என்ன சொல்கிறாய் அண்ணா?''



''அட... உனக்குத் தெரியாதா? இன்னும் கிஷோர் உனக்கு அந்தத் தகவலை தெரிவிக்கவில்லையா?''

''இல்லை...'' என்றாள் ரத்தினச் சுருக்கமாய் அண்ண னையே முறைத்தபடி.

அவள் கோபத்தை கொஞ்சமும் உணராமல் சுகேசன் சுவாரஸ்யமாய் பேச ஆரம்பித்து விட்டான்.

''இன்று மதியம் கிஷோர்... நம் வீடு தேடி வந்து விட்டார் வாணி. நான் அவரைப் பார்க்க வேண்டும்... என்று சொல்லியிருந்ததை அவரிடம் நீ சொல்லியிருப் பாய் அல்லவா... அதனால் சிரமம் பார்க்காது அவரே நேரிடையாகத் தேடி வந்து விட்டார். இங்கு இருந்து நம் வீட்டையெல்லாம் சுற்றிப் பார்த்து அரை மணி நேரம் என்னுடன் பேசி விட்டுத்தான் சென்றார். மிகவும் புத்தி சாலி. எனக்கு அவரை ரொம்பவும் பிடித்து விட்டது...''

அண்ணன் சொல்லச் சொல்ல மயக்கம் வராத குறை யாகத்தான் கேட்டுக் கொண்டிருந்தவள் அண்ணனின் பின்புறமாய் விஷமச் சிரிப்புடன் மாலினி நிற்பதை அப்போதுதான் கவனித்தாள்.

மாலினி நின்ற விதம், பார்த்த கெக்கலிப்பு பார்வை... கள்ளமாய் அந்தச் சிரிப்பு...

அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

வேறென்ன...? எல்லாம் இந்த மாலினியின் வேலை தான்! அவள் இல்லாத சமயமாய்ப் பார்த்து வேண்டுமென்றே இந்த கிஷோரை வரச் சொல்லி காயை நகர்த்தியிருக் கிறாள்.

பற்களை... கோபமாய் கடித்தவள் கூடவே அந்த தடியன் கிஷோர் வந்து என்ன பேசியிருப்பான்? என நினைத்தாள்.

அதற்கும் சுகேசன் விடையளித்தான்.

''அவர் கிஷோர்... ரொம்ப நேரம் உங்கள் காதல் கதையை பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தாரம்மா...''

''காதல் கதையா?''

''ஆம்.. சினிமா போல்.. முதல் சந்திப்பில் நீங்கள் கோபமாய் முட்டிக் கொண்டது... பின் அடுத்த அடுத்த சந்திப்பில் ஒருவரையொருவர் கொஞ்சம் கொஞ்சமாய் புரிந்து கொண்டது... அப்படி புரிந்து கொண்டதன் விளைவாக காதல் பூ... உங்கள் இருவரிடமும் பூத்து... மனதில் வளர ஆரம்பித்தது என எல்லாவற்றையும் ஒன்று விடாமல் விளக்கிச் சொன்னார். அதைக் கேட்க கேட்க எனக்கே மிகவும் வெட்கமாய் போய் விட்டது என்றால் நீ பார்த்துக் கொள்ளேன்...'' என அண்ணன் சுகேசன் சிரிப்புடன் நிறுத்தவும் அவளுக்கு தலையிலடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

''ஐயோ, அண்ணா... அதெல்லாம்...'' என அவள் கோபமாய் ஆரம்பித்த போதும் அதை உணராமல் கைகளை உயர்த்தி நிறுத்தினான் சுகேசன்.

''நீ.. ஒன்றும்... சொல்ல வேண்டாம்... சொல்லத் தேவையில்லை. இதெல்லாம் ஒன்றும் தப்பான விஷயங்கள் இல்லை. இதனால் எனக்குக் கோபம் ஒன்றும் எழவில்லை. பெரும் மகிழ்ச்சியும் சந்தோஷமுமே எழுகிறது. எனது தங்கைக்கு அவளே அவள் மனதுக்குப் பிடித்த துணையை நன்கு தேடிக் கொண்டாள். என்கிற சந்தோஷம்...''

பெரும் புளகாங்கிதம் அடைந்தவன் போல் சுகேசன் சொல்லிக் கொண்டே போக தலையில் கை வைத்தபடி



பக்கத்தில் இருந்த இருக்கையில் தொப்பென உட்கார்ந்து கொண்டாள் வாணி.

சரியான நாடகம். கை தேர்ந்த நடிப்பு!

இந்த மாலினியும் கிஷோரும் சேர்ந்து அண்ணனை நன்றாகத்தான் முட்டாளாக்கி இருக்கிறார்கள்!

இவர்களை என்ன செய்வது..?

அவள் நிலையை கொஞ்சமும் உணராது பேசிய சுகேசன் முத்தாய்ப்பாய் அந்த விஷயத்தையும் சொன்னான்.

''மாப்பிள்ளையையும் பார்த்தாயிற்று. பிடித்தாயிற்று. இனி எதற்கு லேட் செய்ய வேண்டும் என கல்யாணம் பற்றியும் அவரிடம் பேசினேன். அதற்கும் உடனே பச்சைக் கொடி காட்டி விட்டார் கிஷோர்...''

''என்ன.. என்ன.. சொல்கிறீர்கள் அண்ணா?''

''அதான் வாணி... கல்யாணத்தை சீக்கிரம் வைத்துக் கொள்ளலாமா என அவசரப்படுத்தினேன். அடுத்த மாதம் முதல் வாரத்திலே நல்ல நாள் ஒன்று வருகிறதாம். அன்று முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்கிறார் மாப்பிள்ளை...''

அடக் கடவுளே! விஷயம் கல்யாணம் வரை போய் விட்டதா... இது என்ன கூத்து?

''அண்ணா... என்ன அவசரம்? எதற்காக இப்படி?'' என அவள் கத்தியதை சுகேசன் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. ''நீ ஒன்றும் பேச வேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும். நீ இதையெல்லாம் வெளிப்படையாகப் பேச வெட்கப்பட்டு வேண்டாம் வேண்டாம் என்றுதான்

சொல்வாய். அதற்காக நான் சும்மா இருந்துவிட முடியுமா?''

பெரும் சிரிப்புடன் சுகேசன் குறும்புப் பார்வை பொங்க சொல்லிவிட்டு அகல.. அடக் கர்மமே... இவர்களை என்ன செய்வது? என தலையில் கை வைத்துக் கவிழ்ந்தாள் வாணி.

என்ன செய்ய இப்போது?

அண்ணனைக் கூப்பிட்டு... விலாவாரியாய் லெப்ட் அண்ட் ரைட் மாலினி பற்றி, கிஷோர் பற்றி எல்லாவற்றையும் கொட்டி விடலாம்தான்.

ஆனால்...

அதற்குப் பின் எல்லாம் குளறுபடியா ஆகி விடுமே! அண்ணன் சுகேசன் கடும் ஆத்திரம் கொள்வான். மாலினியை தலை முடியைப் பற்றி அடித்துத் துரத்துவாள். மாலினியும் சும்மா போக மாட்டாள். வெளியே நின்று வசை பாடுவாள். ஊரறிய சாபமிடுவாள். ஒரே நாளில் அவர்கள் வீட்டு மானம் ஊரறிய கப்பலேறி விடும்.

மானம், ஊர் என்ன நினைக்கிறது என்பதைக் கூட விட்டு விடலாம். எப்படியும் நினைத்து விட்டுப் போகட்டும் என உதறி விடலாம்.

ஆனால் அண்ணனது வாழ்க்கை...?

அது... சீர் குலைந்து போய் விடுமே! அதை பின் எப்படிச் சரிப்படுத்துவது?

ஒரு வேளை... மாலினி மட்டும் கடைசி நேரத்தில் புத்தி வந்து திருந்தி விட்டால்...?

எல்லாம் சரியாகிவிடுமே...! அண்ணனது வாழ்க்கையும் பாழாகாமல் தப்பித்து விடுமே!



இந்த அண்ணி மாலினியும் முன்பு அன்பை பாசத்தைக் கொட்டி குதூகலமாய் இந்த வீட்டில் நடமாடியவள் தானே!

என்ன அதை நடிப்பாய் வேஷமாய் போட்டவளுக்கு மனம் மாறி அதையே நிஜமாய் செய்ய முடியாதா?

அப்படி எந்த கணத்திலாவது மாலினியின் மனதை மாற்றி விட முடியாதா, அவள் தவறையுணர்ந்து திருந்தி விட மாட்டாளா... என்பதுதான் வாணியின் எதிர்பார்ப்பு!

அதனாலே விஷயத்தை அண்ணனிடம் சொல்லி தானே சீட்டுக் கட்டு குலைவது போல் குடும்பம் சீர் குலைந்து போய் விடக் காரணமாகி விடக் கூடாது என்று பயந்தாள் வாணி.

அந்த அவளது பயமே, எதிர்பார்ப்பே... இந்த மாலினிக்கு வாக்காய் போய் விட்டது போலும். கிஷோரைத் தூண்டி விட்டு வேண்டுமென்றே கல்யாணம் வரை பேசவிட்டு அவளுக்கு நெருக்கடியைக் கொடுக்கிறாள்.

ஆனாலும் இந்த மாலினி என்னதான் எண்ணுகிறாள்?

இவளது மிரட்டலுக்கு பயந்து நாம் கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டு கிஷோருக்கு கழுத்தை நீட்டுவேன் என்று நினைக்கிறாளா? அல்லது சொல்லாமல் கொள்ளாமல் பிரச்சினைகளுக்கு பயந்து நான் ஓடிவிட வேண்டும் என்று நினைக்கிறாளா?

யோசனையுடன் இருந்த அவளுக்கு அடுத்த அரை மணி நேரத்தில் ரூமினுள் காபி டம்ளரும் கையுமாய் மாலினி நுழைந்தபோது எல்லாமே புரிந்தது.

''அதிர்ச்சியில் ரொம்பவும் களைத்திருப்பாய். கொஞ்சம் காபி அருந்துகிறாயா?'' என அக்கறையாய் மாலினி

டம்ளரை அவள் முன் நீட்டியபோது முறைத்தபடி முகத்தைத் திருப்பினாள் வாணி.

''சரி.. வேண்டாமா...? உன் இஷ்டம்... நானே குடித்துக் கொள்கிறேன்...!'' என அமர்த்தலாய் சொன்னவள் அப்படியே எதிர் இருக்கையில் உட்கார்ந்தாள்.

''என்ன... மணப் பெண்... நீ கல்யாண தேதி கூட குறிக்க... நாள் தேடியாயிற்று. இனியும் முகம் கவிழ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்? கிஷோர் போல் ஒரு கணவர் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்?''

அவளை மேலும் முறைத்தவள் பற்களை ஆத்திரமாய் கடித்தாள்.

''அண்ணி.. என்ன இது? உங்களுக்கு வெட்கமாய் இல்லை? எதற்காக இந்தக் கேவலமான ஏற்பாடு?''

அவள் கொதித்துக் கேட்க மாலினி அசராமல் கட கடவெனச் சிரித்தாள்.

''நீ என்ன வேண்டுமானாலும் என்னை சொல்லிக் கொள். ஏசிக் கொள். இந்த சூடு, சொரணை என்பது எல்லாம் என்னை விட்டுப் போய் ரொம்ப நாள் ஆயிற்று. எனக்கு அது பற்றியெல்லாம் கவலையில்லை!'' என்றாள் விட்டேற்றியான சிரிப்புடன்.

வாணிக்கு அவளுடன் பேசப் பேச அதிர்ச்சிதான் ஏற்பட்டது. இருந்தாலும் அவளது முழு மனநிலையை தெரிந்து கொள்ளும் ஆவலுடன் கேள்விகளை அடுக்கினாள்.

''சரி.. நீங்கள் சொல்கிறபடியே அந்தக் கிஷோரை கட்டிக் கொண்டால்... என்ன நடக்கும்?''



''என்ன நடக்கும்?'' என்றாள் மாலினியும் பதிலுக்கு.

''புரியவில்லை? நான் அவர் மனைவி ஆகி விடுவேன். இதில் உங்களுக்கு என்ன லாபம்? சொல்லுங்கள்!''

அதற்கு மாலினி திரும்பவும் விஷமமாய் சிரித்துக் காட்டியவள், ''அட... அசடே.. இது கூடவா உனக்குப் புரியாது? நீ.. பெயருக்குத்தான் அவர் மனைவி. கிஷோருக்கு உண்மையான மனைவியாய் நான் தான் இருப்பேன். அப்படி நடந்து கொள்வேன்...'' என்றாள்.

''ச்சீ...! இப்படிக் கூற உங்களுக்கு வெட்கமாய் இல்லை?''

காறி உமிழாத குறையாய்ப் பார்த்தாள் வாணி.

மீண்டும் நமட்டுச் சிரிப்பு சிரித்தாள் மாலினி.

''நான்தான் எனக்கு இந்த சொரணை எல்லாம் கிடையாது.. என ஏற்கனவே சொன்னனே.. அதற்குள் மறந்து விட்டாயா?'' என்றாள் பதிலடியாய்.

'இவளையெல்லாம் லேசில் திருத்த முடியாது ..' என பற்களைக் கடித்த வாணி தொடர்ந்து, ''இப்படி செய்வதற்குப் பதில் அந்த கிஷோருடன் நீங்கள் எங்காவது கண் காணாத இடத்திற்கு ஓடிவிட வேண்டியதுதானே?'' என்றாள்.

மாலினி பழிப்பாய் உதட்டைச் சுழித்தாள்.

''ஓடலாம் தான்! ஆனால் அப்படி ஓடி.. எங்கோ கண் காணாத இடத்தில்... என்ன செய்வது? எங்களை பிச்சையா எடுக்கச் சொல்கிறாய். கிஷோருக்கு இருக்கிற சொத்துக்களையும், வெளியில் அவருக்கு எவ்வித அவமானமும் ஏற்படாமல் சுகங்களை அனுபவிக்க இது ஒன்று

தானே வழி? அதான்... அதனால்தான் இப்படி யோசித்து ஒரு அருமையான வழியைத் தேர்ந்தெடுத்தோம்...'' என்ற மாலினி சட்டென பொறுமையிழந்தவள் போல்

''சரி... வளவளவென்று பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. என்ன முடிவெடுக்கப் போகிறாய்? கிஷோரை கட்டிக் கொள்ளப் போகிறாயா... அல்லது வீட்டை விட்டு ஓடப் போகிறாயா?'' என்றாள்.

அவளை அதே முறைப்புப் பார்வையுடன் உறுத்துப் பார்த்த வாணி, ''நான் கிஷோரை கட்டிக் கொள்ளச் சம்மதிக்கிறேன்...'' என்றாள் மாலினியே அதிரும் வகையில்.

## 25



**மா**லினியால் வாணி சொன்ன சம்மதத்தை நம்ப முடியவில்லைதான். ஆனால் வாணி உறுதியான குரலில் சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச விரும்பாதவள் போல் எழுந்து சென்றுவிட்டாள்.

அப்படி விறுவிறுவென எழுந்து சென்றவள் சற்றுத் தள்ளிச் சென்றதும் நின்று மாலினி அறியா வண்ணம் அவளது முகக்குறிப்பை உற்றுக் கவனித்தாள். அவள் சொல்லியதைக் கண்டு முதலில் திகைத்தாலும் பிறகு நம்புவது போல் முகத்தை வைத்துக் கொண்டாள் மாலினி.



அது போதும் தனக்கு... என திருப்தியடைந்தவள் போல் நடக்கலானாள் வாணி. அவள் அப்படி மாலினியிடம் சொன்னதன் அர்த்தமும் அதுதான். முதலில் இந்த மாலினியின் வாயை அடைக்க வேண்டும். சரி.. கிஷோரைக் கட்டிக் கொள்ள சம்மதம் என்று சொல்லா விட்டால்.. இன்னமும் ஏதாவது பிளான் போடுவாள். கிஷோர் மூலமாக மீண்டும் ஏதாவது நெருக்கடி கொடுக்க முயற்சி எடுப்பாள். அதையெல்லாம் தவிர்க்கத்தான் வாணி துணிந்து சம்மதம் என்றொரு பொய்யைக் கூறினாள்.

அப்படிச் சொன்னாலாவது சரி... இவள் தன் திட்டத்திற்கு சம்மதித்து விட்டாள் என்ற திருப்தியோடு வேறு எந்த முயற்சியும் செய்யாமல் விட்டு விடுவாள் அல்லவா?

வாணி துணிச்சலாய் அப்படிச் சொல்லியிருந்தாலும் உள்ளூர வேறொரு விஷயம் அவளை கலவரப்படுத்தியது. அண்ணன் வேறு எப்போது கல்யாணம் என்ன தேதியில் வைத்துக் கொள்ளலாம் என பரபரத்துக் கொண்டிருக்கிறான். இதில் மாலினியிடம் வேறு சம்மதத்தை சொல்லிவிட்டதால் அவள் கிஷோர் மூலமாகவும் முடுக்கி விடுவாள்.

ஆக... அவள் விரும்பாத, அவளுக்கு விருப்பமில்லாத அந்த கல்யாண வேலைகள் வேக வேகமாய் நடக்க ஆரம்பித்து விடும்.

அதற்குள் அவள் ஏதாவது செய்தாக வேண்டும். நிலைமை கையை மீறுவதற்குள் அவள் எப்படியாவது தப்பித்தாக வேண்டும்.

அவள் தப்பிப்பதோடு மட்டுமில்லாமல் மாலினியுடனான அண்ணனது குடும்ப வாழ்க்கையிலும் எவ்வித

பாதிப்பும் ஏற்பட்டு விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

என்ன செய்ய?

அவளுக்கு இருக்கும் ஒரே ஆறுதல் உதயசந்திரன் தான்!

இப்போது.. அவன் வேறு அத்தை பெண் மஞ்சரியை கட்டிக் கொள்ளப் போவதாய் சொல்லிவிட்டான்.

மஞ்சரியும் அவன் மீது தீராத காதல் கொண்டது போல் அவன் நினைவாகவே அலைகிறாள்!

இதில் அவனிடம் போய் பழைய விஷயங்களை பேச முடியுமா? முன்பு அவள் மீது காதல் கொண்டதை எடுத்துச் சொல்லி அந்தக் காதலை துளிர்க்கத்தான் செய்ய முடியுமா?

ஒன்றும் தோன்றாதவளாய் இரண்டு நாட்கள் இயந்திரம் போல்தான் வீட்டிலும் அலுவலகத்திலும் நடமாடினாள். யார் என்ன கேட்டாலும் ஒற்றை வார்த்தையாலே பதில் சொல்லி முகம் திருப்பிக் கொண்டாள்.

இரண்டு முறை வலியப் பேச வந்த உதயசந்திரனுக்கும் அதே ஒற்றை வார்த்தை பதில்தான். அவனும் புரியாமல் அவளைப் பார்த்து விழித்தவாறே சென்றுவிட்டான்.

அன்று இரவு படுக்கையில் தூங்காமல் யோசித்துக் கொண்டிருந்தவள் பேசாமல் மாலினி சொல்வது போல் வீட்டை விட்டு எங்காவது ஓட விடலாமா... என்று கூட நினைத்தாள்.

அப்படி ஓடிப்போய் விட்டால்... என்ன நடக்கும் என்று கூட தீவிரமாக சிந்தித்துப் பார்த்தாள்.



அவள் அப்படி ஓடி விட்டால்.. முதலில் கிஷோருடன் கூடிய கல்யாணப் பேச்சு நின்று விடும்.

ஆனால் மாலினி... கிஷோருடனான பழக்கத்தை விடமாட்டாள். தொடர்ந்து திருட்டுத்தனமாய் சந்தித்து பழகத்தான் செய்வாள்.

ஆனால் ஒன்று. டான்ஸ் ஸ்கூல் போய் பயிலும் சந்தர்ப்பம் என வாணி உருவாக்கியது எல்லாம் மாலினிக்கு இல்லாமல் போய் விடும்.

ஷாப்பிங், காய்கறி என ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு சென்று சந்தித்தால்தான் உண்டு.

அப்படி யோசித்துப்பார்த்த வாணி பளீச்சென பிரகாசம் கண்டவள் போல் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அவள் நினைப்பு சரிதானே..?

அவள் இந்த வீட்டில் இருக்கும் பட்சம்தான் மாலினி தனது குறுமுளையை வைத்து ஏதாவது பிளான் செய்து ஆட்டம் போட முடியும். அவள் இல்லாவிட்டால்... அண்ணனுக்கு தெரியாமல் அவள் கிஷோருடன் நெருங்கிப் பழகவோ தொடர்ந்து கூத்தடிக்கவோ முடியாது.

யோசித்தவளுக்கு பரபரவென அந்த யோசனை சரியாகப் பட்டது.

மேலும் இன்னொரு விதத்திலும் அப்படி அவள் ஓடிப்போவது உதவலாம்.

அவள் அப்படி சொல்லாமல் கொள்ளாமல் திடீரென காணாமல் போய்விட்டால்... உதயசந்திரனும் நிச்சயமாய் பெரும் அதிர்ச்சி அடைவான்.

அப்படி அதிர்ச்சியில் அவளை தீவிரமாய் தேட ஆரம்பிப்பான்.

அப்படிப்பட்ட இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மஞ்சரியும் நடக்க இருக்கும் அவனது கல்யாண ஏற்பாடு கூட தள்ளிப்போகலாம். தள்ளிப்போக வாய்ப்பும் இருக்கிறது.

ஒருவேளை அவள் காணாமல் போனது பற்றி அவனுக்கு எவ்வித உறுத்தலும் இல்லாவிட்டால் அதை பொருட்படுத்தாமல் அவன் பாட்டுக்கு கல்யாண வேலைகளைத் தொடங்கி மஞ்சரியை கட்டிக்கொள்ளலாம்.

மேலும் அவனது செய்கை, அவன் நடந்து கொள்ளும் விதம் மூலம் உண்மையில் உதயசந்திரன் மனதில் அவள் இருக்கிறாளா.. இல்லை அவளை தூக்கி எறிந்து விட்டானா... என்பதையும் அவளால் அறிந்து கொள்ள முடியும்!

யோசித்த வாணிக்கு அதிர்ச்சியான ஆச்சரியமாகவும் இருந்தது.

நாம் ஓடிப்போவதால் இவ்வளவு விஷயங்கள் நடந்துவிடுமா?

இருந்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அவளால் பிரச்சினைகளை விட்டு, வீட்டை விட்டு ஓடிப் போயா தீர்க்க முடியும்? என்ன ஒரு முட்டாள்தனம். ஓடிப்போவது எவ்வளவு இழிவான செயல்? நாம் ஓடிப்போனது தெரிந்தால் அம்மாவும் அண்ணனும் எப்படி துடித்துப்போய் விடுவார்கள். அவர்களுக்கு எவ்வளவு கவலை ஏற்பட்டு விடும்?

இன்னொரு மனம் துடித்துக் கேட்டாலும் மற்றொரு மனம் வேகமாய் எழுந்து அவளை அடக்கியது. நன்றாக யோசித்துப் பார்! நீ ஓடினால் கிட்டத்தட்ட எல்லாப்



பிரச்சனைகளும் வேகமெடுக்காமல் அமைதியாகி விடும். அப்படி அமைதியாகும்போது அவைகளே தானாக நீர்த்துப் போகவும் வாய்ப்பிருக்கிறது. அப்படி நீர்த்துப் போவதால் பிரச்சினைகள் தீர்ந்து அவள் குடும்பத்திற்கு நன்மைகள் விளையவும் வாய்ப்புகள் இருக்கிறதே!

யோசிக்க யோசிக்க அந்த எண்ணமே வலுப்பெற்றது வாணிக்கு.

அதற்காக திடீரென திடுதிப்பென ஓடி விட முடியுமா?

மேலும் இரண்டு நாட்கள் அதற்கென ஒதுக்கி யோசித்தாள்.

எல்லாவற்றையும் விட மாலினியின் செயல்பாடு, தான் ஓடிப்போனால் அவள் எவ்விதம் எடுத்துக் கொள்வாள், அதற்கான அவளது பதிலடி எவ்வாறு இருக்கும் என்று கணிப்பதுதான் அவளுக்கு சிரமமாய் இருந்தது.

தான் ஓடிப்போனது தெரிந்து வெகுண்டு அவளும் விபரீதமாய் கிஷோருடன் வீம்புக்காக ஓடிச் சென்று விட்டால்...

அவளது கள்ளத்தனத்தை ஊரறிய பரப்பும்படி நடந்து கொண்டால்...

அவளது முயற்சி முழுவதும் வீணாகிவிடுமே! அவள் அப்படி ஓடிப்போவதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடுமே!

அந்த நினைப்புதான் வாணிக்கு பயத்தைக் கொடுத்தது.

ஆனாலும் மாலினி முன்பு அவளை மிரட்டிய போதே சொல்லியிருந்ததும் ஞாபகத்திற்கு வந்தது. ஒன்று.. கிஷோருடனான கல்யாணத்திற்கு சம்மதித்து விடு.. அல்லது எங்காவது ஓடி விடு.. என்றுதானே!

என்ன உண்மையைச் சொல்லாமல் கல்யாணத்திற்கு சம்மதிப்பது போல் சம்மதித்து அவள் ஓடி விடப்போகிறாள். அவ்வளவுதான்!

அதனால் மனப்பயம் நீங்கி ஓடிப்போவது என்ற திடமான முடிவுக்கு வந்தாள் அவள்.

முடிவு எடுத்ததும் அடுத்த கேள்வி பயங்கரமாய் எழுந்தது.

ஓடிப்போகலாம். ஆனால் எங்கு செல்வது?

ஏதாவது ஆண் போல் கிராமத்திலிருந்து பட்டணத்துக்கு ஓடி கூலி வேலை பார்த்தாவது பிழைப்பது போலவா அவளால் செய்ய முடியும்?

இல்லையே.. மறைவாக கொஞ்சநாள் இருந்தாலும் கௌரமாக இருந்து கௌரவமான வேலையொன்று பார்த்தாக வேண்டுமே!

யோசித்தவள் அதற்குள் விடை கண்டுபிடித்தாள்.

கல்லூரித் தோழி மீனாவின் ஞாபகம் வந்தது.

அவள் பெங்களூரில் லேடீஸ் ஹாஸ்டல் ஒன்றில் தங்கி ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் வேலை பார்ப்பதாய் சொல்லி தனது முகவரியையும் கொடுத்திருந்தாள்.

தனது டைரியில் தேடி அவள் முகவரியைக் கண்டுபிடித்தாள். அதில் தொலைபேசி எண்ணையும் மீனா கொடுத்திருக்க... அன்றே அவளுடன் தொடர்பு கொண்டு தனது நிலைமையை விளக்கி உதவ முடியுமா? என கேட்க... 'கட்டிய சேலையோடு நீ வா.. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்..!' என தைரியம் கொடுத்து விட்டாள் மீனா.



ஆக..எல்லா ஏற்பாடுகளையும் செய்தாயிற்று.

இனி.. கிளம்ப... ஓடிப்போக நல்ல நாள் ஒன்றை குறிக்க வேண்டியதுதான்!

அது...

வாணி முடிவு செய்தாள் அந்த தினத்தையும்.



26

மறுநாள் அலுவலகத்தில் உதயசந்திரன் அவளை ஆவலாய்த் தேடி வந்தான்.

''வாணி.. ஒரு முக்கியமான விஷயம்...'' என்ற போது சுரத்தில்லாமல்தான் நிமிர்ந்தாள் அவள்.

''வரும் வெள்ளிக்கிழமை எனக்கு நிச்சயதார்த்தம் நடக்க இருக்கிறது...''

''நிச்சயதார்த்தமா?''

''ம்ம்... எனக்கும் மஞ்சரிக்குமான கல்யாண நிச்சயதார்த்தம். அதற்குப் பின் நேராக டும் டும்தான்...''

கண்கள் விரிய சந்தோஷமாய்ச் சொன்னான் அவன்.

அவளுக்கு நெற்றிப்பொட்டில் கூர் உளி வைத்து அடிப்பது போல இருந்தது.

பாவிகளா, கடைசியில் நிச்சயதார்த்தம் செய்து தேதி குறிக்கும் அளவுக்கு வந்துவிட்டீர்களா?

மஞ்சரி மீது லயிப்பில்லை என்று சொன்னது... காதல்... காதல்.. என ரோமியோ போல் நம் பின்னால் சுற்றியது... எல்லாம்.. என்ன வேஷமா?

உதயசந்திரனும் நடிக்கத்தான் செய்கிறானா?

யோசனையுடன் அவனையே மை விழிகள் விரிய உற்றுப் பார்த்தாள்.

முன்னால்... நடந்தது ஞாபகமாய் ஓடியது.

ஒருநாள்.. இதே போலத்தானே.. நம்மிடம் பேச வந்து வெட்கமில்லாமல், 'உங்களை எனக்கு பிடித்திருக்கிறது. உங்களை மிகவும் விரும்புகிறேன்..' என்றெல்லாம் டயலாக் அடித்தான்.

அதையெல்லாம் அடியோடு மறந்துவிட்டானே!

இப்போது இன்னொரு பெண்ணுடன் நிச்சயதார்த்தம் நடப்பதை எவ்வளவு சந்தோஷமாய் நம்மிடமே வந்து சொல்கிறான்?

அவள் இப்படி நினைக்கையிலே மற்றொரு குரல் அவளுள் எழுந்து சாட்டையை சுழற்றிற்று.

ஏன்.. சொல்ல மாட்டான்?

முன்பு ஆவலாய் வந்து மனதின் ஆசையை காதலைச் சொன்னதுபோது.. செருப்பை உயர்த்தி மிரட்டினால் காதல் என்னாகும்?

உதயசந்திரன் புத்திசாலி. இது ஒத்துவராது. ச்சீ.. ச்சீ.. இந்தப் பழம் புளிக்கும் என்பது போல் அகன்று விட்டான்.

அவனை சொல்லி குற்றமில்லை.

அன்று அவமதித்ததற்கு கிடைத்த அருமையான பரிசு இது!



யோசித்தவள் தன்னையே நொந்து கொண்டவளாய் சலனமில்லாமல் நிமிர்ந்தாள்.

''முக்கியமான குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமே அழைப்பு. நீ கண்டிப்பாய் வர வேண்டும்...''

''வருகிறேன்..'' என்றாள் ஒற்றை வார்த்தையில். அந்த நிச்சயதார்த்த கண்கொள்ளா காட்சியை இந்த இரண்டு கண்களால் பார்த்து முன்பு செய்த தவறுக்கு பாவ விமோசனம் எடுத்துக் கொண்டால் சரிதான்!

''கண்டிப்பாய் வர வேண்டும்...'' என மீண்டும் வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்தான் அவன்.

''சரி..'' என்றாள் மறுபடியும் சுருக்கமாய்.

''நான் கண்டிப்பாக... என்று சொல்வது எதற்கு தெரியுமா?'' என்றான் பெரும் புதிர் போடுவது போல்.

புரியாமல் பார்த்தாள் அவள்.

''அதற்கு காரணமிருக்கிறது வாணி. நான் இதுநாள் வரை உன்னை என் வீட்டிற்கு அழைத்துச் சென்றதோ குடும்ப உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்ததோ கிடையாது. இவ்வளவு நாள் நாம் நன்றாக பழகியும் நான் இப்படிச் செய்யாதது எனக்கு ஒரு பெரும் குறையாகவே பட்டது.

அதான்.. அதனால்தான்.. அந்தக் குறையை நிச்சயதார்த்தம் வரும் அன்று எல்லோருக்கும் உன்னை அறிமுகப்படுத்தி தீர்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்.''

'அபாரம்.. அபாரம்.. நல்ல யோசனைதான்! வாய் பொக்கையான பிறகு கடலை உருண்டையை கடிக்கச் சொன்ன கதைதான்!' என உள்ளுக்குள் மறுபடி குமைந்து

கொண்டு' அவனை நோக்கி மெலிதான வறட்டுப் புன்னகையை உதிர்த்தாள்.

உதயசந்திரன் பின் அவள் நிலை உணராமலே நிச்சயதார்த்த ஏற்பாடுகள் பற்றி மஞ்சரியும் அவனும் சேர்ந்து எல்லா விஷயங்களையும் தீர்மானம் செய்து, கல்யாண இன்விடேஷன் வரை சேர்ந்தே செலக்ஷன் செய்யப் போவது வரை ஒன்றுவிடாமல் சொன்னான்.

ஒப்புக்கு தலையாட்டியபடி மௌனமாய் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

அப்போதுதான் வாணி அந்த விஷயத்தை கவனித்தாள். உதயசந்திரன் தனது கல்யாண பேச்சு சுவாரஸ்யத்தில் வழக்கமாய் அவளது பிரச்சினை பற்றி, மாலினி விஷயம் பற்றி கேட்பதைக் கூட மறந்துதான் விட்டான்.

ம்ஹூம்.. இப்போதே இப்படி என்றால் இனி அந்த மஞ்சரியுடன் கல்யாணம் ஆகி விட்டால்.. அவளது பிரச்சினையைப் பற்றி என்ன.. அவளையே கூட மறந்து விடுவான்.

சோகமாய் நினைத்தவள் அவன் சொல்வதற்கு எல்லாம் லயிப்பில்லாமல் தலையாட்டிக் கொண்டிருந்தவள் அப்போதுதான் காதில், உப்பு, புளி, மிளகாய், வத்தல், பூண்டு, வெல்லம் என சம்பந்தா சம்பந்தமில்லாமல் வார்த்தைகள் விழுவதை உணர்ந்து திடுக்கிடலோடு நிமிர... அதுவரை சொல்லிக் கொண்டிருந்த உதயசந்திரன் நிறுத்தி விட்டு பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தான்.

சட்! என தனது தலையை தட்டிக் கொண்டு விழித்தாள் அவள். என்ன ஒரு மடத்தனம்! அவன் என்ன சொல்



கிறான் என்பதைக் கூட உணராமல் தலையாட்டிக் கொண்டு இருந்திருக்கிறோமே!

உதயசந்திரனும் விடவில்லை.

சிரிப்பை நிறுத்தியவன், "என்ன வாணி, வேறு ஏதோ உலகத்தில் இருப்பது போல் தெரிகிறது?" என்றான்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..." என்றாள் அவள் அவசரமாக.

"எனக்குத் தெரியும்..." என்றான் அவன் குறுஞ்சிரிப்பு பீடிகையாக.

அவள் புருவம் சுருங்க பார்க்க அவன் விவரித்தான்.

"எனக்கு நடப்பதுபோல் நீயும்... வருங்காலத்தில் உனக்கு நடக்க இருக்கும் நிச்சயதார்த்தங்கள்... கல்யாண பேச்சுகள் பற்றிய இனிமைக் கனவுகளில் நினைத்துப் பார்த்திருப்பாய் அப்படித்தானே?"

எரிகிற காயத்திற்கு உப்பைத் தடவி விட்டு என்ன எரிகிறதா? என கேட்பது போல்தான் வாணிக்கு இருந்தது.

இருந்தாலும் அவன் முன் எதையும் காட்ட விரும்பாதவளாய் மறுபடியும், "ஒன்றுமில்லை.." என்றாள்.

உதயசந்திரனும் அதை விட்டவன் ஞாபகம் வந்தவன் போல் இன்னொரு பேச்சை ஆரம்பித்துவிட்டான்.

"ஆமாம்... கேட்க மறந்து விட்டேன்.. அன்று மஞ்சரி.. உன்னைப் பார்த்தாளாம்மே.. நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தீர்களாமே?"

"மஞ்சரியையா..?"

அவள் திடுக்கிட அவன் ஞாபகப்படுத்தினான்.

''ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஒன்றில்.. அவள் ஷாப்பிங் வந்த போது உன்னை சந்தித்தாளாம். இருவரும் ரெஸ்ட்டாரண்டில் உட்கார்ந்து சாண்ட்விச்சை சாப்பிட்டபடி பேசிக் கொண்டிருந்தீர்களாம்..?''

அவள் உணர்வுக்கு வந்தவளாய் ஆமோதித்து பலமாய் தலையாட்டினாள்.

உதயசந்திரனின் அடுத்த கேள்விதான் அவளை மிகவும் எரிச்சலாக்கியது.

''அன்று... மஞ்சரி.. என்ன கேட்டாள்? காதலைப் பற்றி கேட்டாளாம்?''

''காதலா..?''

''அதான் வாணி.. நான் முன்பு கிறுக்குத்தனமாய் உன் பின்னால் ரோமியோ போல் சுற்றி.. காதல் கீதல் என அலைந்து கொண்டிருந்தேனே.. அதைத்தான் சொல் கிறேன்..?'' என அவன் சர்வ சாதாரணமாய்ச் சொல்ல இடி விழுந்தாற் போல்தான் உணர்ந்தாள் அவள்.

என்ன ஒரு கொடுமையடா! அவளை முன்பு காதலித்தது... கிறுக்குத்தனமாம்! அப்படியே முடிவு பண்ணி விட்டானா அவன்? அதையும் அவன் வாயாலே வேறு சொல்கிறானே!

கோபமாய் உணர்ந்தவள் முகம் சிவக்க பற்களை அழுந்தக் கடித்துக் கொண்டாள். அவனோ அதை லேசில் விடுவதாய் இல்லை.

''அது பற்றி.. நீ சொல்லியது பற்றி கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்...'' என்றான்.

அவன் கேட்கும் ஆவலைக்கண்டு மேலும் எரிச்சலானவள், ''அதைத் தான் மஞ்சரி ஒன்றுவிடாமல் உங்களிடம் சொல்லியிருப்பாளே..'' என்றாள்.



''ம்ம்.. சொன்னாள்.. ஆனால்.. நீ.. அந்த.. அந்த விஷயத்தை மட்டும் சொல்லிவிடவில்லையே..?'' என்றான்.

''எந்த விஷயம்?''

''செருப்படி... விஷயம்..'' அழுத்தந்திருந்தமாய் அவன் உச்சரித்தபோது அவள் முகம் கன்றிவிட்டது.

அவன் எதையும் மறக்கவில்லை. எல்லாவற்றையும் ஞாபகமாய் வைத்திருக்கிறான். ஞாபகம் மட்டும்தானா..? அவள் மீது அளவு கடந்த கோபத்தையும் அல்லவா வைத்திருப்பான். பின் அவனுக்கு எப்படி இனிமேல் அவள் மீது இரக்கமோ காதலோ வரக்கூடும்?

''அதைச் சொல்லவில்லை... நான்..'' என்றாள் குரல் கம்ம.

'அப்பாடா..!' என்பது போல் நிம்மதிப் பெருமூச்சு விட்டான் அவன்.

அட.. இந்த விஷயம் அந்த மஞ்சரிக்கு தெரியப் படக்கூடாது... என இவ்வளவு அக்கறை கொள்கிறானே.. என உள்ளுக்குள் குமைந்தவள் அதற்கு மேலும் அங்கு இருக்கப் பிடிக்காமல் எழுந்து கொண்டாள்.

அவனிடம் விடைபெற்று மெல்ல நடை போட்டு வருத்தம் பொங்க நடந்தாள்.

அவள் அப்படி சோகமாய் செல்வதை ஒரு குறுஞ் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் உதயசந்திரன்.

* * *

வாணி அன்று முழுவதும் தூங்காதவளாய் கண்கள் சிவக்குமளவுக்கு சிந்தித்தாள்.

வேறு வழியில்லை...

மாலினி கிடுக்கிப்பிடி போடாத குறையாய் ஒரு வார காலம் அவளுக்கு கெடு வைத்திருக்கிறாள்.

அதைவிட அவள் நெஞ்சையே உலுக்குவது போல் உதயசந்திரனின் கல்யாண நிச்சயதார்த்தம் வேறு.

அவள் எதையெல்லாம் தடுக்க முயன்றாளோ அதெல்லாம் அவள் கண் முன்னே நடக்க ஆரம்பித்துவிட்டது.

உதயசந்திரனுக்கு.. தனக்கும் அவன் மீது ஈடுபாடு காதல் இருக்கிறது என்று புரிய வைத்தாலாவது அவன் யோசிக்கக் கூடும். மஞ்சரியுடன் நடக்க இருக்கும் நிச்சய தார்த்த நிகழ்ச்சியைக் கூட அவன் தடுத்து விட வாய்ப்பிருக்கிறது.

ஆனால்...

எதையும் அவனிடம் சொல்லிவிட முடியவில்லையே.. சொன்னாலும் அவன் புரிந்து கொள்ளும் நிலையைத் தாண்டி விட்டானே!

என்ன செய்வது..?

வேறு வழி...? பெங்களூருக்கு சொல்லாமல் கொள்ளாமல் ஓட வேண்டியதுதான்! தோழி சொன்ன லேடீஸ் ஹாஸ்டலில் தங்கி அவள் ஏற்பாடு செய்திருக்கும் வேலையில் சேர்ந்த ஓரிரு மாதங்கள்.. இருக்க வேண்டியதுதான்!

என்னதான் நடக்கிறது என்று பார்க்க வேண்டியதுதான்!

மாலினி அந்த இடைவேளையில் புத்தி வந்து திருந்தினாள் சரி..



உதயசந்திரனும் திடீரென அவள் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ சென்றுவிட்டாள் என மிரண்டு கல்யாண நிச்சயதார்த்தத்தை நிறுத்தினாலும் சரி...

எது நடந்தாலும் சரி..

வேறு வழியில்லை...

இப்படியொரு விஷப்பரீட்சை துணிந்து செய்து பார்த்துதான் ஆக வேண்டும்.

என்ன அண்ணனும் அம்மாவும் ரொம்பவும் கவலையாய் துடித்துதான் போவார்கள்.

அவர்களை சமாதானப்படுத்துவது எளிதல்ல.. எல்லாவற்றையும், ஆண்டவன் மீது பாரத்தை போட்டவளாய் மறுநாளே யாரிடமும் சொல்லாமல் துணிந்து பெங்களூர் கிளம்பினாள் வாணி.



## 27

ஒரு மாதம் கழிந்திருந்தது.

அன்று வழக்கம் போல் தனது ஹாஸ்டலில் விழித்து வெளிவந்தவளுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி!

வாணியால் நடப்பது ஒன்றையும் நம்ப முடியவில்லை!

எல்லாமே கண் இமைக்கும் நேரத்தில் மின்னல் போல் நடந்து கொண்டிருந்தது.

உதயசந்திரன் திடீரென பெங்களூருக்கு அவள் தங்கியிருக்கும் லேடீஸ் ஹாஸ்டலுக்கே இரவு நேரத்தில் வந்து நின்றது.. ''இங்கு வந்து ஒளிந்து கொண்டால் பிரச்சினைகள் எல்லாம் சரியாகி விடுமா? உடனே பெட்டியை எடுத்துக் கொண்டு என்னுடன் வா!'' என ஆணையிட்டது. அவளும் பேந்தப் பேந்த விழித்தபடி கிளம்பியது.. எல்லாம் கனவு போல்.. இருந்து நடந்தது.

அவள் வழி நெடுக என்ன..? ''என்னாயிற்று?'' என்று கேட்டும், ''பேசாமல் வா எல்லாமே நாளை விடியற் காலையில் உனக்கு தெரிந்து விடும். அதுவரை சஸ் பென்ஸ்!'' எனக் கூறி மர்மமாய் சிரித்ததும்.. பெங்களூரில் இருந்து சென்னை வரும் வரை காரில் அவள் விஷயம் புரியாமல் தவித்த தவிப்பு...

மறுநாள் அதிகாலை கார் சென்னையில் நுழைந்து நகரின் பிரபலமான அந்த திருமண மஹால் முன் நின்றது. வாழைத் தோரணங்களும் இன்னிசை ஒலிகளும் அதிர வைத்துக் கொண்டிருக்க வாணி புரியாமல் திரும்பி உதயசந்திரனைப் பார்த்தாள்.

''என்ன.. இது... திருமண மண்டபத்திற்கு கூட்டி வந்திருக்கிறீர்கள்? இங்கு யாருக்கோ.. திருமணம் நடக்க இருக்கிறது? யாருக்கு?''

அவள் பரபரத்து கேட்க குறுஞ்சிரிப்புடன் உதயசந் திரன் மண்டப வாசலில் வைக்கப்பட்டிருந்த பெரிய டிஜிட்டல் போர்டை காட்டினான். ''முதலில் அதைப் பார்...!'' என்றான்.

அவன் சொன்னதும் தலையைத் திருப்பி அதைப் பார்த்தவள் அப்படியே ஷாக் அடித்தவள் போல் அதிர்ச்சி யானாள்.



''உதயசந்திரன் வெட்ஸ் வாணி..'' என அழகாய் ஆங்கில எழுத்துக்களில் மின்னிக் கொண்டிருந்தது வாசகம்.

அவளுக்கு ஒரு கணம் ஏற்பட்ட அதிர்ச்சியில் பேச்சே வரவில்லை.

''என்ன..என்ன.. என்ன.. இது? எனக்கு ஒன்றும் புரியவில்லை..!''என்றாள் திக்தித் திணறி.

உதயசந்திரன் சிரித்தபடி அவள் தோள்களை தட்டினான்.

''இதற்கே.. அதிர்ச்சியானால்.. எப்படி? இன்னும் நிறைய அதிர்ச்சிகள் உனக்கு காத்துக் கொண்டிருக்கிறது. முதலில் கீழே இறங்கு!'' என்றான்.

காரை விட்டு மெல்ல இறங்கினாள் அவள்.

இறங்கியவளுக்கு அவன் சொன்னது போல் பெரும் அதிர்ச்சிதான்!

இதோ.. மண்டப வாசலில் இருந்து அவளை நோக்கி வருவது.. சாட்சாத் மாலினிதான்! பக்கத்தில் சுகேசன். மறுபுறம் அவளது தாயார் கற்பகம்!

எல்லோரும் இன்முகத்துடன் புன்னகை ததும்ப ஆவலாய் அவளை நோக்கி வந்தபடி...

அதிலும் மாலினி அண்ணன் சுகேசனுடன் சிரித்தபடி அன்பான மனைவி போல் வந்து கொண்டு...

என்ன.. நடக்கிறது.. இங்கு..?

அவள் நம்ப முடியாத அதிர்ச்சியில் குழம்பி எல் லோரையும் மாறி மாறி பார்க்க...

யாரும் அவளை பேசவிடவில்லை.

''முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. வா! சீக்கிரம் உனக்கு அலங்காரம் பண்ணியாக வேண்டும்...'' என பரபரத்து அவளை இழுத்துப் போனார்கள்.

யாரும் அவள் கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை.

''என் அன்பு மைத்துனிக்கு நான்தான் அலங்காரம் செய்வேன்..'' என முன்னின்று அலங்கார ஒப்பனைகள் அவ்வளவையும் செய்ய ஆரம்பித்தாள் மாலினி.

வாணி அவள் கையைப் பிடித்து, ''அண்ணி என்ன நடந்தது? ஏன் இந்த மாற்றம்?'' என நச்சரித்து கேட்ட போதும் மாலினி எவ்வித பதிலும் சொல்லாமல் புன்ன கையையே பெரிதாய் காட்டினாள். ''முதலில் கல்யாணம் அதற்குப் பின்தான் எல்லாம்..'' என கறாராய் சொல்லி விட்டாள்.

ஆயிற்று. அடுத்த ஒரு மணி நேரத்தில் மணப்பெண் அலங்காரம் முடிந்து மணவறையில் அவள் அமர்ந்த போது பக்கத்தில் பட்டு வேஷ்டி பட்டுச் சட்டை சகிதம் கம்பீரமாய் வந்து அமர்ந்தான் உதயசந்திரன்.

குறுஞ்சிரிப்புடன் அவளைப் பார்த்தவனை அவளும் நம்ப முடியாமல் பார்த்தாள்.

''நடப்பது கனவா.. நிஜமா? மஞ்சரி.. உங்கள் அத்தை பெண் மஞ்சரி..'' என அவள் கிசுகிசுப்பாய் உதயசந்திர னிடம் கேட்க அவன் அதே சிரிப்புடன் மணமேடை முன் சிரிப்பு பொங்க நிற்கும் மஞ்சரியைக் காட்டினான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை! மஞ்சரி தன் அத்தனை பற்களையும் காட்டி அவளை நோக்கி சிரிக் கிறாள். சிரித்தபடி நிற்கிறாள்! இவளுடன் கல்யாண..



நிச்சயதார்த்தம்.. அது.. இது வென சொல்லியது எல்லாம் என்னாயிற்று?

அவள் கேள்விக்கெல்லாம் விடை கிடைக்கவில்லை. யாரும் பதில் சொல்லவில்லை. கொஞ்ச நேரத்தில் மந்திரங்கள் ஒலிக்க தாலியை உதயசந்திரன் அவள் கழுத்தில் கட்டி மூன்று முடிச்சு போட்ட போதுதான் 'நடப்பதெல்லாம்... நிஜம்..' என அவளுக்கு திடமாய்ப் புரிந்தது.

* * *

அன்று இரவு -

பால் சொம்புடன் நுழைந்தவளை காணாததைக் கண்டதுபோல் கண்டு இறுக கட்டியணைத்தான் உதய சந்திரன்.

''ஐயோ..! நடப்பது ஒன்றும் புரியவில்லை. எனக்கு தலையே வெடித்துவிடும் போல் இருக்கிறது. இப்போ தாவது சொல்லுங்கள் என்ன நடந்தது?''

ஆவலாய் பரபரத்தவளை தன் மடியில் அமர்த்தி கைகளால் சிறையிட்டவன் மெல்ல புதிர் போல் விடு விக்க ஆரம்பித்தான்.

''முதலில் இதைப் பார் உனக்குப் புரியும்...'' என முந்தைய வார தினப் பேப்பர் ஒன்றை எடுத்துக்கொடுத் தான்.

வாணி பு யாமல் அதைப் பிரித்தாள்.

அதில் தலைப்புச் செய்தியாக அது -

'பிரபல ரவுடி கிஷோர் கைது. தலைமறைவாய் இருந்தவனை போலீஸ் பிடித்தனர். குண்டர் சட்டத்தில்

சிறையில் அடைக்கப்பட்டான்...' என்ற செய்தியுடன் கிஷோரின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படமும் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

பார்த்த வாணி அரண்டுதான் போய் விட்டாள்.

"என்ன கிஷோர்.. இவ்வளவு பெரிய ரவுடியா?"

அவள் திகைப்பில் விக்கித்து கேட்க.. உதயசந்திரன் நிதானமாய் விளக்க ஆரம்பித்தான்.

"நீ நினைப்பது சரிதான். கிஷோர்.. பல கொலை கொள்ளை வழக்குகளில் போலீஸார் தேடிக் கொண் டிருந்த பிரபல ரவுடிதான். பல ஊர்களுக்கு சென்று தாடி வைத்து உருவத்தை மாற்றி வெவ்வேறு பெயர்களில் ஏமாற்று வேலைகள் செய்திருக்கிறான். கொலை விவ காரங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறான். பெண்களை மிரட்டி பணம் சம்பாதித்திருக்கிறான். நகைகளை கொள்ளை அடித்திருக்கிறான். எல்லாவற்றையும் வெவ்வேறு ஊர் களில் செய்து விட்டு... ஒன்றும் தெரியாத அப்பாவி போல் தாடியை எடுத்து முகச் சாயலை மாற்றி இங்கு டான்ஸ் ஸ்கூல் ஒன்றைத் தொடங்கி அதே போல் மோசடி செய்யத் திட்டமிட்டிருக்கிறான். நான் செய்த ஒரு வேலை யால் போலீஸிடம் வகையாய் மாட்டிக்கொண்டான்..."

உதயசந்திரன் சொல்ல வாணி திடுக்கிட்டவளாகவே பார்த்தாள்.

"என்ன.. நீங்கள் செய்த வேலையால்தான் போலீ ஸிடம் அவன் மாட்டினானா?"என்றாள்.

உதயசந்திரன் பலமாய் தலையாட்டியவன், "ஆம் வாணி நான் முன்பே சொன்னேனே... எனக்கு காவல்துறை யில் பெரிய போலீஸ் அதிகாரி ஒருவர் நண்பர் என்று...



அவரிடம் சில மாதங்களுக்கு முன் தற்செயலாக கிஷோர் பற்றி அவனால் உனக்கு ஏற்படும் பிரச்சனைகள் பற்றி யெல்லாம் கூறியிருந்தேன். அவரும் இது பற்றி ரகசிய மாக விசாரணை செய்வதாய் கூறினார்.

அப்படி அவர் கிஷோர் பற்றி விசாரிக்கும்போதுதான் அவன் போலீஸ் தேடிக் கொண்டிருக்கும் பழைய குற்ற வாளி என்கிற விஷயமே போலீஸுக்குப் புரிந்தது. பின் என்ன..? உடனே நடவடிக்கை எடுத்து இரவோடு இரவாய் அவனை கைது செய்து விட்டார்கள்.

மறுநாள் எல்லா பேப்பர்களிலும் கிஷோர் பற்றிய செய்தி புகைப்படத்துடன் வந்து விட்டது. பார்த்த உன் அண்ணி மாலினியும் அப்படியே அரண்டு விட்டாள். கிஷோர்.. இவ்வளவு கொடியவனா? இவ்வளவு பெரிய ரவுடியா? என திகைத்து விட்டாள்.

அந்த நிலையில்தான் நான் ஒரு நாள் உன் அண் ணியைத் தேடிப்போய் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு பேசினேன்.."

"என்ன மாலினியை தேடிப்போய் பேசினீர்களா?"

ஆச்சரியத்துடன் வாணி கேட்க பலமாய் தலையசைத் தான் உதயசந்திரன்.

"நான் போலீஸ் மூலம் கிஷோர் பற்றி கேள்விப்பட்ட சில தகவல்களை சொல்லத்தான் உன் அண்ணி மாலினி யிடம் போனேன். ஏற்கனவே பேப்பர் செய்தியைப் பார்த்து அரண்டிருந்தவள் நான் சொன்ன விஷயங்களைக் கேட்டு, "கிஷோர் இவ்வளவு மோசமானவனா?" என வெல வெலத்துப் போய் விட்டாள். அதன் பிறகு தான் உன் அண்ணிக்கு பொட்டிலடித்தாற்போல் புத்தி வந்தது. தன்

தவறுகளை உணர்ந்து திருந்தவும் ஆரம்பித்த அதிசயமும் நடந்தது..''

''அப்படியா.. மாலினி திருந்தி விட்டார்களா? இது நிஜம்தானா?''

''நிஜம்தான்..! எனக்கும் மனம் மாறியது கண்டு திகைப்புதான்.. ஆனால் மாலினி உனக்குச் செய்த கொடுமையான விஷயங்கள் பற்றியெல்லாம் சொல்லி... உன்னிடம் மன்னிப்பு கேட்க துடித்தபோது எனக்கு எல்லாம் புரிந்து விட்டது...''

இம்முறை வாணியும் தலையசைத்தாள்.

''அதனால்தான் காலையில் மணவறையில் நான் தனியே இருக்கும்போது என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கி, "என்னை மன்னித்து விடு. இனி உன் அண்ணனுடன் நன்றாக குடும்பம் நடத்தி நல்ல மனைவி என்ற பெயரெடுப்பேன்.." என்று சொன்னதன் காரணம் இப்போது புரிகிறது..'' என்றாள்.

''புரிந்துவிட்டதல்லவா..? அப்புறம் வேறென்ன..?'' என்றபடி பொறுக்க முடியாதவன் போல் அவளை வேகமாய் இறுக்கியவன் அவள் செவ்விழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

குங்குமமாய்ச் சிவந்த முகத்துடன் அவனை அவசரமாய் விலக்கியவள், ''அதுசரி... மஞ்சரி விஷயம் என்னாயிற்று. இருவருக்கும் பேசி... கல்யாண நிச்சயதார்த்தம் வரை போய்.. என்னாயிற்று?'' என்றாள் அவள் அவலாய்.

அவன் கடகடவென சிரித்தான்.

''அது... பெரிய காமெடிக் கதை..'' என்றான்.

''காமெடிக் கதையா?''



''ஆமாம்.. அந்தக் கதையைப் பற்றி நீ புரிந்து கொள்ள வேண்டும் என்றால்... இன்னொரு கதையை நான் சொல்லியாக வேண்டும். அப்போதுதான் உன்னால் புரிந்து கொள்ள முடியும்..''

''இன்னொரு கதையா?''

''ஆம்... ஒரு மணல் மூட்டை ஒன்று லாரியில் இருந்து தற்செயலாய் கீழே ரோட்டில் விழுந்து கேட்பாறின்றி கிடந்ததாம். அது மணல் மூட்டை என்று தெரிந்த பிறகு யாரும் அதை எடுக்க வர வில்லையாம். ஆனால் திடீரென.. ஒன்றிரண்டு பேர் அந்த மணல் மூட்டையில் ஏதாவது இரசாயனப் பொருட்கள் கலந்திருக்கும். நல்ல விலைக்குப் போகும் என பேச்சைக் கிளப்ப.. ஆள் ஆளுக்கு அந்த மணல் மூட்டை எனக்குத்தான் சொந்தம் என போட்டி போட ஆரம்பித்து விட்டார்களாம். இப்போது புரிகிறதா..?'' என உதயசந்திரன் நிறுத்த... இம்முறை வாணி அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

''புரிகிறது.. புரிகிறது..'' என குறுஞ்சிரிப்புடன் தலை யாட்ட ஆரம்பித்தாள்.

''என்ன புரிகிறது?''

''அந்த மணல் மூட்டை நீங்கள்தானே?'' என்றாள் மீண்டும் சிரிப்பை அடக்க முடியாதவளாய்.

''அப்பாடா..! அந்த மணல் மூட்டை நான்தான் என இப்போதாவது இந்த புளி மூட்டைக்கு புரிந்ததா?'' என்றான் அவனும் சிரித்தபடி.

''என்ன நான் புளி மூட்டையா?'' என்றாள் அவள் போலிக் கோபமாய்.

''பின் என்ன..? வலிய வந்து.. என்.. இதயத்தை கைகளில் தாங்கிப் பிடித்தபடி ஏற்றுக்கொள்... என

காதலைச் சொன்னால் அந்த இதயத்தின் அருமை புரியாமல் செருப்பை தூக்கி காட்டினாய். ஆனால் மஞ்சரி வந்து என் இதயத்தை விரும்பி அபகரிக்கப் போவதாய் பயங்காட்டியதும்... நீ.. துடிக்க ஆரம்பித்துவிட்டாய் அப்படித்தானே?''

அவன் அப்பட்டமாய் உண்மையைச் சொன்னதும் அப்படியே வெட்கமும், அவமானமும் பொங்கியவளாய் ஒரு சில நிமிடங்கள் அப்படியே தன் முகத்தை கரங்களால் மூடிக் கொண்டாள்.

''அட... செய்வதெல்லாம் செய்துவிட்டு வெட்கத்தைப் பாரேன்..'' என அவளது பிஞ்சுக்கரங்களை மெல்ல விலக்கியவன் சிவந்த அவள் கன்னங்களில் மறுபடியும் தனது இதழ்களைப் பதித்தான்.

சிலிர்ப்படைந்தவளாய் அவனை அப்படியே இறுக்கியவள், ''அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். உங்களை ரொம்பவும் நோகடித்து விட்டேன்..'' என கெஞ்சலாய் சொன்னவள் மறுநிமிடம் ஞாபகம் வந்தவளாய்,

''அப்படியானால்.. மஞ்சரி.. உங்களை விரும்பியது... கல்யாண நிச்சயதார்த்தம் வரை போனது எல்லாம் நாடகமா?'' என்றாள்.

''நாடகமே தான்..!'' என்றவன் அதே சிரிப்புடன், ''உன் மனதில் காயாய் பூத்திருந்த காதலை கனிய வைக்க தடியடி போல் போட்ட நாடகம்..'' என்றதும், ''பின் மஞ்சரி.. எப்படி?'' என இழுத்தாள் வாணி.

''மஞ்சரி.. அவளது சொந்த ஊரான திருச்சியில் இன்னொருவரை காதலித்துக் கொண்டுதான் இருக்கிறாள். எனக்காக... இங்கு விடுமுறைக்கு வந்த இடத்தில் இப்படி



நடிக்க ஒப்புக் கொண்டு விட்டாள்...'' என்றவன், ''அதை விடு.. முக்கியமான விஷயம் ஒன்று உன்னிடம் இருக்கிறதே... அதைச் சொல்...'' என்றான்.

''முக்கியமான விஷயமா?''

''புரியவில்லை...? முதலில்... என் மேல் உனக்கு வராத காதல் எப்படி வந்தது? அதன் பின் மாலினி உன்னை மிரட்டிய விஷயங்களை எல்லாம் என்னிடம் நீ சொல்லாமல் இருந்ததன் காரணம்.. எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லு... அதற்கு முன்...'' என்றபடி அவளது குவிந்த இடையை ஆசையாய் பிடித்து வளைத்து தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

செல்லச் சிணுங்கலுடன் அதை அனுமதித்தவள் தொடர்ந்து, ''ஓ.. அதுவா..? சொல்கிறேன், முதலில் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் மீது வராத காதல் ஒன்றும் இல்லை. முதலிலே வந்த உருவான காதல் தான். ஆனால் முதலில் நீங்கள் காதலைச் சொன்னபோது என்னால் சரியான முடிவெடுக்க முடியவில்லை. வீட்டில் மாலினியின் அன்புச் சூழ்நிலையில் சிக்கி வேறு எது பற்றியும் உணராத நிலையில் இருந்தேன். அதனாலே மறுத்தேன். ஆனாலும் என்னையறியாமல் உள்ளுக்குள் ஒரு உறுத்தல் தொடர்ந்து கொண்டேதான் இருந்தது. அந்த உறுத்தல்தான். மஞ்சரி நுழைந்ததும் அவளுக்கும் உங்களுக்குமான காதலை அறிந்ததும் நிஜமான உண்மையான காதலாய் என் மனதில் குமிழிட்டது. பின் மெல்ல மெல்ல செடியாக மரமாக... வளர ஆரம்பித்து விட்டது...''

''அப்படியா..? நிஜமாகவா..? என்னால் நம்பவே முடியவில்லையே...?''

நம்ப முடியாமல் அதிசயித்தவனை மை விழிகள் விரியப் பார்த்தவள் சட்டென முகம் சிவக்க அவன்

கன்னத்தில் தன் பட்டான இதழ்களை ஒற்றினாள். "இப்போது நம்புகிறீர்களா?" என்றாள்.

"மம்.. நம்புகிறேன்... நம்புகிறேன்..." என்றான் அவன் சிலிர்ப்பான சிரிப்புடன்.

அவள் தொடர்ந்தாள்.

"மாலினி மிரட்டிய விஷயத்தை உங்களிடம் சொல்லத் தான் ஒவ்வொரு முறையும் நினைத்து வந்தேன். ஆனால்... மஞ்சரியின் காதல்.. நிச்சயதார்த்தம்... என ஜெட் வேகத்தில் வேலைகள் நடப்பதைப் பார்த்து.. தலையே மூழ்கும் நிலை வரும்போது... வாலைப் பற்றி கவலைப் படுவானேன் என்ற யோசனையில்.. முதலில் எனக்குள் உங்கள் மீது பூக்க ஆரம்பித்த இனிமையான காதலைப் பற்றி தெரிவிக்க சந்தர்ப்பம் தேடினேன். ஆனால் நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் கடைசி வரை வராததால்... மாற்று வழி ஒன்றைத் தேடினேன்..."

அவள் நிறுத்த குறும்புப் புன்னகையை உதிர விட்டான் அவன்.

"அந்த மாற்று வழி.. பெங்களூருக்கு தோழியைத் தேடி ஓடிப் போவதா?"

அதற்கு சங்கடமாய் தலையாட்டினாள் அவள்.

"வேறு வழி எதுவும் தெரியவில்லை. மாலினியின் நெருக்கடியில் இருந்து தப்பிக்க அது ஒன்றுதான் வழியாய்த் தோன்றியது. மேலும்.. நீங்கள் சொன்ன மஞ்சரியுடனான கல்யாண நிச்சயதார்த்தம் நிற்க வாய்ப்பு ஏற்படும் என்ற நப்பாசையும் கூட..."

அவன் இம்முறை அவள் தலையில் செல்லமாய் குட்டினான்.



"அந்த நிச்சயதார்த்த ஏற்பாடு நாங்கள் போட்ட நாடகம் தானே? அப்படி பயங்காட்டினாலாவது நீ உன் மனதை திறந்து உன்னுடைய காதலைச் சொல்ல மாட்டாயா என்று தான். ஆனால் நீ கடைசி வரை கல்லுளி மங்கினியாய் இருந்து காதலை தெரிவிக்காமல் ஓடி விட்டாயே...!"

அவன் சிரிக்க அவள் மருகத்தான் செய்தாள்.

"நீங்கள் சொல்வது சரிதான். கல்லுளி மங்கினி போல் ஓடத்தான் செய்தேன். ஆனால் பெங்களூரில் தினம்... தினம்.. நான் பட்ட பாடு... ஒவ்வொரு நிமிடமும்... நம்மைக் காணாமல் என்ன நடக்குமோ என்று துடித்த துடிப்பு.. அந்த தவிப்பு..."

அவள் சொல்வதை ஆமோதிப்பவனாய் பலத்த தலையசைப்புடன் சீரியஸானான் அவன்.

"உண்மைதான்... நீ காணாமல் போனது தெரிந்ததும் உன் வீட்டில் ஒரே ரகளைதான்! எனக்கும் ஒரே குழப்பம் தான். நான் உடனே உன் வீடு தேடி வந்து உன் அண் [illegible] சந்தித்துப் பேசிப் பார்த்தேன். இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. பின் உன் டயரியை இருவரும் குடைந்து அந்த பெங்களூர் தோழி முகவரியை தொலைபேசியைக் கண்டு பிடித்தோம். பின் அந்தத் தோழியிடம் உனக்குத் தெரியாமல் பேச... அவளது ஏற்பாட்டின்படி நீ லேடீஸ் ஹாஸ்டலில் தங்கி வேலை ஒன்றுக்கு செல்லும் விஷயமும் தெரிந்தது. உன் அண்ணன் உடன் பெங்களூர் செல்ல... ஆயத்தமாக.. நான் தான் அவரைத் தடுத்து சமாதானப் படுத்தினேன். வாணி, இப்படிச் சென்றதற்கு எதாவது காரணம் இருக்கும். கொஞ்ச நாள் பொறுங்கள்.. என்றேன். உன் அண்ணனும் என் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து பொறுமை காட்டினார். என் திட்டப்படி கிஷோர் போலீஸில் மாட்டியதும் மீண்டும் உன் அண்ணனிடம்

பேசி படங்களில் வரும் க்ளைமாக்ஸ் போல் எனக்கும் உனக்குமான கல்யாண ஏற்பாடுகளைத் துணிந்து பண்ணினேன்...''

அவன் சொல்ல.. காது மடல்கள் அதிர உற்சாகமானவள், ''துணிந்து கல்யாண ஏற்பாடுகளை செய்தீர்களே... என் மீது அவ்வளவு நம்பிக்கையா?'' என்றாள் விழிகள் படபடக்கும் ஆச்சரியத்தோடு.

''இருக்காதா... பின்னே... உன்னை விரட்டி விரட்டி காதலித்த எனக்கு அது... உன் இதயம் படுகிற பாடு... புரியாதா?''

''அவன் சொன்னதற்கு, 'ஐயோ! ஐயோ!..' என போலியாய் பதறினாள் அவள்.

''என்ன.. என்னாயிற்று?'' என்றான் உதயசந்திரனும் திடுக்கிட்டவனாய்.

''நீங்கள்.. சொன்னீர்களே... என் இதயம் அது... அது... இப்போது... இங்கு... என்னிடம் இல்லை...'' என்றாள் தன் நெஞ்சைக் காட்டியபடி குழைவுக் குரலில்.

அவள் சொல்வதை உணர்ந்து பெரிதாய் சிரித்தவன்,

''பதற வேண்டாம் கண்மணி. அது எங்கும் போகவில்லை. அது... இங்கு... இவ்விடம் பத்திரமாக இருக்கிறது...'' என தன் நெஞ்சை பதிலுக்கு காட்டினான்.

அப்படியே அவனது பரந்த நெஞ்சில் கிறங்கிய மைவிழிகளுடன் மலர்ப்படுக்கையில் படுப்பது போல் சாய்ந்து கொண்டாள் அவள். அவள் அழகுத் திருமேனியை மேலும் கரங்களால் தன்னோடு சேர்த்து இறுக்கியவன் குனிந்து அவள் நெற்றியில் மென்மையாய் முத்தமிடவும் செய்தான். அந்த சிலிர்ப்பில் தன்னை மறந்து இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள் வாணி.